பதிவு எண் 2041 | மகாத்மா காந்தி வாழ்க. | தனிப்பிரதி விலை அணா ஒன்று



வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3	ஈரோடு, பிரபவ-ஷு சித்திரை-மீ 26உ (8—5—27) ஞாயிற்றுக்கிழமை.	மலர் 2.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:— "Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

சிரார்த்தம் எவ்வாறு செய்வது?

பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு எழுதுவது

கோவையில திருவாளர் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களின் தலைமையில் கூடிய நாயுடு மகா நாட்டில் பார்ப்பன புரோகிதரை நீக்கி நம்மவரே சுயப் புரோகிதம் செய்து கொள்ளல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றதை அனைவரும் அறிவர். அம் மகா நாட்டின் பின்னர் அன்பர்பலர் "சிரார்த்தம்எவ்வாறு செய்வது" எனவினவுகின்றனர். அம் மகாநாட்டில்சுயப் புரோகிதப்பிரேரேபணையைப்பிரேரேபணைசெய்தவன்யானேயாகையால்,அவ் வினாவிற்குவிடையிறுப்பதும்என் கடமையாகின்றது. ஆகையால் சிரார்த்தத்தின் வரலாற்றைப்பற்றிச்சில வாக்கியங்கள் எழுதுவோம்.

சிரார்த்தம் என்பது வடமொழி. சிரத்தையோடு செய்யப்பெறுவதற்குச் சிரார்த்தம் என்று பெயர். இதனைத் தமிழர் "தென்புலத்தார்வழிபாடு" என்பர். இத்தலைப்பில் முன்னொரு முறை "குடி அரசு" பத்திரிகையில் என்னால் எழுதப்பெற்ற கட்டுரையை அன்பர் அறிந்திருப்பாராகையினால் இன்னும் விரித்துரைக்கவேண்டுவதில்லை. எனினும் சிரார்த்தம் என்னும் தென்புலத்தார் வழிபாடு இற்றைக்கு 2000 ஆண்டுகட்கு முன்னரே சங்க காலத்திலே தமிழ்நாட்டில் வழக்கில் வந்திருந்தது. ஆனால் சிரார்த்தம் இவ்விவ்வாறு செய்தல் வேண்டுமெனத் தமிழ் நூல்களில் விரித்துரைக்கவில்லை, ஆரியரின் ஸ்மிருதி முதலிய நூல்களில் வேண்டியவாறு விளம்பப் பெற்றுள்ளன. தமிழ் நூல்களில் தென்புலத்தார்க்குக் கடனாற்றல் என்ற சொல்லளவில் இருக்கின்றதேயன்றி அதைப்பற்றிய வேறு வார்த்தைகள் ஒன்றேனும் இன்று, அத்தென்புலத்தார்க்கு ஆற்றும் கடனும் நாமே செய்து கொள்வதா? அன்றி பார்ப்பனப்புரோகிதரைக்கொண்டு செய்து கொள்வதா என்னும் வினாவிற்கே தமிழ் நூற்களில் இடமில்லை. இல்வாழ்வான் அறத்தைக் குறிக்குமிடத்து ஆசிரியர் திருவள்ளுவனார்.

"தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்
தாளென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என அறங் கூறினர்.

இல்வாழ்வான் என்பான், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்தினையும் பாதுகாத்தல் வேண்டும். தமிழ் நூற்களில் சிரார்த்தம் செய்தற்குச் சிறந்த மேற்கோளாக உள்ளது இத்திருக்குறளொன்றேயாம். இத்திருக்குறளை உற்று ஆராய்ந்து நோக்கினால், சிரார்த்தம் பார்ப்பனப் புரோகிதராலேயே செய்யப்படவேண்டுமென்பதற்குஎட்டுணையும்ஆதாரமில்லை. ஆரியரின் ஸ்மிருதி புராணங்களையே மெய்யென்று நம்பியுள்ள நம்மனோரிற் சிலர், இத்திருக்குறளுக்குப்பார்ப்பனப்புரோகிதராலேயே சிரார்த்தம் செய்தல் வேண்டுமென வலிந்து பொருள் கொள்வர். அன்னாரை ஒன்று வினவுவோம்: தென்புலத்தார் வழிபாடு தான் பார்ப்பனப்புரோகிதர் இருந்து செய்யவேண்டியதாயிற்றே தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் இவர்களையும் பார்ப்பனரே பாதுகாக்கவேண்டுமோ? இன்னோர் உரைப்படி அத்திருக்குறளுக்கு உரை கூறின் தன்னைப்பாதுகாப்பதற்கும் பார்ப்பனன் அன்றோ வேண்டியிருக்கின்றான்? இங்ஙனம் பொருள் கூறுவதினும் அறியாமை உண்டோ? உண்டோ? தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளல்வேண்டுமென எங்ஙனம் திருவள்ளுவனார் திண்ணமாகச் செப்புகின்றனரோ, அங்ஙனமே சிரார்த்தம் செய்வது தானே செய்து கொள்ளல் வேண்டுமென்பதே திருவள்ளுவனாரின் திருவுள்ளம்.

வடமொழி ஸ்மிருதி நூல்களில் சிரார்த்த வரலாறு பற்பல வேறுபாட்டுடன் எழுதப் பெற்றுள்ளன. அவையனைத்தும் ஆராய இன்று அவகாசம் இன்று சுருங்கக்கூறின் அவை "அன்ன சிரார்த்தம்' 'ஆம சிரார்த்தம்" என இருவகைப்படும். அன்ன சிரார்த்தமாவது:— அன்று சிராத்தத்திற்காக வரவழைத்தவர்களுக்கு உணவு கொடுப்பது, ஆம சிரார்த்தமாவது அரிசி பருப்பு முதலியன கொடுப்பது. முதன் முதல் சிரார்த்தம் செய்யவேண்டுமென்னும் வழக்கம் ஆரியருக்குள் தொடங்கிய காலத்தில் அன்ன சிரார்த்தமே நடைபெற்று வந்தது. அன்ன சிரார்த்தமே செய்யவேண்டு மென்றும், அதனைச் செய்யும் முறையும், ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் மிக விரிவாகப் புகழ்ந்து எழுதப்பட்டிருக்கின்றது. அப்பழங்காலத்தில் எவ்வெவ்வருணத்தாரும் அன்ன சிரார்த்தமே செய்து வந்தனர். ஆனால், அவ்வன்னசிரார்த்தம் நடத்துவதற்குப் பார்ப்பனப் புரோகிதரை அழைத்துச் செய்விப்பது வழக்கமாயிருந்தது. அப்பார்ப்பனப் புரோகிதர் சிரார்த்தம் செய்வதற்காக ஒவ்வொரு வருணத்தார் இல்லங்கட்கு வகினும் அவ்வவ்வில்லங்களில் உணவு அருந்தி வந்தனர். ஆகையால், அப்பொழுது அச்சிரார்த்தம் அன்னசிரார்த்தம் என்று பெயர் பெற்றது. பார்ப்பனப் புரோகிதர் சிரார்த்தம் செய்தார், இல்லங்களிலேயே உண்டனர், என்பதற்குப் பல பல ஆதாரங்கள் ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் இருக்கின்றன. அன்ன சிரார்த்தமே பண்டைக்கால ஆரியரின் சிரார்த்தம், தமிழரின் தென்புலத்தார் வழிபாடு,

பார்ப்பனர் பிறப்பால் உயர்ந்தவரென்னும் இறுமாப்பு தலைக்கேறிய நாளே அன்னசிரார்த்தம் அழியத்தொடங்கிற்று; ஆமசிரார்த்தம் அரும்பிற்று, ஆகையால் பார்ப்பனப் புரோகிதன் நம்மவர் இல்லங்கட்கு சிரார்த்த தினத்தன்று வந்து நம் பெரியார்களைத் தாழ்ந்து வணங்கி "வள்ளல்களே! நீங்கள் எங்கட்கு உணவுகொடுப்பதினும் உணவிற்குரிய பதார்த்தங்களைக்கொடுத்து உதவுங்கள்" என வேண்டிக்கொண்டனன். சாதி வேற்றுமையச்சற்றும்அறியாதநமது பண்டைத் தமிழ் மக்கள் பார்ப்பனரின் நயவஞ்சகம்தெரியாதவராய், அன்னார் வேண்டியவாறே உணவுப் பதார்த்தங்கள் உதவிவந்தனர். இன்னும் பார்ப்பனப் புரோகிதன் ஒருநாளில் பல இடங்களில் சிரார்த்தம் செய்யவேண்டி வருங்கால் அவ்வவ்விடங்களில் உண்பதற்கும் அப்புரோகிதனால் முடியவில்லை. இதுகாலை, நம்மில்லங்களில் தாசரிகளை அழைத்து உணவளிக்கும் வழக்கம் உண்டு சிற்சில இடங்களில் தாசிரிகள் கிடைப்பது அருமையால் ஒரே தாசரியே ஓர் வீட்டில் உண்டுவிட்டுப் பல வீடுகளில் சோறு மூட்டை கட்டிக் கொண்டு போகும் வழக்கம் இன்றும் காண்கின்றோமன்றோ? அத்தாசரிகளைப்போன்றே பார்ப்பனப் புரோகிதனும் ஓரிடத்திலுண்டு மற்றைய இடங்களில் சிரார்த்த அன்னத்தைப் பெண்டு பிள்ளைகட்காக மூட்டை கட்டி வீட்டிற்குக்கொண்டுபோயிருக்கவேண்டும் ஆனால், இப்பொழுதோ உணவிற்குப்பதிலாக உணவிற்காம் பதார்த்தங்களை மூட்டை மூட்டையாகக்கொண்டுபோகின்றனன்; வண்டியில் கொண்டு போகின்றனன். அன்ன சிரார்த்தத்தின் அறிகுறியே ஆமசிரார்த்தம் என்பதை அன்பர் அகத்தில் கொள்ளவேண்டும். சிரார்த்த காலத்தில் நமது உணவைப் பார்ப்பனப் புரோகிதன் அன்ன சிரார்த்தத்தின் வழியாக உண்பது நேர்மையான முறை; ஆமசிரார்த்தத்தின் வழியாக உண்பது கோணலான முறை; ஏமாற்றும் முறை, நாம் வேண்டுவது நேர்மை நேர்மை.

ஆமசிரார்த்தம் செய்ய ஆரம்பித்த பொழுதே சிரார்த்த மந்திரங்களும் சிருஷ்டிக்கப் பட்டன. இல்லத்தில் உள்ளதை உள்ளவாறு உண்டுபோன சிரார்த்தங்களுக்கு மந்திரம் வேண்டுவதில்லை. தந்திரம்வேண்டுவதில்லை. அன்ன சிரார்த்தத்திற்கு வேண்டுவது அன்பொன்றே, உவப்பொன்றே. ஆமசிராத்தத்திற்கே மந்திரங்கள் வேண்டியிருந்தன. ஏனெனில் சிரார்த்தம் செய்வோன் கொடுக்கும் பதார்த்தங்களின் பெயர்களே மந்திரங்களாகும். ஆகையால் பார்ப்பனப் புரோகிதனுக்குவேண்டும் பொருள்களின் பெயர்களைத் தும் கோர்வை செய்து வடமொழிச் சுலோகங்கள் செய்து கொண்டான். அப்பதார்த்தங்கள் ஒவ்வொன்றையும் பெருமையாகப் புகழ்ந்து வரிசையாக மனப்பாடம் செய்துகொண்டான். உதாரணமாக ஒன்று காண்மின். ஓர் மேட்டு உப்புத் தண்ணீரைச் சிரார்த்தத்திற்காக வைத்து அதனை கங்கா தீர்த்தம், காவிரிதீர்த்தம் எனப் புகழ்ந்து பாடுகின்றான், வெறும் அட்சதைகளையும், தருப்பையையும் வைத்து "சொர்ன புஷ்பம் சமர்ப்பயாமி" என்கின்றான். ஆனால், பணம் கேட்கும் சமயத்திலோ வெறும் சொர்ணபுஷ்பம் சொல்லாமலே உண்மையான சொர்ன புஷ்பம் கேட்கின்றான். இங்ஙனமே சிரார்த்தத்திற்காக வைத்த பதார்த்தங்கள் சிலவேனும் அவற்றைப் பலவாகப் புனைந்து கூறுகின்றான். இங்ஙனம் புனைந்து புகலும் வடமொழிச் சொற்களே மந்திரங்களாகும். இங்ஙனம் பொருளற்ற உயிரற்ற வடமொழிச் சொற்களைக்கண்டு நம்மவர் மயங்கிவிடுகின்றனர். இதனால் பார்பனப்புரோகிதனுக்குவேண்டியதைக் கொடுத்துவிட்டு ஏமாந்து போகின்றோம். அம்ம! ஏமாற்றமா? நாம் கொடுக்காத பொருள்களை மந்திரங்களில் புனைந்து சொல்லி ஏமாற்றினதும் அன்றி, அப்பொருள்களை நாம் கொடுத்ததாகவும் அவற்றை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதாகவும் இருகால்களிலும் விழுந்து கும்பிடச் சொல்லுகின்றான். புரோகிதன் பெற்றுக் கொண்டதாகச் சொன்னதும் பொய்; நாம் கொடுத்ததும் பொய். என்னே! பொய்ம்மை பொய்மை. பொய்யும் புகன்று காலிலும் விழுந்தோமே; அன்ன சிரார்த்தம் செய்வோமேயானால் இங்ஙனம் பொய்மந்திரங்கள் சொல்வதற்கும். பொய்க்கும்பிடு போடுவதற்கும் ஏமாற்றுவதற்கும் இடம் இல்லை.

சிரார்த்தம் என்பது காலம் சென்ற பெற்றோரின் இறந்த நாட் கொண்டாட்டம். சிரத்தையோடு அந்நாளில் சுற்றத்தார் நண்பருடன் உண்டு உவந்து மகிழ்தல் வேண்டும். தமது தெய்வங்களை நோக்கிப்பாடல் வேண்டும். அதனை முறைப்படுத்திச் செய்ய வேண்டுமென்னில்சிரார்த்தம் செய்யும் வீட்டார் ஓரிடத்தைத் தூய்மை செய்து அங்கு தங்கள் வழிபடு கடவுளின் வடிவத்தையோ பிறவற்றையோ எழுந்தருளச் செய்து அவ்வடிவத்தின் முன்னர். தம் வீட்டில் சமைத்துள்ள எல்லா உணவுகளையும் ஓர் இலையில் பரிமாறி வைத்து அக்கடவுளின் திருவடிவத்திற்குத் தூபம் தீபம் நைவேத்தியம் சமர்ப்பித்து சிரார்த்தகர்த்தா அக்கடவுளை முன்னிட்டுத் தம்பெற்றோர்களைப் பிரார்த்தித்து வேண்டிக்கொள்வதேயாகும். இன்னும் தங்கள் சமயத்திற்கேற்ப திருவாய்மொழி திருவாசகம் தேவாரம் முதலிய பிரபந்தங்களை உற்றாருடன் சேவித்தல் மிகவும் நலமாகும். இன்னும் பல இடங்களில் பிரபந்தம் பாராயணம் செய்து சிரார்த்தம் முடிக்கின்றனர். இவ்வாறான சிரார்த்தம் ஒன்று பல்லடம் தாலூகா அலுப்பபட்டி மெத்தை வீட்டு அப்ப நாயக்கர் வீட்டில் நடந்தேறியது. இங்ஙனம் செய்த அன்னசிரார்த்தத்தை உற்றாருடன் உண்டு மகிழ்வதினும் பார்ப்பனப் புரோகிதச் சிரார்த்தம் உயர்ந்ததாகுமோ? நமது குற்றங் குறைகளை நமது மொழியில் சொல்லி வேண்டிக் கொள்வதை

இதன் தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க

அவியல்.

(கைவல்லிய சாமியார் எழுதுவது)

எல்லாவிதக் காய், கிழங்குகளை நறுக்கி ஒன்றாய்ச்சேர்த்து வேகவைத்துத் தேங்காயும், பச்சைமிளகாயும் அறைத்துக் கலக்கிச் சிறிது எண்ணையூற்றி புளித்த மோரோ; தயிரோ விட்டுப் பக்குவம் செய்யும் பதார்த்தத்திற்கு அவியல் என்று பெயர். அவியல் உண்பதற்கு உருசியாயிருப்பது மன்னியில் பல காய், கிழங்கு வகைகளிலுள்ள உப்புச்சத்துக்களும், பிராணபி என்னும் ஜீவசத்தும் அதிகமுள்ளதால் பதார்த்தங்களில் அவியல் விசேடமாகக் கருதப்படுகிறது. அதுபோலவே இவ்வியாசத்தில் சாத்திரமும், உலகநடையும் அவசியமுமான அநேக விஷயங்கள் கலந்து வருவதால், மனதுக்கு நிச்சயமும், சந்தோஷமும் உண்டாகுமென நினைத்து, இதற்கு அவியல் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. வியாசம் என்னும் வார்த்தைக்குப் பகுத்தறிவென்னும் அர்த்தமிருப்பதால் படிக்கும் ஒவ்வொருவரும் இதன் உண்மையைப் பகுத்துப்பார்க்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சந்திரன்:- ஒரு நாள் காலையில் திண்ணையிலுட்கார்ந்துகொண்டிருக்கையில், வசந்தனென்னும் நண்பன் வருவதைக் கண்டு "நண்பா, வருக! இவ்வாசனத்திலமருவாய்" என்னும் உபசாரணையைக் கேட்ட வசந்தன் முகமலர்ச்சியடைந்து "நண்பா, நீ, எப்பொழுதும் சுறுசுறுப்போடு கூடின உற்சாகத்தை அடைந்தவனாக இருக்கிறாய். அதிகாலையிலெழுந்து குளிர்ந்த ஜலத்திற் குளித்துச் சுத்தமான வெள்ளைக் கதருடுத்தி உன் ஓய்வு நேரங்களைப் படிப்பதில் செலவு செய்கிறாய். அதனாலா உன் முகம் பரிசுத்தமான தேஜஸோடு விளங்குகிறது!"

சந்திரன்:—இருக்கலாம். நீ சொன்ன நான்கும் ஒருவனுக்கு அமையுமானால் அவன் இவ்வுலகத்தில் ஒரு பாக்கியசாலியே.

வசந்தன்:—அப்படியா! ஆனால் அந்நான்கைப் பற்றின குணங்களை எனக்கு விபரமாய்ச் சொல்லுவாயர்க.

சந்திரன்:—வைகறைத் துயிலெழுந்து, தாஞ் செய்யும் தொழிலைப்பற்றியநன்மை தீமைகளைப் பகுத்துப்பார்த்துத் தான் செய்யுங் காரியங்களை நிச்சயம் செய்யவேண்டுமென்பது முன்னோர்கள் விதித்த விதி. அதிகாலையில் மனம் சுத்தமாயிருப்பதற்கும், புத்தி தெளிவாயிருப்பதற்கும் ஏற்ற காலம். குடியானவன் நேரத்திலெழுந்தால் அவன் குடித்தனஞ் செவ்வையாய் நடக்கும். வியாபாரி நேரத்திலெழுந்தால் வரவு செலவைச் சரியாய்த் தீர்மானம் பண்ணவும், நிலவரத்தை நிச்சயம் பண்ணவுமாகும், வக்கீல் நேரத்திலெழுந்தால் கோர்ட்டுக்குப் போவதற்குள் கேசுகளைப் படிப்பதற்கும் வாங்கின பணத்திற்குக் கட்சிக்காரனுக்கு உழைக்கவுமாகும். நியாயாதிபதி நேரத்தில் எழுந்தால் ஜட்ஜ்மெண்ட் அவசரமில்லாமலெழுதவும், ஞாபகங்களைக் கண்டு பிடிக்கவுமாகும். மற்றெல்லா உத்தியோகஸ்தர்களும் நேரத்திலெழுந்தால் தப்பான 'டைரி' எழுத அநேகமாக ஏதுவிருக்காது. வைத்தியன் நேரத்திலெழுந்தால் நோயாளியின் துன்பந்தீரும். வைத்தியன் வீடுகாக்கும் சலிப்பும் குறையும். படிப்பவன் அதிகாலையிலெழுந்தால் படிப்புச் சரியாய் மனதில் பதியும். கூலியாள் அதிகாலையிலெழுந்தால் எஜமான் வேலையைச் சரியாய்ச் செய்வான். யோகிகளுக்கும், பக்திமான்களுக்கும் கடவுள் தியானத்திற்கும் ஏற்ற நேரம். "சூரியனைக் கண்டு எந்த பிராமணன் எழுந்திருக்கிறானோ அந்தப் பிராமணன் பிதிர்கர்மங்களிலும், தேவகர்மங்களிலும் நீக்கப்பட்டு பிராமணத்தன்மையை விட்டுவிடுகிறான்" என்று பாரசர் சொல்லியிருக்கிறார். எவன் அதிகாலையில் எழுந்திருக்கவில்லையோ அவன் தொழிலில் நஷ்டமடைவது மன்னியில் பழிச்சொல்லுக்குமாளாகிறான். நேரத்திலொருவன் எழுந்திருப்பது அவன் ஒழுக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுவதுமல்லாமல் அதைப் பெருமையாகவும் பேசுகின்றோம். நேரத்திலெழுந்திருக்காத குழந்தைகளை எழுப்புகையில் "மூதேவி வந்து விடுவாள்" என்றே எழுப்புகிறோம். எவ்வளவு உழைப்பாளியாகவிருந்தாலும் அதிகாலையிலெழுந்திருக்க வேண்டும். மின்சார சக்தியைக் கண்டுபிடித்த "எடிஷனை" விட யார் உழைப்பாளி? அவர் கூட ஒருமணிநேரத்திற்கு மேல் தூங்குவதில்லையாம். பேர்போன சக்கிரவர்த்தி 'நெப்போலியன்' குதிரையின் பேரிலும், பீரங்கியின்பேரிலும் தூங்கினதாகக் கேள்விப்படுகிறோம். ஆராய்ச்சிக்காரர்களும் உலகங்களைக் கண்டுபிடித்த தொழிலாளிகளும், அதிகப் படிப்பாளிகளும் அதிகநேரம் தூங்கினதில்லை. 'அதிகம் தூங்குவதால் ஆயுள் குறைந்து விடுகிறது' என்பது இப்பொழுது கண்டுபிடித்த ஆராய்ச்சியிலொன்று. ஆரோக்கியமாக இருப்பதற்கு அயர்ந்த நித்திரை சிறிதளவு போதும். புரண்டு, திரும்பித் திரும்பிப் படுத்து, தலையணையைச் சொருகிக்கொடுத்து அநேக மனோராஜ்யம்செய்து தூங்குவதாக நினைத்துக்கொள்ளுகிறவர்கள் தங்கள் அறிவின் சக்தியைக்கெடுத்தும், தேகத்தைச் சோம்பலுக்குமாளாக்குகிறார்கள். அதிகாலையில் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பதினால் பித்த உஷ்ணம் சமப்பட்டு, மூளை குளிர்ச்சி அடைந்து தேகத்தை ஆரோக்கியப் படுத்துவதுமல்லாமல் புத்திக்கும் தெளிவையுண்டு பண்ணுகிறது. குளிர்ந்த தண்ணியில் குளிப்பவர்களான மலையாளத்தவர்களும், சோழதேசத்தவர்களும் கல்வியில் முதலாக நிற்கிறார்கள். நம் ஔவையாரும் ஆத்திச் சூடியில் "சனிநீராடு" என்றார்கள். சனிக்கின்ற அதாவது தானே உண்டாகி வருகின்ற நீரில் ஸ்நானஞ் செய் என்பது இதன் பொருள். ஸ்நானத்திற்கு மிகத்தகுந்ததாயும் தேகத்திற்கு நல்ல வலிவு கொடுக்கத் தகுந்ததாயும் உள்ளது. தானே உற்பவித்து வரும் நீர் புருஷர்களுக்கு எண்ணை தேய்த்து முழுகுவதற்குச் சனியும் புதனுமே சிறந்த நாள்களாக மதிக்கப்பட்டு வந்து விட்டது. இந்தப் பொருளிலேயேதான் ஆத்திச் சூடி வெண்பா அமைக்கப்பெற்று மற்றைய நாள்களில் எண்ணை தேய்த்துக் கொள்வது சிறந்ததல்ல என்பதை தோஷாரோபண மூலமாக ஒரு வெண்பாவில்காட்டப்பட்டு இதை அனுசரித்து 'சனி நீராடு' என்பதற்குச் சனிக்கிழமை எண்ணை தேய்த்து ஸ்நானம் செய் என்னும் பொருள் கொள்ளப்படுகிறது. அதி காலையில் குளிர்ந்த தண்ணியில் ஸ்நானம் செய்தால் அநேக வியாதி தீருகிறதென்பது, இப்பொழுது வழங்கிவரும் மேநாட்டு வைத்திய முறைகளில் ஒன்றல்லவா! இதை யெல்லாம் நம் பெரியவர்கள் அநேக காலத்திற்கு முன்னே தெரிந்து பிராதஸ்நானம் விதித்தார்கள். கதிர் கட்டுவதிலுள்ள நன்மை உனக்கே அநுபோகம். அநுவசியமான இங்கிலீஷ் சாமான்கள் வாங்க நீ கடைக்குப்போவதில் வெட்கப்படுவது எனக்கும தெரியும். கதிராடையில் பரிசுத்தத் தன்மை இருக்கிறதென்பதும் உண்மை. முன் இங்கிலீஷ் யூனிபாரம் போட்டிருந்தவனே விஷயம் தெரிந்தவனென்றும் ஆடையணிபவருள் சிறந்தவனென்றும் கருதப்பட்டது. கதிர் கட்டினவனே ராஜ்ய விவகாரங்களில் ஈடுபட்டு ராஜ்யப் படிப்பு தெரிந்தவனாக எண்ணப்படுகிறான். தன் தேசத்து ஜனங்களுக்கு சிறிது உபகாரம் செய்தவனாகவுமாகிறான். உடையைப்பற்றின ஆசையும் தரித்திரமும் தீர்ந்து கதிராடை திருப்தியைக் கொடுக்கிறது. படிப்பைப்பற்றி நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை. சந்தோஷத்திற்குப்பிரதானம்கல்விவிஷயங்களிலுள்ள நுட்பங்களைத் தெரிந்த மனதிற்குச் சக்தி அதிகம். அந்தக் கல்வியைப் படித்ததினால் பார்ப்பான் உயர்ந்தான். பார்ப்பான் என்பதற்கே வேதத்தைப் படித்தவனென்று அர்த்தம். இந்து ராஜாக்கள்; மகமதியராஜாக்கள்; வெள்ளைக்காரர்கள் இவர்கள் காலத்திலெல்லாம் எல்லா ஜாதியை விட பார்ப்பானே உயர்ந்திருந்தான். காரணம் கல்வியே "தர்பையில் ஆண்டோம். இனியும் ஆளுவோம்" என்று அவன் சொல்லுவதற்கும் காரணம் மற்றவர்களின் முட்டாள்தன மட்டுமல்ல. பாப்பானின் கல்வியின் புத்தியே, பராசன்; வியாசன்; வசிஷ்டன்; அகத்தியன்; காசிபன்; முதலிய ரிஷிகளைவிட பிறவியில் தாழ்ந்தவர்களில்லை. தாழ்ந்த ஜாதி என்று மதிக்கப்படும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அப்படி இருந்தும் இவர்களைவிட உயர்ந்தவர்களில்லை என்று கருதி அவர்களையே தங்கள் உற்பத்திக்கு மூல புருஷர்களென்று சொல்லிக் கொள்வதெல்லாம் கல்வியின் உயர்வைக் கொண்டல்லவா? சங்கராச்சாரி விதவையின் பிள்ளை என்று மலையாளத்தில் கர்ணம்பரையாகச் சொல்லப்படுகிறது என்றாலும், சங்கரின் சீர் திருத்தமும் பாஷியமும் முக்கியமாக மலையாளத்தில் வியாபித்திருக்கிறது. என் அவருடைய படிப்பின்சக்தி மதப்பற்றுதலிலும் இலக்கிய இலக்கணப்பிடிவாதத்திலும் புத்தியைச் செலுத்தி ஆராய்ச்சியை விட்டு விடுவது விசேடப்படிப்பாகாது. தமிழ் பண்டிதர்களுக்கும் சமஸ்கிருத பண்டிதர்களுக்கும் பள்ளிமாணவர்கள் பயப்படுவதில்லை. இவர்ளுக்கு அவர்களது ஆராய்ச்சியிலாத படிப்பு பிடிப்பதில்லை.

வசந்தன்:—என் அன்பனே! நீ படிக்கும் "குடி அரசு" பத்திரிகை பிராமணரையே குற்றஞ் சொல்லுவதும்; தெய்வ பக்தி, கோவில் யாத்திரை, கர்மங்கள், முதலியவைகளைக் குறைகூறிக் கொண்டிருக்கிறதென்கிறார்களே?

சந்திரன்:-குடி அரசை நீ ஊன்றிப்படித்திருந்தால் இந்தச்சங்கை உனக்குத்தோண ஞாயமில்லை. குடி அரசைப்படித்துக் கருத்தைத்தெரியாதவர்களும், தாங்கள் ஏமாற்றி பிழைக்கும் பிழைப்பு போய்விடுமே என்கிற கவலையுடையவர்களும், பார்ப்பானுடைய சமயோஜிதப் பேச்சில்ஆலோசனையில்லாமல் ஆழ்ந்தவர்களும், எதற்கும் பயந்து கோழையாகப் போனவர்களும், எதிரிகளும், "குடி அரசை"க் குறை கூறுவார்கள். நல்லொழுக்கத்திலும்; ஆத்ம ஞானத்திலும்; தெய்வபக்தியிலும்; சமத்துவத்திலும்: ஒப்புயர் வற்ற பிராமணனைக் குடி அரசு ஒருக்காலும் தூஷித்தது கிடையாது. நம் மதக்கோட்பாட்டிலுள்ள ஸர்வ பிரயத்தனமும், தாம்பரிபூரணமாவதற்கும்,தெய்வத்தன்மை உள்ளவராவதற்கும்கடவுளை அடைவதற்கும் காண்பதற்கும் செய்யப்படும் விதிகளை "குடி அரசு" உணர்ந்திருக்கிறது. தீர்த்தமாவது பரிசுத்தப் பொருள்களும் புண்ணிய புருஷர்களும் நிறைந்த விடமென்பதில் "குடிஅரசு" தப்புச் சொல்லுவதில்லை. தெய்வ ஆராதனை "குடிஅரசு"க்குக் குற்றமல்ல. ஆனால் வேதத்திலில்லாததும் யுக்திக்கு ஒத்து வாராததுமானகிரியைகளைஏற்படுத்தி சாஸ்திரமென்றும், கடவுள் கற்பனை யென்றும், சாஸ்திரத்தில் சொன்னதென்றும், இவர்கள் ஜனங்களைஏமாற்ற ஏற்படுத்திக்கொண்டது, வேறொன்று. செய்வதுமற்றொன்று, இந்த விதமாகக்கிரிகைகளைக் கடவுளின் பேராலும் சாஸ்திரத்தின் பேராலும் செய்து பணம் பறிக்கும் பார்ப்பானையும், தாங்கள் சீமைக்குப் போகலாம. பூணூலை எடுத்து விடலாம். பிராண்டி குடிக்கலாம. மாம்சம் சாப்பிடலாம். உத்தியோகத்திற்கு அன்னியனுக்கு எவ்வளவு அடிமையாக வேண்டுமோ! அத்தனையுஞ் செய்யலாம். அதில் தோஷமில்லை. பார்ப்பான் பார்ப்பானே. மற்றவர்கள் வீதியில் போகக்கூடாது. கோவிலை எட்டிப்பார்க்கக் கூடாது. உத்தியோகமடையக்கூடாது. என்பதற்கு தோஷம் கற்பிக்கவும் அதற்கு உடந்தையாகஇருக்கும்பார்ப்பானையும் "குடி அரசு"குற்றம் சொல்லுகிறது. (தொடரும்.)

யாத்திரைத் தத்துவம்.

(க. வா. வெங்கிடாசலம் பிள்ளை எழுதுவது.)

ஹிந்துக்கள், மதம் சமூகம் என்னும் பேரால் வருடந்தோறும் அனாவசியமாய்ச் செலவு செய்து கொண்டு, புரோகிதர் பட்டர், ஆச்சாரியர் என்னும் பிரிவினர்களால் அடிமைப்பட்டுப்போய்க் கொண்டிருப்பது, உலகறிந்த விஷயம். திதி என்னும் பேரால் நாம் எவ்வளவு தூரம் புரோகிதர்களுக்கு அடிமைப்பட்டு மூட வழக்கங்களை விருத்தி செய்து கொண்டு வருகிறோம் என்பதைக் "குடி அரசி"ன் மூலமாய் இதற்கு முன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். இன்று யாத்திரை யென்னும் பேரால் எவ்வளவு தூரம் நாம் பட்டர்களுக்கும் சோதிடர்களுக்கும் அடிமைப்பட்டிருக்கிறோமென்பதை எதோ எனக்குத் தெரிந்த அளவில் இதன் மூலமாய் எழுத முன் வந்தேன்.

என்னைப்பற்றி.

ஒரு கட்டுரை எழுதும் போது எதாவது ஒரு தூண்டுதலின் பேரில் தான் எழுதுவது வழக்கம். தற்காலத்தில் அநேகர் பொறாமையின் பேரிலும், கிட்டாத்தன்மையின் பேரிலும், ஒரு வஸ்து அல்லது கொள்கை இதுகளைக் குறைகூறுவது இயல்பாக இருக்கிறது. ஆகையாலென்னைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லுவது குற்றமாகாதென்று எண்ணுகிறேன். எங்கள் தாதை மூதாதைகள் திதி கொடுப்பதில் மிகவும் நம்பிக்கையும் பக்தியுமுடையவர்கள் நானும் அதைப்பின்பற்றி சுமார் 20 வருடகாலம் கிரமமாகத் திதி செய்தவன் தான். ஆனால் நம்ம பிதுர்களுக்கு வேறே ஒரு சம்மந்தமில்லாதவர்களைக்கொண்டு அநுபவங்களுக்கு ஒத்துக் கொள்ளாதபடி இம்மாதிரி செய்வது அறியாமை யென்னும் பல பெரியபடிப்பாளிகளிடம் உபதேசத்தின் பேரிலும் கடந்த 10 வருடங்களாக புரோகிதர்களைக்கொண்டுதிதி செய்வதை நிறுத்தி விட்டு, அன்று எனது சக்திக்குத்தக்கப்படி சில ஏழைகளுக்கும் உறவினருக்கும் பிதுர்க்களின் பேரால் போஜனங்கள்செய்வித்துக்கொண்டுவருகிறேன். நிற்க, முழுமுதற் கடவுள் அனுக்கிரகத்தாலும் பெரியோர்கள் ஆசிர்வாதத்தாலும், அரிய நண்பர் சிலரிடம் கூட்டுறவினாலும், இமய முதல் கன்னியாகுமரிவரையிலும் இலங்கையிலும் உள்ள முக்கிய ஸ்தலங்களையும், பிரதானகாரங்களையும், தரிசித்திருக்கிறேன். கங்கை, யமுனை முதலிய புண்ய நதிகள் என்று சொல்லப்பட்ட, ஒன்பது நதிகளிலும் வேறு பல நதிகளிலும் தீர்த்தங்களிலும் வங்காளம், அரபி, இந்து முதலிய சமுத்திரங்களிலும் தீர்த்த மாடியும் வந்திருக்கிறேன். ஆகையால் "கிட்டாதாயின் வெட்டென மற" என்ற படி அநுபவிக்காமையில் ஏற்பட்ட அழுக்காறு காரணமாக எழுதவில்லை.

யாத்திரை அவசியம்.

உத்தமமான மகான்களாலும் மகரிஷிகளாலும் பெரியோர்களாலும் நிர்மாணிக்கப்பட்ட எந்த ஸ்தாபனமும், தெய்வதன்மையும் பரிசுத்தமும் பொருந்தியிருந்தது. அதுபோல அநேக தீர்த்தங்களும், புண்ணியநதிகளும், சிரேஷ்ட புருஷர்களாலும் ஞானிகளாலும் நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதால் அவைகள் முற்றிலும் மேட்டிமையென்று சொல்லிவிடக்கூடாது. அது போலவே மகான்களும் அடியார்களும் ஆழ்வார்திகளும் எற்படுத்திய ஆலயங்களும் அவர்களால் பாமாலை சூட்டப்பெற்ற திவ்ய திருப்பதிகளும் மகத்துவம் கொண்டவைகளாகவே யிருக்கும். ஆகையால் அந்த க்ஷேத்திரங்களுக்குப் போவதும், அப்புண்ய தீர்த்தங்கள் ஆடுவதும் நமக்குப் பரிசுத்தத்தைக் கொடுக்குமென்பதில் தடையில்லை. தவிர மனிதனுடைய உடற்கூறுக்கும் உலகத்தின் அமைப்புக்கும் பொருத்தமுண்டு. ஒவ்வொருவருடமும் வாதபித்த சிலேத்ம காலங்கள் மாறி மாறி வரும் அது போல மனிதனுக்கும் வாத பித்த சிலேத்ம சம்மந்தங்கள் மாறுதலடையும் அந்த சந்திகளில் சில சுகக் கெடுதிகள் கூட உண்டாகும் அதினாலேயே அண்டத்திலுள்ளது பிண்டத்தில் என்றார்கள் பேறும் அதற்கு வயித்தியனைக்கொண்டு சிகிச்சை செய்வதைவிட இடம் விட்டு இடமாறுதலால் சீக்கிரம் குணமடைகிறது. அநேக தீராத வியாதிகள் கூட இடமாறுதலால் ஏற்பட்ட புதிய காற்று புதிய தோற்றம் இதுகளால் சௌக்கியமடைகிறது. அதோடு கங்கை முதலிய ஜீவ நதிகள் மலையினுச்சியிலிருந்து உற்பத்தியாகி ஆயிரக்கணக்கான மைல்களுடன் மணற் பாங்கில் விழுந்து வருவதாலும் அநேக மூலிகைகள் சஞ்சீவிகள் இதுகளின் சத்துக்களையும் அடித்துக்கொண்டு வருவதால் அந்த ஜலங்களுக்கு அநேக நற்குணங்களும் அநேக வியாதிகளைத் தடுக்கக்கூடிய குணங்களுமிருப்பதாக பல மேல்நாட்டு வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதோடு இப்போது பலர் தானே குபேரனென்றும், கர்ணனென்றும் தன்னிட வீடே வைகுண்டமென்றும் காடே கைலாசமெனவும், தனக்கு மிஞ்சினவர்கள் உலகத்தில் யாருமில்லை யென்றும் தலைகால் தெரியாமல் திரிந்து கொண்டிருக்கிற ஒரு அகம்பாவி யாத்திரை செய்து, உலகத்தில் அளவிடமுடியாத செல்வவான்களையும் தர்மவான்களையும் அவர்கள் அவ்வளவு தூரம் ஜனங்களிடம் அன்பு கொண்டு ஏழையோடு ஏழையாய் காணப்படுவதையும்பார்ப்பானேயானால் இந்தத் "தக்கிணிச் சொக்கனும்" அகந்தையை விட்டு நல்வழிப்படுவான். இன்னும் இது போன்ற காரணங்களை அநேகம் சொல்லலாம். ஆகையால் யாத்திரை செய்ய வேண்டுவதே.

பெரியோர்கள் ஏற்பாடு.

ஆகையால் மனிதன் எப்படியும் தேசத்திலுள்ள ஸ்தலங்களையும் தீர்த்தஸ்தலங்களையும் தரிசிக்கவும் ஆடவும் வேண்டிய அவசியத்தையும் அதனால் மனிதனுக்கு உடல் நலம் உண்டாவதை உத்தேசித்தும் சற்புத்திரராக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே, இவர்கள் கண்டிப்பாய் யாத்திரை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தவே க்ஷேத்திரங்களின் மகத்துவமும், தீர்த்தங்களின் மகத்துவமும், அளவில்லாமல் புகழ்ந்து அதற்கென்று சில ஸ்தல புராணங்களை ஏற்படுத்தியும் அந்தத்தீர்த்தத்தில் குளித்தால் மகாபாதகம் தீரும் இந்தக்ஷேத்திரத்தைத்தரிசித்தால்இனிப்பிறப்பில்லை யென்று சொல்லி ஆசை காட்டி, வைத்திருக்கிறார்கள். இது அவர்கள் நம்மீது கொண்ட கருணையால் சொல்லியவைகளாகும் இம்மாதிரி மனிதர்கள் மேன்மையடைய ஏற்பட்ட யாத்திரையானது. அதன் தத்துவம்.

யாத்திரையில் நம் அடிமையான விதம்.

தற்காலம்எப்படிபணம்பறிப்பவர்களுக்கு உபயோகப்பட்டு நாம்அடிமைப்பட்டிருக்கிறோமென்பது சிறிது ஆராய்வோம்ஒருகுறி சொல்வோன் அல்லது சோதிடர் இவர்கள் வந்து உனக்கு வேளைபொல்லாது காசிக்குப் போய் நூறுபிராமணருக்குப்பூரிதானம்செய்யவேண்டும் என்கிறான். இன்னொருவன ராமமேசுவரம் போய் நாகப்பிரதிஷ்டைசெய்து இருநூறு பிராமண தம்பதிகளுக்கு சேலை சோமன் வாங்கிக்கொடுத்து வனபோஜனம் செய்வித்தால் ஒருவருஷத்தில் புத்ர சந்தானம்உண்டாகுமென்கிறான். இன்னொருவன் உனக்குக்கிரகம் பிடித்திருக்கிறது. ஆறுமாதம் தீர்த்த யாத்திரை செய்யவேணும் இல்லாவிட்டால் இங்கேயே எம சாந்தி செய்ய வேண்டுமென்கிறான், நாம் உண்மையென்று உடனே நம்பி விற்காததை வித்து யாத்திரை செய்ய ஆரம்பிக்கிறோம். உடற்கூறு கர்ம பலன் முதலியவைகளால் சந்தானம் இல்லை யென்று நினைக்காமல் ராமேசுவரம் போய் ஆயிரம் ஐநூறு செலவு செய்து சந்தானம் சம்பாதித்துக்கொள்ளலாமென்று எண்ணம் உண்டாகிவிடுகிறது. ஆனால் ராமேசுவரத்திலேயே எப்போதுங்குடியிருக்கிறவர்கள் எத்தனையோ பேர், சந்தானமில்லாமலிருப்பதைக்கவனிப்பதில்லை. தவிரவும் இங்கிலீஷ் டாக்டர்களுக்கும், மருந்து ஷாப்புக்காரருக்கும் பத்து வாவு இருப்பது போல சோதிடர் சிலருக்கும் ராமேசுவரம் சாஸ்திரிகளுக்கும் பத்து வாவு இருப்பதையும் கவனிப்பதில்லை ராமேசுவரத்தை யாவது காசியையாவது காதில் கூட கேட்டிராதவர்களுக்கு வீடு நிறைய சந்தானங்கள் இருப்பதையும் வருஷம் பூராவும் ராமேசுவரம் போய் நாகப்பிரதிஷ்டை செய்து, காசிக்குப் போய்க்கங்கையில் மூழ்கி வருபவர்களுக்கு இன்றைக்குண்டாகும் நாளைக்குண்டாகுமென்று மாத விடாய் நாளை டைரியில் எழுதிவைத்துக்கொண்டிருந்தும், ஒன்றையுங் காணோம் ஆகையால் பகவான் அனுக்கிரக முண்டானால், எங்கும் போக வேண்டாம், அவருக்கு அநுக்கிரகமில்லையானால், அதுவும் எதோ நன்மைக்கே யென்று இருக்கவேண்டுமே யல்லாமல் கடன் வாங்கிக் கொண்டு இங்கேயும் அங்கேயும் ஓடிக்கண்டவர்கள் காலில் விழுந்து கைகட்டிக்கொண்டு போடு கோப்புக் கணம் என்றால் எண்ணுங்கோசாமி யென்று சொல்லி அடிமையாக வேண்டாம். நாம் ஒரு நதியில் குளிக்கப்போனால் அங்கொரு சாஸ்திரிதர்ப்பைப்புல்லை முன்னால் வைத்துக்கொண்டு கொஞ்சம் எள்ளு அல்லது மஞ்சளரிசி இதுகளைவைத்துக் கொண்டு சங்கற்பம் செய்து

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

கோயமுத்தூர் அகில இந்திய 3வது நாயுடு மகாநாடு.

—o—

தலைவர் சர் கே. வி. ரெட்டி நாயுடுகாரின் முடிவுரை பிரசங்கம்.

சகோதரி சகோதரர்களே!

இம்மகாநாட்டைக் கலைக்கும் முன்னர் நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நான் சென்னையில் நடந்த மகாநாட்டுக்கு ஆஜர் ஆகவில்லையாயினும் அம்மகாநாட்டைவிட இம்மகாநாட்டிற்கு அதிகப்படியான பிரதிநிதிகளும் ஆலோசிக்கப்பட்ட விஷயங்கள் அதிகமென்றும் அம்மகாநாட்டில் ஆஜராயிருந்தவர்கள் சொல்லக்கேட்கிறேன். நாயுடு அரசர்கள் ராஜ்ய பரிபாலனம் செய்யும்பொழுது நாயுடு குலத்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ அப்படியே இப்பொழுது மிருக்கிறார்கள் என நினைக்க இடமுண்டு. நீங்கள் உங்களுடைய பண்டைய வரலாற்றைச் சொல்லி பெருமை அடைவதோடு நிற்கவில்லை. ஆனால் நீங்கள் இம்மகாநாட்டில் ஒற்றுமையின் வளர்ச்சிக்காக வெகு வேலை செய்திருக்கிறீர்கள். வரவேற்புக் கழகத் தலைவர் நாம் இதுவரை தேசீய ஒற்றுமைக்காகச் செய்திருப்பதைப்பற்றியும் செய்யப்போவதைப்பற்றியும் போதிய அளவு சொல்லியிருக்கிறார். நாமெல்லோரும் ஜன நாயகத்துக்குழைப்பவர்கள் ஜாதி வித்தியாசத்தை ஒழித்து எல்லா மக்களும் சமம் என்று இருந்தாலொழிய தேசத்தில் ஒற்றுமை ஏற்படாது. நாயுடுகுல உட்பிரிவுகளை எல்லாம் இம் மகாநாட்டில் ஒன்றுபடுத்தியிருக்கிறோம். ஸ்ரீரங்கத்தில் சுவாமி கோவிலை ஏழு சுவர்கள் தடுத்துக்கொண்டிருப்பது போல நம் நாயுடு மக்களைப் பிரித்திருக்கும் ஜாதி உட்பிரிவு என்னும் சுவர்களை இடிக்க வேண்டும். ஹிந்து மதத்தில் சுமார் 700 சுவர்கள் இருக்கிறது. நம் மகாநாட்டில் ஒன்றிரண்டு சுவர்களைத் தகர்த்து விட்டோம். நாம் தோட்டி முதல் தொண்டமான் வரையிலுள்ள செல்வவான்களிலிருந்து ஏழைகள் வரையிலுள்ள வித்தியாசங்களைக் களைந்தெரிந்தாலொழிய தேசத்தில் ஒற்றுமை ஏற்பட மார்க்கமில்லை. நாயுடுமார்களாகிய நாம் நடுத்தரத்திலிருக்கிறோம். பிராமணர்களை இழுத்துப் பஞ்சமர்களை உயர்த்தி நமது நிலைக்குக் கொண்டு வந்தால்தான் இருவரையும் சகோதரர்களென ஆலிங்கனம் செய்யமுடியும்.

சம உரிமைகள்.

நம் மியக்கத்தில்வேறுபாட்டுக்கு இடமேயில்லை. பார்ப்பனர்கள் சொல்வதுபோலவே நான்கு வருணத்தாரும் ஒரே தாயின் குழந்தைகள் என்பதை வேண்டுமானாலும் ஒப்புக்கொள்ளலாம். நம் இந்து குடும்பத்தில் மூத்த மகனே சகலவித போக போக்கியங்களனுபவிக்கிறான். தன் மற்றைய சகோதரர்களைக் கவனிப்பதேயில்லை. முதலில் தான் கலியாணம் செய்துகொண்டு தன் சகோதரர்களுக்குக் கலியாணம் செய்யு முன்னரே குழந்தைகள் உடைத்தானவனாகிறான். பின்னர் தன் குழந்தைகளுக்குக் கலியாணம் முதலியதுகள் தன் சகோதரர்களையும் கவனியாது செய்கிறான். பெற்றோர்களின் ஆஸ்தியிலிருந்து குடும்பத்திற்குப் போதிய அளவு வருவாயும் இருக்கிறது. இந்நிலையில் தன் சகோதரர்களுக்குத் தேவையான கல்வி முதலியதுகள் கவனிக்கவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். அவன் தம்பிமார்கள் படிக்கவைக்கவேண்டுமென்று கேட்டால் அது குற்றமாகுமா? அவர்கள் தங்களது குடும்பச் சொத்திலிருந்து பாகம் கேட்பது குற்றமாகுமா? இளைய சகோதரர்களெல்லாம் தன்னுடன் கூட ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்களல்லவா? "ஹிந்துலா" எல்லாச் சகோதரர்களுக்கும் சம பாத்தியம் உண்டென்று சொல்லவில்லையா? அப்படியெனின் தம்பிமார்கள் தமயனைத் தங்களுக்குச் சேரவேண்டிய பங்கைக் கேட்பது துவேஷமாகுமா? பிராமணரல்லாதார் சிறப்பாக நாயுடு மக்கள் வேண்டுவதென்ன வென்பதையும், இந்தியர்கள் ஒருங்கு சேர்ந்து கேட்பதென்ன வென்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். 1916ம் வருஷம் கான்பூரில் கூடிய மகாநாட்டில் "சட்டசபை ஸ்தானங்களெல்லாம் ஐரோப்பியர்களைக் கொண்டு பூர்த்தி செய்யக்கூடாது, உத்தியோகஸ்தர்களும் அநேகமாய் இந்தியர்களாகவே யிருக்கவேண்டும், பெரும்பான்மையான சட்ட சபைகள் இந்தியமயமாகவே இருக்கவேண்டு"மென்று கேட்டார்கள். இது பிரிட்டிஷ்காரர் மீது இந்தியருக்கு துவேஷமாகுமா? அது நமது பிறப்புரிமை என்று நாம் கேட்கவில்லையா? மேற்சொன்ன பாத்தியமே யாதொரு துவேஷமுமன்னியில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும்பொழுது அரசாங்க ஆட்சி முறையில் பார்ப்பனரல்லாதார்களுக்கும் சம உரிமை கேட்பது பிராமண துவேஷமாகுமா? ஆந்திர தேசம் ஒரு தனி மாகாணமாக்கப்படவேண்டும் அதற்குத் தனித்ததொரு பல்கலைக் கழகம் வழங்கப்படவேண்டும் என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். ஆந்திரப் பல்கலைக் கழகமென்பது ஏற்கனவே இருக்குமொரு கழகம். ஆனால் ஆந்திர மாகாணமென்பதும் விரைவில் வரக்கூடியதே. இதனால் ஆந்திரர்களுக்குத் தமிழரிடத்து ஏதேனும் துவேஷமிருப்பதாக நினைப்பதா? இதே முகாந்திரங்களைக்கொண்டு, பார்ப்பனரல்லாதார் தங்களது தேவையைக் கேட்டால் அது ஒரு துவேஷமாகுமா? இன்னும் மகமதியர்கள் தேவையை எடுத்துக்கொள்ளுங்கள். மிண்டோ மார்லி சீர்திருத்தத்தின்போதே அவர்கள் தனித்த முறையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டு அதனை அடைந்திருக்கின்றனர். இதுநாள் பரியந்தம் அவர்கள் தங்களது தனித்த தொகுதிகளுக்காக வாதித்து வந்திருக்கிறார்கள். அவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் பிரத்தியேக உரிமைக்காக வாதித்து தக்கவற்றை அடைந்து வருகின்றனர். அவர்கள் அப்படித் தங்கள் உரிமையைக்கேட்டு அடைகிறார்களென்று ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் துவேஷமுண்டென்று சொல்லுவதா? இத்தியாதி காரணங்களுக்கு மகமதியர்கள் இந்துக்களைத் துவேஷிக்கவில்லையென்றால், பின் ஏன் பார்ப்பனரல்லாதார்கள் தங்கள் தேவையைக்கேட்கும்போது அவர்களைப் பார்ப்பன துவேஷிகள் என்றுசொல்லப்படவேண்டும்? இனியும் பல உதாரணங்களைக்கொண்டு நான் சொல்வதை ருஜுப்படுத்தலாம். ஆனால் இதே போதுமானதாகும். ஒவ்வொரு பெரிய இயக்கத்திலும் இருதரப்பட்ட மனிதர்கள், உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் இருப்பார்கள். தாழ்ந்தோர் வீழ்ச்சியுற்றிருப்பதால் தன்மதிப்பற்றகாரியங்களைச் செய்யக்கூடும் உயர்ந்தோரின் தேவை எத்தன்மைத்தென்பது, அதன் உபரிய முடிவென்ன வென்பதையும், ஆதலால் தேசத்தின் நிர்யாணம், வளர்ச்சி, ஒற்றுமை, முதலியன எப்படி பாதிக்கப்படுகிறதென்பதையும் கவனிக்கவேண்டும்.

மதக் கொடுமை நீங்கவேண்டும்.

மதத்தின் பேரால் நமக்கு கைவிலங்கும் கால்விலங்கும் பூட்டி நம்மை உட்கார வைத்திருக்கின்றார்கள் என்று முன்னமே சொல்லியுள்ளேன். இதர தேசங்களைக் காட்டிலும், இந்தியாவில் சமூகாய அடிமைத்தனமும் மதத்தின் கொடுங்கோன்மையும் அபரிமிதமாகத் தலைவிரித்தாடுகிறதைப்பார்க்கலாம் தினசரி வாழ்வில் ஒவ்வொரு வாழ்க்கையிலும் அவைகளின் பயனற்ற தன்மையைக்கண்கூடாகக் காண்கிறோம். அவைகள் யாரையும் நம்மை மிச்சம் விடுவதில்லை. இத்தியாதி கொடுங்கோன்மை, தோட்டி முதல் தொண்டமான் வரை, பணக்காரன் முதல்ஏழைகள்வரை, முதலாளி முதல்வேலைக்காரன் வரையிலும், ஆகிய எல்லோரையும் அடிமைப்படுத்தி யிருக்கின்றது. இம்மாதிரி சமுதாயக் கொடுமைகளும், மதக் கொடுமைகளும் நம்மை விட்டகலவேண்டும். உடனே நம்மைப் பூட்டப்பட்டிருக்கிற விலங்குகளாகிய மதக்கொடுமைகளினின்றும் நாம் விடுபட வேண்டும். இத்தகைய கொடுமைகளுக்கும், விலங்குகளுக்கும்காரணமாயுள்ள ஒருஜாதியின் தன்மையைத்தான் கண்டிக்கிறோமேயல்லாது தனிப்பட்ட நபர்களைக்கண்டிக்கிறோமல்லோம். நாம் பார்ப்பனர்களைத் தாக்குவதில்லை. நான்ஏற்கனவே அவர்களும்நம்சகோதரர்களென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் நாம் பார்ப்பனீயத்தையும், மூட நம்பிக்கையும், நேர்மையற்ற தன்மையும், ஜாதியால் வரும் கேட்டையும், பார்ப்பனீயத்திலடங்கிய மற்ற துன்பங்களையும் தான் தாக்குகின்றோம். அருத்தமற்றதும், மூடக்கொள்கையுடையதுமாகிய சிராத்தம்போன்றசடங்குகளைச்செய்து இவ்வாறு அவமானப்படநாம் இனித்தயாராகவில்லை. நமக்கும்கடவுளுக்கும் இடையில் தரகர் வேண்டாம். எல்லாச் சுதந்தரங்களையும் ஒரு வகுப்பாரே வைத்துக்கொண்டு இஷ்டப்படி நடக்க நாம் விடக்கூடாது. மனிதனுக்கு மனிதன் சமமாகவும், எல்லோருக்கும் சம உரிமை அளிக்கப்படவும் வேண்டுமென்றே நாம் கோருகிறோம். சமூக வியலிலும், மதவியலிலும், அரசியலிலும், தேசத்தின் சபைகளிலும், அரசாங்கத்தாரின் ஆட்சி முறையிலும், இன்னும் ஒவ்வொரு வாழ்விலும் நாம் சமத்துவத்தையே வேண்டுகிறோம். அது நமக்குக் கிடைக்கும்வரை போராடத்தான் செய்வோம். உடன் கட்டை

ஏறுதல் நிறுத்திவிடப் படவில்லையா? விதவைகள் மறு விவாகம் செய்து கொள்வதற்குச் சுதந்திரம் கொடுக்கப்படவில்லையா? ஸ்திரீகளின்சம்மதவயது உயர்த்தப்படவில்லையா? இத்யாதி சீர்திருத்தங்கள் அமுலுக்கு வரும் போதும் கூக்குரல்கள் எழவில்லையா? அதுபோலவே நமக்கிருக்கும் குறைகளை நிவர்த்தித்து நமதுபிறப்புரிமையை அடைய நாம் செய்யும் கிளர்ச்சியில் கூக்குரல் ஏற்பட்டால் நாம் அதை மதிக்கக் கூடாது. இவைகளில் யாருக்கு எவ்விதமானகஷ்டங்களிருக்கின்றன? வெரும் பாசாங்கு கூக்குரலுக்கு நாம் பயப்படக்கூடாது. நமக்கு முன்னிருக்கும் வேலையே மிகவும் கஷ்டமானது தான். சுயநலவாதிகளே நம்மை எதிர்ப்பார்கள், உடன்கட்டை ஏறுவதை ஒழிப்பதை எதிர்ப்பார்கள், விதவைகள் மறுவிவாகம் செய்துகொள்ளலாம் என்பதை எதிர்ப்பார்கள் இதவ்வளவையும் நாம் பொருத்துக்கொண்டு நாம் முக்தியடையும் வரை தைரியத்துடன் உழைக்கவேண்டும்.

சிறு தோல்விகளால் நாம் அதைரியமோ, தளர்ச்சியோ அடையப்போவதில்லை, தோல்வியை அஸ்திவாரமாக்கக்கொண்டுதான்நமது வெற்றிமாளிகையை பலமாகக்கட்டவேண்டும். நாம் ஜெயமடையாவிட்டாலும், நமது குழந்தைகளோ அல்லது பேரக்குழந்தைகளோ கட்டாயம் ஜெயமடைவார்கள் என்பது திண்ணம். அடிமைத்தனமும் கொடுங்கோன்மையும் ஏமாற்றலும் நீடித்த காலம் நிலைக்காது. அவைகள் ஒருமுடிவுக்கு வரவேண்டியதுதான், முடிவுக்கும் வரப்போகிறது. தேவதூதர்கள் நமக்குத்துணை நிற்கின்றனர். நாம்மாத்திரம் உறுதியாக நிற்கவேண்டும். நமதுகொள்கைகளும். நமது கிளர்ச்சிகளும் தேசத்தின் முன்னேற்றத்திற்காகவே யல்லாமல்நமது சுயநலத்திற்காக வல்ல என்பதை உலகம் நன்றாய் உணரவேண்டும்.

இங்கிலையில் இவ்வித கிளர்ச்சிகளுக்கு நமது பார்ப்பன சகோதரர்கள் ஏன் உதவி செய்யக்கூடாது?

அனேக பார்ப்பனர்கள் இக்கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கே பயப்படுவதுடன் இதை எதிர்க்கவும் பிரயத்தனப் படுகிறார்கள். ஏனெனில் தங்களுடைய ஏகபோக உரிமை போய்விடுமே என்கிற பயந்தான். ஆனால் சில பார்ப்பனர்கள் இந்த அபிப்பிராயத்திற்கு மாறுபட்டவர்களும் இருக்கலாம், உண்மையிலேயே பார்ப்பனர் இந்தியாவின் முன்னேற்றத்தில் கவலையுள்ளவர்களாயிருப்பார்களானல் தாராள மனதுடன் நம்மோடு வந்து கலரட்டும், நான் தாராளமாக பார்ப்பனர்களை வந்து கூடி உழைக்கும்படி அழைக்கிறேன். அவர்கள் நமது இயக்கத்தைப் பார்ப்பனீயக்கண்களுடன் பார்க்காமல் ஜீவகாருண்யக் கண்களுடனும், தேசாபிமானக் கண்களுடனும் பார்த்தால் தான் நமது உண்மை அவர்களுக்கு விளங்கும். அப்போது, தாராளமாய் நமக்கு உதவி செய்யவும் வருவார்கள். நம்முன் இருக்கும் வேலை அவர்களுக்கும் சொந்தமானதுதான். அவர்கள் உண்மையான மனிதர்களாயிருப்பார்களானல் நம்முடன் கலந்து வேலைசெய்யக் கடமைப்பட்டவர்களே அல்லாமல் நம்மை துவேஷிப்பவர்களாவார்கள்,

நம்முடையகிளர்ச்சிக்கு உதவிசெய்வதின் மூலம் தாழ்த்தப்பட்ட சமுகத்திற்கும் உதவிசெய்தவர்களாக மட்டார்கள்,

மற்றுமொருவிஷயம் தேச நிர்மாணம் ஒரு புண்ணியமான வேலை. ஆனல் இந்தப் பேரை வைத்துக்கொண்டு ஒரு கூட்டத்தார் தங்கள் சுய நலத்திற்கே வழி தேடிக்கொள்ளக் கூடாது. ஜர்மனி யுத்தம் கூட சுதந்திரத்திற்காக என்றுதான் சொல்லிக்கொள்ளப்பட்டது. அன்பே நமது வழிகாட்டியாயிருக்கவேண்டும். சுயமரியாதையும் தேச விடுதலையும் நமது முடிவான லக்ஷியமாயிருக்கட்டும். இதற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியும் திட்டங்களும் கண்ணியமானதாக இருக்கட்டும். சமயம் வரும்போது யுனிவர்சிட்டி மசோதா போன்றவைகளை எதிர்ப்பதற்கும், மத சமூக சம்பந்தமான கொடுமைகளிலிருந்து விடுபடுவதற்கும், மார்பைக்காட்ட நாம் தயாராயிருக்கவேண்டும். இம்மாதிரி காரியங்களில் கண்டிப்பாய் கடவுள் நம்முடன் இருப்பார்.

முடிவுரை.

முடிவுரையாக நான் சொல்லுகிறேன்.

இந்த மகாநாடு மூன்று நாள் வேடிக்கையாயிருக்கக்கூடாது. நாம் பேசுகிறபடி நடப்பதில்லை, என்று பிறர் சொல்லும்படி இருக்கக்கூடாது. இத்தீர்மானங்கள் அமுலுக்குக்கொண்டுவருவதில் உள்ள கஷ்டங்கள் எனக்குத்தெரியும். ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஆழ்ந்துகிடக்கும் அறியாமையும் மூட நம்பிக்கைகளும் எதிர்ப்புகளும் ஒழிந்துபடவேண்டும். நாம் விடாமுயற்சியுடன் வெற்றிபெறும் வரையிலும் உழைத்துத் தீரவேண்டும். ஒவ்வொருவரும் தன்னாலானதைச் செய்யவேண்டும்

விஜயநகர அரசர்களான கிருஷ்ண தேவராயர் வம்ஸத்தார்களே! திருமலை நாயக்கர் வம்ஸத்தர்களே! அவர்களின் பேராலேயே நான் உங்களுக்கு சொல்வதென்னவென்றால் அப்பெரியார்களின் பெயருக்கும் கீர்த்திக்கும் பங்கமில்லாமல் சுயமரியாதையுடன் நடந்துகொள்ளுங்கள். இவற்றைச் செய்தீர்களானல் நமது கடமையைச் செய்தவர்களாவோம். நான் இதன் மூலமாகவேதான் தனித்தனி மனிதன் உரிமையும் சமூக விடுதலையும் மத விடுதலையும் அரசியல் சுதந்திரமும் அடையக்காண காத்திருக்கிறேன்.

தமிழரும் நாகரீகமும்

இக்கட்டுரையை வரைய என் உள்ளமானது சென்றதற்குச் சில வழக்குகள் உள்ளன; அஃதென்னவெனில் பழந்தமிழ்க்குடிகளாகிய நாம் ஆரியர்களிடம் பட்டு அல்லலுறுவதற்கு முகாந்திரங்கள் யாவை என்பதைப்பற்றி சற்று எண்ணுவோம்.

முதலில் தமிழர்களாகிய நாம் ஆரியப்பாடையின் பித்துக்கொண்டு, நமதுஇல்லங்களில் நடக்கும்இனியவை, இன்னதவை எல்லாவற்றிற்கும் பார்ப்பனரால் கூறப்படும் உலக வழக்குகளில் பேச்சற்ற புரோகிதத் தன்மைக்கும் தர்ப்பைக்கும் பெருமை கொடுக்கும் தெரியாப்பாடையை ஒரே வழக்கில் நடத்தச் செய்து ஆரியன் காலில் அருந்தமிழன் வீழ்ந்து பெருமை தொடுப்பதினுலேயே நமது தமிழன்னை யானவள் தலை சிறந்த நாகரீகத்தை விட்டு தட்டுத்தடுமாறி நிற்கின்றுள் அதோடும் "பெற்றதாயானவள் பிச்சையெடுக்கப் பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் செய்தாற்போல்" நமதன்னையானவள் வாடி வதங்கி நிற்கப் பிரிதொரு அன்னைமார்கள் அரியணைகளில் அமர்ந்து அரசுகளிலும் அவைகளிலும்அவர்களுடைய மக்கள் வீரர்களாக வீற்றிருக்கச் செய்கின்றார்கள். ஆனபடியால் தமிழர்களுடைய நாகரீகத்தையும், மிடுக்கையும் அரசியல்வாழ்க்கையையும் ஆரியநாட்டாரால்கொள்ளைகொள்ளப்பட்டு; பார்ப்பன அறமும் புரோகிதப்புண்ணியமும்மனுதர்ம சாஸ்திரமும், புராணக்கதைப்பிரசங்கமும், தர்ப்பைப் புல்லின் மகிமையும் முப்புரி நூலின் பெருமையும் எடுத்தோதப்பட்டு அடிமைக்குழியில் வீழ்த்தப்பட்டன. அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

தமிழர் நாகரீகம் தலை சிறக்க வேண்டுமானால் புரோகிதத்தன்மையையும், பார்ப்பனக் கொடுமையையும் பேச்சளவிலும் எட்டளவிலுமாத்திரம் அன்றி கருமத்திலும் ஒழிக்கத் தமிழர்கள் உலகமானது முன்னணியில் வரவேண்டும்.

தமிழர் நாகரீகம் அரியணை ஏற ஆரியங்கலப்பற்ற தமிழ்க் கல்வியே சாலச்சிறப்புடைத்து தமிழன்னையானவள் தங்கத்தகத்தில்தனியரசில்வீற்றிருப்பாளானல்தமிழர் நாகரீகம் தானே சிறந்து ஆரியம், ஆங்கிலம் முதலிய அநாகரீக வழக்கப் பழக்கங்களை உதறி, புரோகிதத்தன்மை, சாஸ்திரம், அடிமைமுதலிய இழிதுறைகளினின்றும் விலகி இன்னல நீங்கி இன்பமடையும்.

அத்துறைகாண நந்தமிழ்த்தலைவர்கள் அனைவரும் ஆணவம், மாயை மயக்கம் முதலிய இழி குணங்களை விலக்கி ஒன்றுபட்டு நாமனைவரும் தமிழ் மக்கள் "நாமார்க்குங் குடியல்லோம் நாமனையஞ்சோம" என்ற அப்பர்வாக்கை அமிர்த வாக்காகக்கொண்டும் "அந்தணர் என் போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றபொய்யாமொழியார்புனித வாக்கையும் கொண்டு, அந்தணத்தருமமற்ற பேராசைப் பேயகளாகிய புரோகிதர்களை உபாத்தியாயர்களாகக் கொண்டு சடங்குகளைச்சங்கடங்களாக்கி வீணில் உழலாமல் புரோகித தன்மையையும், மனிதனுக்குமனிதன் காலில் விழவேண்டும் என்ற ஆணவத்தையும், அடிமைப்பட்ட மக்களாகவே மற்றவர் வாழவேண்டுமென்ற எண்ணத்தையும் உதறி ஒன்றுபட்டு வாழ எண்ணுவோமானல் ஒரே ஆண்டில் நமமைக் கிட்டி "சுயராஜ்ய"மும் சுயமரியாதையும் மிளிருமென்று கூறி இக்கட்டுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

S. K. கோவிந்தராஜ நாயக்கர்

தஞ்சை ஜில்லா

பார்ப்பனரல்லாதார் 6-வது மகாநாட்டில்

அக்கிராசனம் வகித்த திவான் பகதூர்

M. கிருஷ்ணன் நாயர் B. A., B. L., M. L. C.

அவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தின் சாராம்சம்,

வரவேற்பு அக்கிராசனரே! வரவேற்பு கமிட்டி அங்கத்தினர்களே! சகோதரர் சகோதரப் பிரதிநிதிகளே!

இந்த தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் 6-வது மகாநாட்டு வைபவத்திற்கு அக்கிராசனம் வகிக்கும் கௌரவத்தை எனக்களித்ததற்காக நான் எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஒரு ஜனநாயகம்.

கல்வியிலும் சமூக சீர்திருத்தத்திலும் சிக்கனத்திலும் அரசியலிலும் பொருளிலும் ஒழுக்கத்திலும் தென் இந்தியாவிலுள்ள பார்ப்பனரல்லாதார் சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வதே நமது இயக்கத்தின் தத்துவமாகும். இது எந்தவிதத்திலும் பார்ப்பனர்களுக்குக் கெடுதியைக் கொடுக்கத்தக்கதன்று. இது எல்லா வகுப்புகளுக்கும் நீதியை வழங்கக் காத்திருக்கிறது. ஆனால் ஒரே வகுப்பு ஏகபோக சுதந்திரம் அநுபவிப்பதை எதிர்க்கக்கூடியது இதன் முக்கிய தத்துவம். சமுதாயத்திலும் அரசியலிலும் சமத்துவத்தை உண்டாக்குவது.

ஒரு தென் இந்திய முக்கிய பார்ப்பனர் கூட ஒரு சமயத்தில் சொல்லியிருக்கிறதென்னவென்றால்:—“வகுப்பு மகாநாடுகள் இக்காலத்திய முறையாய்விட்டது. சகஜமாகிவிட்டது. அது ஒவ்வொரு வகுப்பாரையும் தட்டி எழுப்பி இந்திய தேசிய வாழ்வில் பொது உணர்ச்சியைக் கொடுத்து இந்தியாவின் பிற்கால சுக வாழ்வில் சரியானதும் கண்ணியமானதுமான பங்கை அடையச்செய்ய ஹேதுவாக்குகிறது. ஜாதிப் பிரிவின்படி கட்டுப்பாடு செய்யப்பட்ட ஒரு தேசமானது தேசிய முன்னேற்றமடைய வேண்டுமானால் கண்டிப்பாய் ஒவ்வொரு ஜாதியும் தனித்தனியே முன்னேற்றமடைய முயற்சிக்கவேண்டியது இன்றியமையாததாகும்.” சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் அதற்குத் தக்கபடி ஒழுங்காய் இருந்தால்தான் பலமுடையது என்று சொல்லக்கூடும். அப்படிக்கில்லாமல் ஒருபாகம் மாத்திரம் அளவுக்குமீறி பெருத்திருந்து விட்டால், அது பலக்குறைவைக் கொடுக்கக்கூடியதாவதுடன் அப்படி இருப்பது சரீரத்திற்கு ஒரு வியாதி என்றுதான் சொல்லவேண்டும். அதுபோலவே எல்லா வகுப்புகளுக்கும் சரியான பலம் ஏற்படுத்துவதற்காகவே, பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சமூகவியல் அரசியல் சமத்துவமானது நமது இயக்கத்தில் தற்காலம் தீண்டப்படாதார் என்று சொல்லப்படுகிறவர்கள் முதற்கொண்டு எல்லா வகுப்பாருக்குமே உண்டு. நம்முடைய மகாநாடுகளில் அடியில்கண்ட கொள்கைகளை ஏற்படுத்தி ஒப்புக்கொண்டு வந்திருப்பதிலிருந்தே நமது இயக்கம் உண்மையான ஜனநாயக தத்துவமுடையது என்பது வெளிப்படையானது.

கோள்கைகளாவன.

சமாதானமும் நீதியும் ஒழுங்குமான முறைகளில் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் ஒரு பாகமாய் அதிவிரைவில் இந்தியா சுயராஜ்யம் அடையவேண்டும்.

2. பரஸ்பர நல்லெண்ணமும் ஒற்றுமையும் தென் இந்தியாவில் உள்ள சகல வகுப்பாருக்குள்ளாகவும் ஏற்படவேண்டியும் அவரவர்கள் நன்மையைக் காப்பாற்றிக்கொள்ள சௌகரியமிருக்கும்படியாகவும் அவசியமான இடங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவதும் சமூக மறு அமைப்பை உண்டாக்கவும் வேண்டும்.

3. தென் இந்தியாவில் உள்ள எல்லா வகுப்புக்கும் கல்வி, சமூகம், பொருளாதாரம், கைத்தொழில், விவசாயம், அரசியல் முதலிய துறைகளில் முன்னேறச்செய்வது.

உத்தியோக வேட்டையும் வகுப்புவாதமும்.

நாம் உத்தியோகம் சம்பாதிக்கும் வர்க்கமெனவும் உத்தியோக வேட்டையிலேயே நமது காலத்தைக் கழிப்பவர்களென்றும் நமது நோக்கமெல்லாம் உத்தியோகம் அடைவதுதான் என்றும் இதுகளுக்காக நமது இயக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றும் நம்மீது குற்றம் சொல்லப்படுகிறது. ஆம் அப்படியே நாம் உத்தியோக வேட்டைக்காரரென்றே வைத்துக் கொள்ளுவோம். அதை ஒப்புக்கொள்ளுவதற்கும் நாம் வெட்கப்படவில்லை. ஆனால் நாங்கள் வெளிப்படையாகவும் யோக்கியமான மார்க்கத்திலும் உத்தியோக வேட்டையாடுகிறோமேயல்லாமல், திருட்டுத்தனமாகவும் ஒழுக்கமற்ற வழியிலும் உத்தியோக வேட்டையாடவில்லை. எல்லா தேசங்களிலும் எல்லா காலங்களிலும் சர்க்கார் உத்தியோகம் என்பதற்கு யோக்கியதையும் செல்வாக்கும் உண்டு.

இந்தியாவில் தற்காலம் பல காரணங்களாலும் பொதுவாக ஜனங்கள் வியாபாரத்துறையிலும் தொழில் துறையிலும் விர்த்தியாவதற்கும் முன்னேற்றத்திற்கு மார்க்கமில்லாதலாலும் நடுத்தர படிப்பாளிக் கூட்டத்தாருக்கு வேலை இல்லாத திண்டாட்டத்தினாலும் சர்க்கார் உத்தியோகத்திற்கு மற்ற நாடுகளைவிட அதிகமான யோக்கியதையும் செல்வாக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதினாலேதான் உத்தியோகத்திற்கு இவ்வளவு பெரிய மதிப்பு கொடுக்கிறோமேயல்லாமல் வேறில்லை. இந்தக் காரணங்கள் இல்லாவிட்டால் இந்த வெகு சில உத்தியோகங்களை நமது ஜனங்கள் லக்ஷியம் செய்யவேமாட்டார்கள். நமது ஜனங்களுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல. உத்தியோகங்கள் உண்டாக்குவதில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது என்னவென்கிறோமென்றால் யோக்கியதை இருந்து சரியானபடி பிரதிநிதித்துவம் பெறாத சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் உண்டாகும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லுவதுதான்.

இதைவிட குற்றமற்றதும் பக்ஷபாதமற்றதும் நியாயமானதுமான கோரிக்கை வேறு இருக்குமென்று நாம் நினைக்கவில்லை. இப்படியிருந்தும் நம்மை ஓயாது உத்தியோக வேட்டைக்காரர் என்று சதா தூற்றுகிறார்கள்.

நம்மை உத்தியோகவேட்டைக்காரர்கள் என்று குற்றம் சொல்லப்படுமானால் உத்தியோகங்களை இந்தியமயமாக்கவேண்டுமென்று கூச்சல் போடுவதும் உத்தியோகவேட்டை குற்றமானதுதான். அன்றியும் இந்திய நேஷனல் காங்கிரஸ் என்பதையும் உத்தியோக வேட்டையும உத்தியோகம் சம்பாதிக்கிறவர்க்கமான இயந்திரம் என்று சொல்லவேண்டும்.

காங்கிரஸ் மிதவாதிகள் இயக்கமாகிய லிபரல் பெடரேஷனும உத்தியோகங்களை எதிர்பார்த்து எல்லா உத்தியோகங்களையும் இந்தியமயமாக்க வேண்டுமென்று சொல்லும்போது அது பரிசுத்தமான தேசாபிமானமாகக் கருதப்படுகிறது ஆனால் நாம் அதைவிடமேலாக அதாவது உத்தியோகங்களை இந்தியமாயமாக்குவதில் ஒருகூட்டத்தாருக்கே அது போய் விடாமல் எல்லாக் கூட்டத்தாருக்கும் சரியானபடி வினியோகிக்கக் கூடிய நிலையில் இந்திய மயமாக்கவேண்டும் என்று சொன்னால், அது இழிவும் கண்டிக்கத்தக்கதும், தேசத்துரோகமுமாய் விடுகிறது.

ஆங்கிலோ இந்தியக்கூட்டத்தாரின் பத்திரிக்கைகளும் கூட, தங்களுடைய வழக்கமான குணத்தைக்கொண்டு நம்மை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றைமாத்திரம் மறந்து விட்டார்கள். அதாவது உத்தியோகவேட்டையில் பந்தயம் போடுவதில் எல்லாரையும் விட தாங்கள் அதிகமான வேகத்தில் இருக்கிறார்கள் என்பதைமறந்து விட்டார்கள். என்னவென்றால் தங்களுடையவகுப்பாருக்கு உத்தியோகம் சம்பாதிப்பதிலும் அநுபவிக்கச்செய்வதிலும் இவர்களைவிட கண்ணும் கருத்தும் ஆத்திரமுமுடையவர்கள் வேறு ஒருவரும் இல்லை என்பதுதான். ஆனால் இவர்களும் நாம் அவ்வுத்தியோகத்தில் உரிமை கேழ்க்கும் போது தங்கள் உரிமைகளில் நாம் பிரவேசித்ததாக கூறுகிறார்கள்.

ஆகவே உத்தியோவேட்டை என்று கூச்சல் போடுவது அர்த்தமில்லாததும் பழிசுமத்துவதும் ஆகும்.

இந்திய தேசீயக்காங்கிரசின் தலைவர் என்ன சொல்லுகிறார் என்றால். “தேசாபிமானத்தி

னுடைய ஊக்கமும் வேகமும் வகுப்புவாதத்தின் வேகத்தை அடியோடு அழித்து விட்டது............வங்காளத்திலும் பீகாரிலும் சென்னையிலும் மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ள ஓட்டர்கள் வகுப்புவாதிகளுக்கு ஒரே அடியாய் கண்டிப்பாய் வகுப்புவாதம் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். மதராசிலுள்ள ஓட்டர் பிரதிநிதிகள் லார்ட் வில்லிங்டன் தயவால் ஏற்பட்ட வகுப்புவாதத்தை அதாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பாருள் அதிகமான உஷ்ணத்தை உண்டாக்கிக்கொண்டு வந்த வகுப்புவாதத்தை அரவே களைந்தெடுத்துவிட்டார்கள். காங்கிரஸ் கொள்கைகளாகிய தேசாபிமானம் ஒற்றுமை நீதி இவைகளை ஆதரித்து இந்த மாகாணத்தில் ஒரு குறிப்பிடத்தகுந்த மாறுதலை உண்டாக்கி விட்டார்கள். பெரும்பான்மையாய்ப் பார்ப்பனரல்லாதாரையே ஓட்டர்களாக்கொண்ட தேர்தல்கள் பார்ப்பனரல்லாதார் என்கிற வித்தியாசமில்லாமல் தேசிய வாதிகளையே கவுன்சிலர்க்கும் அசெம்பிளிக்கும் போட்டியிலும் போட்டி இல்லாமலும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

சுயராஜ்யம் பெறவேண்டுமென்பதில்மற்றவர்களுக்குப் பின் வாங்காததேசபக்தர்களான பார்ப்பனரல்லாதார்களாலேயே இவ்வகுப்புவாதம் பிரசாரம் செய்யப்பட்டும் வகுப்புவாதம் தோல்வி யடைந்தது” இதாவது,

ஓ! வகுப்பு வாதமே நீ செத்து விட்டாய் ஆனால் நீ நீடூழி வாழ்வாயாக என்பதுபோல் இருக்கிறது.

சமீபத்தில் சென்னை சட்டசபையில்வரவு செலவு திட்டத்தின் பேரில் விவாதம் நடந்த காலத்தில் சட்டசபையில் உள்ள அங்கத்தினர்களால் பல வகுப்புகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்கிற அடையாளத்தைக் காட்ட உதவித் தொகையை குறைப்பது என்னும் போரால் 34 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. இத்தீர்மானம் கொண்டு வந்தவர்கள் சொல்லிக்கொண்ட குறைகள் என்ன வென்றால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வகுப்பாருக்கு இந்த இலாக்காக்களில் சரியான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என்றும், இம்மாதிரி தீர்மானங்களால் தான் தங்கள் வகுப்புகளுக்குச் சிர்மமானவினியோகம் ஏற்படக்கூடும் என்றும், சொல்லிக் கொண்டார்கள். மேல் கண்டபடி 34 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருந்தும் சிலரின் சூட்சியால் சில தீர்மானங்களே விவாதிக்க முடிந்தன. மற்றவைகள் சபை முன் வருவதற்கில்லாமலே செய்யப்பட்டுவிட்டது. ஆனால் எனக்கும் இதில் உங்களுக்கும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடிய விஷயம் என்னவென்றால் இம் முப்பத்தி நாலு தீர்மானங்களில் ஒன்று கூட (உத்தியோக வேட்டைக்காரரான) ஜஸ்டிஸ் கட்சியாரால் கொண்டுவரப்படவில்லை என்பதுதான். இம் 34-ல் 18 தீர்மானங்கள் சுயராஜ்யக் கட்சியாராலும், 16 தீர்மானங்களும் சுயேச்சைக் கட்சியாரும் நியமனம் செய்யப்பட்டவருமான மந்திரி கட்சியாரால் கொண்டுவரப்பட்டதாகும். இவற்றுள் இன்னம் ஒரு விசேஷம் என்னவென்றால், இந்த 34-ல் ஒரு தீர்மானமாவது பார்ப்பன அங்கத்தினர்களால் கொண்டுவரப்படவில்லை என்பதும் மற்றபடி பார்ப்பனரல்லாதாரில் உள்ள எல்லா வகுப்பார்களாலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதும் தான். அப்படி இருந்தும் சுயேச்சைக்கட்சியாரும் சுயராஜ்யக்கட்சியாரும் தங்களுக்குள் வகுப்புவாதமே கிடையாதென்றும் ஜஸ்டிஸ் கட்சியார் தான் வகுப்புவாதக்காரர் என்றும் கூப்பாடு போடுகிறார்கள். இதில் ஏதாவது உண்மை இருக்கிறதா?

சாச்வத நிலவரி;

நமது தென்னிந்தியாவில் பெரும்பான்மையும் நமது பிராமணரல்லாத மிராஸ்தார்களை கவனத்தை இழுக்கக்கூடிய விஷயம் இதைவிட வேறொன்றுமில்லையென நினைக்கிறேன். சட்டத்தின் மூலமாகவே வரி நிர்ணயம் ஏற்பட வேண்டுமென்பது பழமையான விஷயம். புது சீர்திருத்தங்கள் ஏற்பட்டகாலத்தில் இதை மறுபடியும் கவனிக்கப்பட்டது. தற்காலத்தில் வரி ஏற்படுத்துவதில் பலவிதமாக சட்டம் ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் சில மாகாணங்களில் நிர்வாக அரசாங்கத்தால் தனிப்பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. இது விஷயமாக ஏற்படுத்தப்பட்ட வாதிகளை வரி கொடுப்போர்கள் அறிந்து கொள்ளுவதுமில்லை' ஆகவே அந்த வாதிகளை உண்டாக்குவதில் இவர்களுக்கு யாதொரு உரிமையுமில்லை. ஆகையால் இது விஷயமாக வரி கொடுப்போர்களின் நன்மை உத்தேசித்து ஒரு சட்டம் ஏற்பட வேண்டுமென்று ஜாயிண்ட் பார்லிமெண்டரி கமிட்டியார் இந்திய சட்டம் செய்த காலத்தில் சொல்லியிருக்கிறார். இது அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் நமது சென்னை கவர்மெண்டாரும், ஒரு சாஸ்வத வரி மசோதா தயார் செய்யும்படி ரெவின்யூ போர்டாருக்குக் கட்டளை இட்டார்கள். ஒருவிதமாக தயாரிக்கப்பட்டு அதைப் பரிசீலனை செய்யவேண்டி கவர்ன்மெண்டாரால் ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியார் கவர்ன்மெண்டுக்குக் கொடுத்த ரிபோர்ட்டில் தற்கால மேற்பட்டிருக்கும் வரி விதிக்கும் முறையானது சரியில்லையென்றும், அதிகப்படுத்துவதில் சட்டசபைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்றும், அதிகப்படுத்தவோ, குறைக்கவோ, சட்டசபைக்கு, உரிமை இருக்கவேண்டுமென்றும், சட்டசபை தீர்மானப்படிதான் கவர்ன்மெண்டார் வரி விதிக்கவேண்டுமென்றும் தெரிவித்திருந்தது. இந்த ரிபோர்ட்டானது கவர்ன்மெண்டார் நிராகரித்து விட்டார்கள் 1924 வருஷம் மார்ச்சு மாதத்தில் கவர்ன்மெண்டார் சட்டசபையில் சாச்வத வரி மசோதா ஒன்று கொண்டு வந்தார். இந்த மசோதா ஏற்கனவே நிர்வாக அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட உத்தாவுகளை அடங்கி உள்ளதே யொழிய, சட்டசபைக்கு யாதொரு அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என்று சொல்லி, நீண்ட விவாதத்தின் பிறகு இம் மசோதா தள்ளிவிடப்பட்டது. கவர்ன்மெண்டார் இப்பொழுது புதிதாக ஒரு சாச்வத வரி மசோதா தயாரித்து அதை கெஜட்டில் பிரசுரித்திருக்கிறார்கள். இது 1924 ஷு-த்தில் கொண்டுவந்த மசோதாவைத்தான் திருப்பி எழுதப்பட்டிருக்கிறது. இதிலும் சட்டசபைக்கு யாதொரு அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. இதில் கவனிக்க வேண்டிய விஷய மொன்றுண்டு. இந்தியாவில் மற்ற மாகாணங்களை விட நம்ம மகாநாட்டில் தான் அதிக வரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலைமையில் சட்டசபை இந்த மசோதாவைத் தள்ளுவதைத் தவிர வேறொன்றும் செய்வது நியாயமாகாது.

நமது மந்திரிமார்கள்.

நமது மந்திரிகளைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லுவது இது சமயத்தில் பொருத்தமற்றதாகாது. நமது மந்திரிகள் சுயேச்சை கட்சியிலிருந்து எடுக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட ஒரு கட்சி தேர்தலுக்கு முன் இருந்ததேயில்லை. இந்தக் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் தேர்தலின் போது தனித்தனியாய்ச் சுயேச்சை வாதி யென்று சொல்லிக்கொண்டு தேர்தலுக்கு நின்று இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்குப் பொதுவான விஷயம் என்பது ஒன்றுமே கிடையாது. அவர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத சுயேச்சை வாதிகள். எல்லா திட்டத்திற்கும் அவர்கள் தனித்தனி சுயேச்சைவாதிகள். அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவருமல்ல சுயராஜ்யக் கட்சியைச் சார்ந்தவருமல்ல, தேர்தலுக்குப் பிறகுதான் அவர்கள் ஒரு கட்சியாகச்சேரவேண்டியவர்களானார்கள். அவர்களை ஒன்று சேர்த்தி வைத்த ராஜ்யக் கொள்கை என்ன வென்பது இன்னமும் யாருக்கும் தெரியாத ரகசியமாகவே இருக்கிறது.

எண்ணிக்கையிலோ இவர்களை விடக் குறைந்த கட்சி, சட்ட சபையில் கிடையவே கிடையாது. இந்த எல்லாரையும்விட சிறு கூட்டத்தில் இருந்து மந்திரிகளை அமைப்பதானது உலகத்திலுள்ள எல்லாச் சட்ட ஒழுங்கு கொள்கை இவைகளைவிட புதிய மாதிரியானது என்று சொல்லக்கூடியதாய் இருக்கிறது. நமது மந்திரிகள் தனித்த சொந்த ஒதாவில் கண்ணியமுள்ளவர்கள்தான். ஆனால் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நோக்கமோ முறையோ கிடையாது. எதாவது குறிப்பிட்ட முடிவான திட்டங்களும் கிடையாது. உத்தியோக மேற்றுக் கொண்ட காலத்தில் தங்களுக்கோ தங்கள் கட்சிக்கோ என் யாதொரு திட்டத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கவும் இல்லை? உதாரணமாக கலால் மந்திரியை எடுத்துக்கொள்ளலாம். தான் மந்திரியான பலவாரங்களுக்குப் பின்னும் “இன்னும் கலால்விஷயமாகத்தான் படித்துக்கொண்டிருப்பதாய்” சொன்னார். தனது படிப்பு முடிந்த பிறகு தஞ்சாவூரில் “பூரா மதுவிலக்கையும் ஜனங்கள் விரும்ப இன்னம் காலம் வரவில்லை” என்று சொன்னார்.

“பின்னும் மொத்த ஜனத் தொகையில் 100க்கு 5 அல்லது 10 வீதமான படித்தவர்கள்தான் மதுவிலக்கை பற்றி பேசுகிறார்கள்; “பாமரஜனங்களைப்படிப்பிக்கப்பட்டால் ஒழிய ஜனங்களுக்கு பூரா மது விலக்கும் சாத்தியமானதல்ல” என்று சொன்னார் பின்னும் மாயவரத்தில் பேசும்போது “சமூக

சீர் திருத்த விஷயமும் மது விலக்கு வேலைகளும்தான் குடிவார நிருத்தம் மார்க்கத்திற்கு சாதகமாயிருக்கவேண்டுமே ஒழிய சட்ட சபையின் மூலம் ஏற்படுத்துவது என்பது முடியக் கூடியதல்ல" மற்றொரு சமயம் கும்பகோணத்தில் பேசிய காலத்தில் "75 வருஷகாலமாய் அமரிக்கா தேசத்தில் சமூக சீர்திருத்தத்திற்கு உழைத்த பிறகுதான் குடியை நிருத்த முடிந்தது ஆதலால் இது விஷயத்தில் ஒரு முடிவான திட்டத்தை ஏற்படுத்துவதற்கு இன்னமும் சரியான காலம வரவில்லை ஆனாலும் தன் கட்சியாரின் நோக்கம் மது விலக்குதான் ஆதலால் பொதுவாக மதுவிலக்கு கொள்கையை ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று சொல்லி "ஆனால் அது இன்னமும் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் இருக்கிறது" என்றும் சொல்லிருக்கிறார். கலால் மந்திரி அபிப்பிராயப்படி பூரா மது விலக்கு என்பது இன்னமும் அநேககாலங்களுக்குச் செய்யவேண்டிய சமூகச் சீர் திருத்த வேலைகளின் பலனைப் ஏற்பட வேண்டுமே அல்லாமல் சமீபத்திலோ தன்னாலோ செய்யக் கூடும் என்று சொல்வதற்கில்லை. சட்ட சபையில் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது, இம்மந்திரி சொன்னதென்னவென்னவென்றால்,

கவர்மெண்டார் மதுவிலக்கு கொள்கையை ஏற்கனவே ஒப்புக்கொண்டிருப்பதாகவும் கூடுமானவரை அந்த லட்சியத்தை அடைய ஜாக்கிரதையாகவும் பந்தோபஸ்தாகவும் பாடுபடப் போவதாகவும் சொன்னதோடு அதற்கு ஒரு காலத்தை குறிப்பிடுவது உசிதமல்ல வென்றும் படிப்படியாகத்தான் செய்ய வேண்டி வரும் என்றும் சொன்னார்.

இந்தக் காரணங்களால் கலால் இலாக்காவின் கொள்கை முறைகளை ஆக்ஷேபிப்பதற்கு அறிகுறியாக கலால் இலாகா செலவு தொகையில் 100ரூபாய் குறைக்க வேண்டும் என்கிற தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இத்தீர்மானத்தை ஜஸ்டிஸ் கட்சியாருடன் சுயராஜ்யக் கட்சியாரும் ஆதரித்தார்கள். சுயராஜ்யக்கட்சியார் தங்களுடைய கொள்கைகளில் மதுவிலக்கு மிகவும் முக்கியமானதென்று சொன்னவர்கள். இதற்கு ஆதாரம் என்னவென்றால் ஸ்ரீமான் சீனிவாசயங்கார் "இந்த மாகாணத்தைப் பொருத்த வரை சட்ட சபை உள்ள காங்கிரஸ் கட்சியார் சுயராஜ்யத்தைப்போலவே பூரா மதுவிலக்கும் அவ்வளவு முக்கியமானது" என்பதாகக் கருதுவதாக சொல்லி இருக்கிறார், சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கிய மெம்பரும் 5வருஷத்திற்குள் பூரா மதுவிலக்கும் ஏற்படும்படியான மாதிரியால் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார் ஜஸ்டிஸ் கட்சியாராகிய நாங்களும் பூரா மதுவிலக்கு செய்ய வேண்டும் என்பதில் சுயராஜ்யக் கட்சியாரைவிட அதிக ஆவலுள்ளவர்களாயிருந்தாலும், காரியத்தில் நடைபெறத்தக்கதாக இருக்கும் பொருட்டு, பூராமதுவிலக்கு முடிவுபெற 20 வருஷ காலம் குறிப்பிட்டோம். ஏனென்றால் கலாலின்மூலம் 5கோடி ரூபாய் வரும்படி உண்டாக்கி அதன் ஆதரவைப் கொண்டு நடத்தப்படும் ஒரு அரசாங்க இயந்திரத்தைத் திடீரென்று வேறு வருவாய்களால் திருப்தியாக நடைபெறச்செய்ய முடியாது என்றும், அதை சரிப்படுத்தக் கொள்ளவும் வேலைகள் நடைபெறவும் குறைந்தது 20 வருஷமாவது செல்லும் என்றும் கருதினோமே அல்லாமல் வேறல்ல, ஆகவே இது விஷயத்தில் சட்டசபையில் உள்ள எல்லா கட்சியினரும் தங்கள் கவனத்தை ஒன்றுபடுத்தி கலால் மந்திரிகளின் முறைகளைக் கவனிக்கலானோம்.

அதற்கேற்றாப்போலவே சட்ட சபையில் ஒரு பெருத்த விவாதமும் உண்டாயிற்று. கலால் மந்திரி மது விலக்கை ஒப்புக் கொண்ட போதிலும் அதற்கு ஒரு கால வரையை ஏற்படுத்தக் கொஞ்சம்கூட இடம் கொடுக்கவேயில்லை. ஆகவே தங்கள் உதவியில் வாழும் இந்தப் போலி மந்திரிகளின் கொள்கை சுயராஜ்யக் கக்ஷிக்காரருக்கும்கூட பிடிக்கவில்லை. ஆதலால் இந்தத்தீர்மானத்தின்மேல்ஓட்டெடுத்த காலத்தில் மந்திரிகள் மிகவும் கேவலமாக தோற்றுப்போனார்கள். 58 தெரிந்த அங்கத்தினர்கள் மந்திரிகளுக்கு விரோதமாகவும் மந்திரிகளைத்தவிர 18 தெரிந்தெடுத்த அங்கத்தினர்கள் மாத்திரமே மந்திரிகளுக்கு சாதகமாய் ஓட்டு செய்தார்கள். சட்டப்படிக்கு உண்டான ஓட்டுத் தத்துவத்தை இந்த விஷயத்தில் நாம் மிகைபடுத்திச் சொல்லவரவில்லை. இந்த ஓட்டு முடிவானது அவசரத்தில் ஏற்பட்டதல்ல. மிகவும் ஆலோசனையின் பேரிலும் நீண்ட விவாதத்தின்பேரிலுமே நன்றாய்முன்பின் யோசித்துச் செய்யப்பட்டதாகும். வரவு செலவு விவாத திட்டத்தின்பேரில் ஏற்பட்ட இந்தமுடிவை கவனித்துப்பார்த்தால் மந்திரிகளின் நடத்தையை இது கண்டித்ததாகும்.

வங்காள கவர்னராகிய. லிட்டன் பிரபு வங்காள மாகாணத்து மேலது சட்ட சபையைத் திறந்துவைத்த காலத்தில் மந்திரிகள் நடவடிக்கையைப்பற்றி பேசும்போது ஏதாவது ஒரு மந்திரி கொண்டுவரும் முதல் உதவித் தொகை தீர்மானத்தின்பேரில் முறையைக் கண்டித்து ஏதாவது சிறு தொகை குறைக்கப்பட்டாலும் மந்திரிகள் அதை தங்கள் பேரில் பொது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத தீர்மானம் என்பதாக பாவித்து உடனே ராஜீனமா செய்துவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இந்த யோக்கியமான முறையை அனுசரித்து, நமது மந்திரிகள் உடனே தங்கள் பதவியை ராஜீனமா கொடுத்துவிட்டு விலகியிருக்க வேண்டும். அப்படி அவர்கள் செய்யாதிருப்பார்களானால் கவர்ன்மெண்டாராவது உடனே ராஜீனமா செய்யும்படி கேட்டிருக்க வேண்டும். நமது மந்திரிகளிலும் ஒருவர் ராஜ தந்திரத்தில் பேசிய காலத்தில்தான் வேண்டாமென்று எந் நிமிஷத்தில் சொல்லப்படுகிறதோ அதே நிமிஷத்தில்தான் மந்திரி பதவியை விட்டுவிட்டு ஜெய் சீதாராம் என்று வெளிக்கிளம்பிவிடுவதாய் சொன்னார். ஒரு சமயம் இவர் கலால் விஷத்தில் ஏற்பட்ட தீர்மானம் தன்னைக் கட்டுப்படுத்தாது என்று நினைத்தார்போலும். இந்த மந்திரிகள் இன்னமும் பல தோல்விகளையும் அடைந்திருக்கிறார்கள். கல்வி இலாகா மந்திரி கொண்டுவந்த உதவித் தொகை தீர்மானத்தின்பேரிலும் விவாதம் ஏற்பட்ட காலத்தில் அவரது கல்வி முறையைக் கண்டிக்க அறிகுறியாக அங்கத்தினர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதிலும் சரியான தோல்வி அடைந்தார். மறுபடியும் மந்திரி கக்ஷியைச்சேர்ந்த அங்கத்தினரிலேயே ஒருவர் கொண்டுவந்த தீர்மானத்தை மந்திரிகளே எதிர்த்தும் அதிலும் அவர்கள் தோல்வி அடைந்தார்கள்.

எனவே 15ந் தேதி முதல் 31ந் தேதிக்குள்ளாக பதினேழு நாள்களில் நமது மந்திரிகள் இம்மாதிரியான மூன்று தோல்விகளை அடைந்தார்கள். இதே சந்தர்ப்பத்தில் ஆறு வருஷ காலம் நிர்வாகம் செய்த மந்திரி கக்ஷியார் இம்மாதிரி ஒரு தோல்விகூட அடையவில்லை என்று சொல்லுவது குற்றமாகாது. அடுத்தடுத்து இம்மாதிரி மூன்று தோல்வி அடைந்தும் இவர்கள் ராஜீனமா கொடுக்கவே இல்லை. அட்டைகள் போல் ஒட்டிக்கொண்டே இருக்கிறார்கள். இம்மாதிரி மெஜாரிட்டி இல்லாத ஒரு கூட்டத்தை வைத்துக்கொண்டு மாற்றப்பட்ட இலாக்காவை நடத்திக்கொண்டு போவதென்பது சட்ட முறைகளைக் கொஞ்சம் அலக்ஷியம் செய்ததாகவே தெரியவில்லை. இம்மாதிரி தங்களுக்கு மெஜாரிட்டி இல்லாமலும் வேறு ஒரு கக்ஷியாகிய சுயராஜ்யக்கக்ஷியாருடைய தயவின்பேரிலும் இருந்துவரும் இந்தமாதிரிகளுடைய நிலைமையைவிட கேவலமான நிலைமை வேறு ஒன்றுமே இல்லை. இங்கிலாந்தில் டிஸ்ரேலி பிரபு என்பவர் ஒரு காலத்தில் தனக்கு மெஜாரிட்டி இல்லாத காலத்தில் மந்திரி பதவியை ஒப்புக்கொள்வதைப்பற்றி பேசும்போது "எனக்கு மெஜாரிட்டி இல்லாமல் நான் மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ளுவேனேயானால் எதிர்கக்ஷியார்கள் ஒன்று சேர்ந்துகொண்டு நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவருவதை விட ஒவ்வொரு விஷயத்திலும் நான் அவர்களை பல்லைக்காட்டிக்கெஞ்சும்படியாக அடிக்கடி என்னை சில்லரை அவமானத்திற்குள் படுத்தி, கடைசியாக பார்லிமெண்டையே கலைக்க ஏற்பாடு செய்வார்கள். பிறகு நான் வெளியில் போனால் மதிப்புக் குறைவாகவும் இழிவாகவும் தோல்வியுற்றவர்கள் என்று பரிகாசம் செய்வார்கள். அதோடு ஜனங்களுக்கும் ராஜாங்கத்திற்கும் எங்களால் யாதொரு நன்மையும் ஏற்படாது என்று முடிவு கட்டிவிடுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார். ஜஸ்டிஸ் பத்திரிகை மிக ஒழுங்காய் இதை எடுத்துச்சொல்லி இருப்பது போலவே நமது மாகாண மந்திரிகளுக்கு இது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது. நமது 'முதல்' மந்திரியாரின் நிலைமையோ ஒரு சுயராஜ்யக்கக்ஷி அங்கத்தினர்கள் கொண்டுவந்த யூனிவர்சிட்டி பில்லானது தனது கொள்கைக்கும் தனக்கும் பிடித்தமில்லாததாயிருந்த போதிலும் அக்கக்ஷிக்குப் பயந்து கொண்டு ஆதரவளிக்க வேண்டியதாய் விட்டது. சுகாதார இலாகா மந்திரியோ ஜனரல் ஆஸ்பத்திரி தீர்மானத்தின்போது அதைத் தள்ளிவைத்தபிறகுகூட சுயராஜ்யக்கக்ஷி அங்கத்தினர் மந்திரிகள் இன்ன இன்னபடி செய்து தீரவேண்டும் என்று

(13ம் பக்கம் பார்க்க)



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஸு சித்திரை-மீ 26-உ

பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

மதுரை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டிற்குப்பிறகு அம்மகாநாட்டின் தீர்மானங்களைத் தமிழ்நாட்டில் அமுலில்கொண்டுவருவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா மகாநாடு கூட்டவேண்டுமென்று 3, 4 மாதங்களாகவே எழுதிவந்திருப்பது வாசகர்களுக்குத் தெரியும். ஆனால் சில ஜில்லாக்கள் இதைப்பற்றி எவ்விதக் கவலையும் எடுத்துக் கொண்டதாக தெரியவேயில்லை. தஞ்சை, கோயமுத்தூர், சேலம், வடஆற்காடு ஆகிய ஜில்லாக்கள் மாத்திரம் மகாநாடு கூட்டும் விஷயத்தில் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது வெளிப்படையாய் தெரியவருகிறது. மற்றும் இரண்டொரு ஜில்லாக்கள் நமக்கு மாத்திரம் தனித்த முறையில் தெரியப்படுத்தியிருக்கிறதே அல்லாமல் காரியத்தில் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொண்டதாய் தெரியவில்லை. கோயமுத்தூர் ஜில்லாவில் இம்மாத மத்தியில் மகாநாட்டை நடத்துவதாயிருந்ததானது சிலரின் சௌகரியத்தை உத்தேசித்து அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது. ஆனபோதிலும் மகாநாட்டிற்காக ஆகவேண்டிய விஷயங்களை கோயமுத்தூர் பிரமுகர்களான ஸ்ரீமான்கள் வெரிவாட செட்டியார், சம்மந்த முதலியார இரத்தினசபாபதி முதலியார், சாத்தப்ப செட்டியார், இரத்தினசபாபதி கவுண்டர், P. S. G. வெங்கிடுசாமி நாயுடு, அருணாசலம் செட்டியார் முதலிய கனவான்கள் வெகு ஊக்கமாகக் கவனித்து வருகிறார்கள். இதுவரை ஏறக்குறைய 2500 ரூபாய்வரை வசூலும் செய்துவிட்டார்கள். மற்றபடி வட ஆற்காடு ஜில்லாக்காரரும் கூடுமானவரை ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். பல காரணங்களால் ஒத்திவைக்க நேரிட்டாலும் சீக்கிரம் நடைபெறும். சேலம் மகாநாடும் சீக்கிரத்தில் நடைபெறலாம். ஆனால் அந்தஜில்லா பிரமுகர்கள் இது சமயம் ஜில்லா போர்டு தேர்தல்களில் ஈடுபட்டிருப்பதால் இது முடிந்தபிறகுதான் கவனிக்கக்கூடும் என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

மற்றபடி தஞ்சை ஜில்லா மகாநாடோ, நேற்றும் இன்றுமாய் மாயவரத்தில் மயூரமணி ஸ்ரீமான் R. சின்னையா பிள்ளை அவர்கள் முயற்சியிலும் மற்றும் பல கனவான்கள் முயற்சியாலும் மலையாளம் ஸ்ரீமான் திவான் பகதூர் M. கிருஷ்ணன் நாயர் B. A. B. L., M. L. C. அவர்கள் தலைமையின்கீழ் சிறப்பாக நடைபெறுகிறது. வரவேற்புத் தலைவரான மயூரமணி சின்னையா பிள்ளை அவர்களின் வரவேற்பு பிரசங்கம் இனியும் நமது கைக்கு கிடைக்கவில்லை.

மகாநாட்டின் அக்கிராசனரான திவான் பகதூர் கிருஷ்ணன் நாயரின் அக்கிராசனப் பிரசங்கத்தை இன்று மற்றோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். அதை ஒவ்வொருவரும் தயவுசெய்து ஊன்றிப்படிக்க வேண்டுமாய் கோருகிறோம். திவான்பகதூர் நாயர் அவர்கள் தனது பிரசங்கத்தில் முதலாவது பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவத்தைப்பற்றியும் கொள்கைகளைப் பற்றியும் அது ஜன நாயகத்திற்கு பாடுபடுவதாகும் என்பதைப்பற்றியும் வெகு விளக்கமாக எடுத்துச்சொல்லி யிருப்பதோடு சுயநலக்காரர் இவ்வியக்கத்தின்மீது கூறப்படும் பழிகளுக்குச் சரியான ஆணித்தரமான பதில்களும் சொல்லியிருக்கிறார். அவற்றுள் உத்தியோக வேட்டை என்பதைப்பற்றி சொல்லியிருக்கும் விஷயத்தை நடுநிலைமைக்காரர் எவர் படித்துப்பார்த்தாலும், எவ்வளவு அறியாதவராயிருந்தாலும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவம் இன்னது என்பது விளங்கிவிடும்.

பிறகு தேசத்தின் பெரும்பகுதியினரான விவசாயிகளின் விஷயமாய் சாசுவத நிலத்தீர்வையின் அவஸ்யத்தைப்பற்றியும் அதற்காக அவர்கள் வெகு நாளாக அவர்கள் பாடுபட்டு வந்திருப்பதைப்பற்றியும் சொல்லியிருக்கிறார். அதன்பிறகு நமது மாகாண அரசியல் நிலைமையைப்பற்றியதாக தற்கால மந்திரி சபையைப்பற்றியும் அதன் ஊழல்களைப் பற்றியும் அதனால் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏற்படும் கெடுதியைப்பற்றியும் உள்ளது உள்ளபடி எடுத்துச்சொல்லியிருக்கிறார். அதன்பிறகு நமது நாட்டுக் காங்கிரசின் யோக்கியதையையும் காங்கிரஸ் பக்தர்களான சுயராஜ்யக் கக்ஷியாரின் யோக்கியதையையும் அவர்கள் மக்களை ஏமாற்றி துரோகம் செய்த விஷயத்தையும் எடுத்துச் சொல்லி இருப்பதோடு அப்பேரை வைத்துக் கொண்டு பார்ப்பனரல்லாதாருக்குச் செய்து வரும் கெடுதிகளையும் சொல்லியிருக்கிறார். இதில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்கிற பார்ப்பனர் கொண்டுவந்த யூனிவர்சிடி அமென்ட்மெண்ட் பில் என்கிற சர்வ கலாசாலை சட்டத்திருத்த மசோதா என்பதையும் அதன் சூழ்ச்சியையும் விளக்கி அதை உதாரணமாகக் காட்டி இருக்கிறார் பிறகு லார்ட் பர்க்கன் ஹெட்டின் பேச்சைப்பற்றியும், இனி அடுத்த நிலைமை என்ன என்பதைப் பற்றியும், வங்காள அடக்கு முறையைப்பற்றியும், தென் ஆப்பிரிக்கா இந்தியர்களைப் பற்றியும் இந்த இயக்கப் பிரசாரத்தைப் பற்றியும் விவாதித்து விவரமாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர் சொல்லியிருப்பதுகள் எல்லாம் அநேகமாய் மிகவும் சரியானது என்றே நாம் ஒப்புக்கொள்ளுகிறோமாயினும், இனியும் சொல்லி இருக்கவேண்டிய இரண்டொரு முக்கிய விஷயங்களைச் சரியாகச்சொல்ல விட்டுவிட்டார் என்றே சொல்லுவோம். அதாவது மதுரை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நிர்மாணத்திட்டம் என்பதைப் பற்றித்தான். ஏனெனில் எவ்வளவு அரசியல் தத்துவத்தைப்பற்றி பேசினாலும் கடைசியில் நாம் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றியும் பேசினால்தான் அப்பேச்சு முடிவு பெற்றதாகும். அரசியல் திட்டங்கள் என்பதுகளினாலும், அரசியல் இயக்கங்கள் என்பதுகளினாலுமே நமது நாடு இக்கெடுதிக்கு ஆளாயிருக்கிறது என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதிலிருந்து விடுபட வேண்டுமானால் நிர்மாண திட்டத்தைத் தவிர வேறு எவ்வழிகளினாலும் முடியவே முடியாது என்பது நமதபிப்பிராயம். மேலே சொல்லியுள்ள குற்றமுள்ளதும் நாணயக்குறைவுள்ளதுமான மந்திரிமார்களின் ஆக்ஷி முறையும் காங்கிரஸ் சுயராஜ்யக் கக்ஷி ஆகியதுகளும் அடியோடு ஒழிந்துபோவதாகவோ அல்லது ஜஸ்டிஸ் கக்ஷியார் கைக்கே வந்துவிடுவதாகவோ வைத்துக்கொண்டாலும் இவர்கள் செய்ததைத்தான் ஜஸ்டிஸ் கட்சியாரும் செய்ய முடியுமே அல்லாமல் அதுகளினால் வேறொன்றுமே பிரமாதமாகச் செய்துவிடமுடியாது. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சியார் ஆதிக்கத்தில் உள்ள காலத்தில் என்ன செய்தார்களோ அதைத்தான் என்னவென்னமோ கட்சியார் என்று பெயர் சொல்லிக்கொள்ளுகிறவர்களும் செய்கிறார்கள். அதற்கும் இதற்கும் உள்ள ஒரே ஒரு வித்தியாசம் மாத்திரம் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியார் இதே காரியத்தை நாணயமாகவும் யோக்கியமாகவும் வெளிப்படையாகவும் செய்துவந்தார்கள். மக்களிடத்தில் உண்மையைச் சொல்லி சொன்னதுபோல் உண்மையாய் நடந்துகொண்டார்கள், காங்கிரஸ் முதலிய கட்சிக்காரர்கள் என்பவர்களோ நாணயக் குறைவாகவும் யோக்கியப் பொருப்பற்றதனமாகவும் மக்களை ஏமாற்றியதோடு தனித்தனி சுயநலக்காரராயும் நடந்துகொண்டார்கள். ஆனால் இது அவர்கள் குற்றமல்ல அவ்வியக்கங்களின் தத்துவங்களே அதுதான் ஆகவே நடந்துகொண்டமாதிரிதான் வித்தியாசமே அல்லாமல் செய்யக்கூடியதில் எல்லாம் ஒன்றேதான். ஆதலால் இவற்றைப்பற்றி நமக்கு அதிகமான கவலை இல்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் உண்மையான நல்ல பலனை அளிக்கக் கூடிய நிர்மாண திட்டத்தினிடம் தான் மக்களின் கவனத்தை இழுக்கும்படி செய்ய வேண்டும அதுவேதான் நமது மகாநாடுகளுக்கு அமுலில் கொண்டுவர வேண்டிய முக்கிய திட்டங்களாகும். இக்காரியங்களைப் பற்றி ஸ்ரீமான் நாடார் முன்னுரைப் பிரசாரத்தில் சொல்லாவிட்டாலும் அவர் தலைமையில் கூடியுள்ள மகாநாடு செய்து தீருமென்றே உறுதியாக நம்பி இருக்கிறோம்.

கோயமுத்தூர் ஜில்லா 4வது பார்ப்பனரல்லதார் மகா நாடு

கோயமுத்தூரில் "இந்து இருபாகரநிதி" லிமிடெட் கட்டடத்தில் 15-5-27தேதி மகாநாட்டு உபசாரணைக்கமிட்டி கூட்டம் கூடி நிர்வாகசபை அக்கிராசனர், தலைவர் முதலிய அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கப்படும் ஜில்லாப்பிரமுகர்கள் எல்லோரும் விஜயம் செய்யுமாறுகோரப்படுகிறார்கள். மகா நாட்டுநிதிக்கு உதவி செய்தவர்களின் ஜாபிதா அடுத்த இதழில் வெளிவரும்.

காங்கிரஸ் புரட்டு.

காங்கிரஸ் என்கிற புரட்டு என்றைக்கு நம்ம நாட்டைவிட்டு ஒழியுமோ அன்று தான் நம்ம நாடு ஒரு சமயம் ஏழைகள் கஷ்டமொழிந்து மக்கள் சமத்துவமடைந்து ஒற்றுமை ஏற்பட்டு தரித்திரம் நீங்கி விடுதலை அடைவதானால் அடையக்கூடும் என்றும், எதுவரை இக்காங்கிரஸ் புரட்டு நமது நாட்டில் இருக்குமோ அது வரை நமது நாட்டில் தற்கால மிருந்துவரும் கஷ்டங்கள் கொஞ்சமும் நீங்க இடமில்லாமல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருவதுடன் படித்த கூட்டமும் பணக்காரக் கூட்டமும் மாத்திரம் சில நாளைக்கு இனியும் கொஞ்சம் மேன்மையாய் வாழ்ந்து விட்டு பிறகு எல்லோருமே நீக்ரினவர் போலவும் வாலில்லாக் குரங்கு போலவும் வாழ வேண்டியது தானே ஒழிய வேறில்லை என்பது நமது அபிப்பிராயம் என்பதாக பல தடவைகளில் எடுத்துக்காட்டி இருக்கிறோம். எவ்வளவு தூரம் நாம் எடுத்துக் காட்டியும் இன்னமும் மக்களை காங்கிரஸ் பெயரை சொல்லி ஏமாற்றுங் கூட்டத்தார் கொஞ்சமும் இதை லக்ஷியம் செய்யாமல் மக்களின் அறியாமையை உபயோகப்படுத்திக் கொண்டு எடுத்ததற்கு எல்லாம் காங்கிரசு காங்கிரசு என்று பேசி பாமர மக்களைக் கிட்டிச் சுவராக்கி வருகிறார்கள். ஏனெனில் இந்த காங்கிரஸ் மந்திரத்தை பார்ப்பனரும் அவர்கள் கொள்கை கொண்ட பார்ப்பனரல்லாதாரும் மற்றும் பல பொருப்பற்ற ஆசாமிகளும் தாங்கள் தங்கள் சுய நலத்திற்கு ஒரு பெரிய சாதனமாகக் கொண்டு விட்டார்கள். இதை மாற்றும்படி செய்வதென்றால் பெரிய கஷ்டப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. தூங்குபவர்களை எழுப்புவதென்றால் சாதாரணமாய் ஒரு சப்தத்திலோ இரண்டு அல்லது மூன்று சப்தத்திலோ எழுப்பிவிடலாம். தூக்கமில்லாமல் தூங்குவதுபோலவேஷம்போடுகிறவர்களை எப்படி எழுப்ப முடியும் கைகால் ஒடியும்படிதட்டினால்; தட்டினால்ஒழிய ஒருக்காலமும் எழுந்திருக்க மாட்டார்கள் என்பதே நமது அபிப்பிராயம். நாம் காங்கிரசின் புரட்டுகளை கண்டிக்கும்போது அதை ஒழிக்கவேண்டும் என்று சொல்லும்போதும் விளக்கமாகவும் விபரமாகவும் ஒவ்வொரு விஷயமாய் எடுத்து பிரித்துப் பிரித்துச் சொல்லி அது ஏற்பட்டது முதல் அது ஏற்படாததற்கு முன் முதல் உள்ள நிலைமையும் அதனால் நமது நாட்டிற்கும் குறிப்பாய் ஏழைமக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களுக்கும் ஏற்பட்ட கஷ்டங்களையும் நாட்டின் செல்வ நிலைமை, கைத்தொழில் நிலைமை, வியாபார நிலைமை, விவசாய நிலைமை, நாணைய நிலைமை, ஒழுக்க நிலைமை, நீதி நிர்வாக நிலைமை முதலியதுகளையும், ஒவ்வொன்றாய் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். நன்றாய் எழுதியும் வந்திருக்கிறோம். அநேகரிடம் நேரில் பேசி அவர்களை ஒப்புக்கொள்ளும்படி செய்தும் வந்திருக்கிறோம். இவ்வளவையும் தெரிந்த பலரும் பல பத்திரிகை காரர்களும்இவைகளுக்குக் கொஞ்சமாவது சமாதானம் சொல்லாமல் ஒன்றும் தெரியாதவர்கள் போல் மறுபடியும் பேச்சு பேச்சுக்கு காங்கிரஸ் காங்கிரஸ் என்று பேசியும் எழுதியும் வருகிறார்கள்; சிலர் தாங்களாக பார்ப்பனரைத் திட்டவேண்டிய சமயம் வந்தால் மாத்திரம் அந்த சமயம் 2 வார்த்தை ஜாடைமாடையாகக் காங்கிரசைக் கண்டித்து விட்டு அதுவும் தாங்கள் மறுபடியும் புரண்டு கொள்வதற்கு இடமிருக்கும்படியாக வைத்து விட்டு தங்களுக்கு அவசியமிருக்கும்போது திரும்பவும் காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது சமயம் சென்னை மாகாணத்திலாவது தமிழ் நாட்டிலாவது காங்கிரஸ் பேரைச் சொல்லாமல் நமக்கு பத்திரிகை குடிஅரசைத் தவிர ஒன்று கூட இல்லை என்றே சொல்லலாம். ஏறக்குறைய எல்லாத் தலைவர்கள் என்போர்களும் தேசாபிமானிகள் என்போரும் தேசபக்தர்கள் என்போரும் இதே மந்திரமாகத்தான் இருக்கிறார்கள். சென்ற தேர்தலில் காங்கிரஸ் புரட்டுக்குக் கொஞ்சம் வெற்றி ஏற்பட்டுவிட்டதாக ஏற்பட்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சிலரும் ஜஸ்டிஸ் கட்சி பத்திரிகைகளுக்கும் கூட அந்த மயக்கம் கொஞ்சம் ஏற்பட்டிருப்பதாக நமக்குத் தெரியவருகிறது. ஆகவே இவற்றை இப்படியே விட்டுக்கொண்டு வந்தால் சில படித்தவர்களும் சில பத்திரிகைக்காரரும் சில தேசீயத் தலைவர்கள் தேசபக்தர்கள் தேசாபிமானிகள் என்போர்களும் ஏதோ ஒரு விதத்தில் பதவி பட்டம் உத்தியோகம் வயிர் பிழைப்பு முதலியதுகள் பெற்று காலங்கழித்து வரலாமே அல்லாமல் ஒருக்காலமும் நமது நாடு முன் சொன்ன கேடுகள் நீங்கி முன்னேற்றமடையும் என்கிற எண்ணமே கடுகளவாவது நமக்கு இல்லை. அதோடும் முன்சொன்னதுபோலவே பாழாகிவிடுமென்றே சொல்லுவோம்.

(மகாத்மா ஆதிக்கத்திலிருந்த காங்கிரசை நீக்கி இப்போதிய காங்கிரசை நாம் பேசுகிறோம்) காங்கிரஸ் என்றால் என்ன? அது கொள்கைக்காக மதிக்கப்படுவதா? பெயருக்காக மதிக்கப்படுவதா? அதனால் ஏற்படும் பலனுக்காக மதிக்கப்படுவதா? இந்தியா அரசியலில் முன்னேற்றமடைய சுயராஜ்யம் பெற இந்தியர்களால் ஏற்படுத்திக்கொண்ட ஒரு மகாசபை அல்லது ஒரு இயக்கம் அல்லது ஒரு ஸ்தாபனம் என்பதானால் சுயராஜ்யம் என்றால் என்ன? இந்த சுயராஜ்யத்திற்கு காங்கிரஸ் திட்டம் என்ன? இந்தியர்கள் என்றால் யார் அவர்களில் யார் யார் காங்கிரசில் சேர்ந்திருக்கிறார்கள்.

பெரும்பான்மையான இந்திய மக்கள் வாழவும் பெரும்பான்மையான இந்தியக்குறைகள்நீங்கவும் காங்கிரசில் என்ன திட்டம் இருக்கிறது இது நிற்க, காங்கிரஸ் ஏற்பட்ட பிறகு இந்தியமக்களுக்கு அது எந்தத் துறையில் அனுகூலம் செய்து இருக்கிறது? அது ஏற்படாததற்கு முன் அத்துறைகள் எப்படி இருந்தது? அதனால் நமக்கு ஏற்பட்ட லாபம் என்ன? காங்கிரசுக்கு முன்னால் அரசியலில்நமது சுதந்திரமென்ன? இப்போதுஎன்ன காங்கிரசுக்கு முன்னால் நமது அரசியல் செலவு என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் நாம் செலுத்திய வரி என்ன? இப்போது என்ன? காங்கிரசிக்கு முன்னால் நமக்குள் இருந்த ஒற்றுமை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் பார்ப்பனரல்லாதார் நிலைமை என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் பார்ப்பனர்கள் நிலைமை என்ன இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் அரசாங்கத்தார் நம்மிடம் வைத்து இருந்த மதிப்பு என்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் நீதி வழங்கும் முறைஎன்ன? இப்போது என்ன? காங்கிரசுக்கு முன்னால் மக்கள் அறிவு ஒழுக்கம் நாணயம் இதுகள் எப்படி இருந்தது இப்போது எப்படி இருக்கிறது.

காங்கிரஸ் ஒரு கூட்டத்தினர்க்கே நலனை அளித்து மற்றொரு கூட்டத்திற்கு இழிவைஅளிப்பதானால் அது பொது இயக்கமாகுமா?

இந்தியாவில்உள்ளபல வகுப்பார் அதாவதுமகமதியர்கிறிஸ்தவர்மகமதிவரல்லாதார்தீண்டாதார் சீக்கியர் புத்தர் பார்சி யூதர் முதலிய பல வகுப்பாரிலும் உள்ள பெரும்பான்மையான மக்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகிறார்களா அல்லது அந்தந்த சமூக வகுப்பு மகாநாடுகள் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகிதா?

ஏழரைக்கோடி மக்களுள்ளமுஸ்லீம்களின் சங்கங்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகின்றதா? 6 கோடி உள்ள தீண்டாதார் அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் என்பவர்கள் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகிறார்களா? புத்த சமூகமும் சீக்கியசமூகமும் காங்கிரசை ஒப்புக்கொள்ளுகின்றதா? சுமார் 12கோடிக்கு மேல்பட்ட மகமதியரல்லாதாராகிய இந்துக்கள் என்றுசொல்லிக்கொள்வோர்களுக்கு உள்ள இந்து மகா சபை மூலமாகவோ பார்ப்பனசபை மூலமாகவோ ஆரிய சபை மூலமாகவோ பார்ப்னரல்லாதார் சபை மூலமாக மற்றும் பல வகுப்பு சமூக மூலமாகவோ காங்கிரசு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதா? இச்சபைகளோ அரசாங்கமாவது ஒப்புக்கொண்டிருக்கிறதா.

அல்லது அரசியலுக்கு காங்கிரஸ் ஒன்றுதான் அதை விட வேறு ஸ்தானம் இல்லை என்பதை ஆவது காங்கிரஸ் சொல்ல முடியுமா? மிதவாதக் கட்சி ஓம் ரூல் கட்சி சுயேச்சைக் கட்சி ஜஸ்டிஸ் கட்சிஆகியதுகளை விட சர்க்காரில் காங்கிரசுக்கு என்ன அதிகமான மரியாதை இருக்கிறது? நாட்டிலாவது என்ன மரியாதை இருக்கிறது? காங்கிரசுக்கு நிலையான ஒரு குறிப்பிட்ட கொள்கை என்னஇருக்கிறது? அதற்கெனகுறிப்பிட்ட நாணயம் என்ன இருக்கிறது? சுமார் நாற்பது வருஷத்திற்குள்ளாக காங்கிரஸ் எத்தெத்த கட்சியார் கைக்கு போய் வந்திருக்கிறது?

காங்கிரசைக்கைப்பற்றுபவர் தன் இஷ்டம் போல் காங்கிரசை நடத்தக்கூடியதாய் இருக்கிறதே அல்லாமல், காங்கிரசில் சேருகிறவர்கள் காங்கிரஸ் சொல்கிறபடி நடக்கவேண்டும் என்கிறதாக ஏதாவது நிபந்தனை இருக்கிறதா.

அது ஏதாவது ஒருசட்டபடிகட்டுப்பட்டசபையா? அதற்குஏதாவதுகொள்கைவிதிமுதலியதுகள் ஏற்படுத்திமக்கள்கட்டுப்படத்தகுந்த மாதிரி சட்டப்படிபதிவுசெய்யப்பட்டிருக்கிறதா? அல்லதுகட்டுப்படவேண்டிய அவசியமிருக்கிறதா? அல்லது யோக்கியர்கள் நாணையக்காரர்கள் ஒழுக்கமுள்ளவர்கள் ஆகியவர்கள் தவிர மற்றவர்களை அதில் சேர்க்கமுடியாதபடி அதற்கு ஏதாவது பந்தோபஸ்து ஏற்படுத்தி இருக்கிறதா? நாளைக்கு வேறு ஒரு மனிதன் 10லக்ஷமோ, 20லக்ஷமோ 1 கோடி ரூபாய்செலவுசெய்தால்காங்கிரசைத்தன் இஷ்டப்படி யெல்லாம் திருப்ப முடியுமா முடியாதா சர்க்காருக்கு உள் உளவாயிருந்து அரசாங்கத்திற்கும் ஏதோ ஒரு வகுப்புக்கும் அனுகூலமாகவும் தேசத்திற்கும் மற்ற வகுப்பாருக்கும் ஆபத்தாகவும் காங்கிரசில் தீர்மானங்கள் நிறைவேற்ற முடியுமா முடியாதா? அப்படி இதுவரை நடக்கவில்லை என்பதாக யாராவது உறுதி கூறமுடியுமா?

இம்மாதிரி பொருப்பில்லாததும் எடுப்பார் கைக்குழந்தையாகவும் கைபிடித்தவனுக்கெல்லாம் பெண்டாகவும்உள்ளதும்அயோக்கியர்களுக்கும் துரோகிகளுக்கும் தங்கள் தங்கள் இஷ்டம்போல காரியத்தைச் சாதித்துக் கொள்ளக்கூடியதுமான ஒரு ஸ்தாபனத்தை இதெல்லாம் தெரிந்தும் தேசப் பொது ஸ்தாபனமென்று யாராவது சொல்வார்களானால் அவர்கள் அறிவாளிகளா? யோக்கியர்களா? ஸ்ரீமான்கள் ஸ்ரீனிவாசய்யங்காரும், எ. ரங்கசாமி ஐயங்காரும் உண்மையிலேயே நமது நாட்டு பொது அரசியல் ஸ்தாபனம் என்பதற்கு முறையே தலைவராகவும் காரியதரிசியாகவும் இருக்க யோக்கியதை உள்ளவர்களா? இவர்களைத் தெரிந்தெடுக்கும் ஜனங்களும் ஸ்தாபனங்களும் ஜனப்பிரதிநிதிகளாவார்களா? ஜனப்பிரதிநிதியாக யோக்கியதை உடையவர்களா அல்லாமலும் இவற்றை சொல்லுவதினாலேயே நம்மை காங்கிரஸ் காங்கிரஸ் என்று கத்துகிறவர்களைவிட தேசாபிமானத்தில் குறைந்தவன் என்று யாராவது சொல்லக்கூடுமா இதைத் தவிர தேசாபிமானி என்று காட்டிக்கொள்வதற்கு உள்ளபரீக்ஷை எதிலாவது மற்றவர்களை விட நாம் குறைந்திருக்கிறோமா அல்லது நமக்கு தேசாபிமானம் இருக்க நியாயமில்லை என்று சொல்லுவதற்கு ஏதாவது இரகசியமோ ஆதாரமோ இருக்கிறதா.

"காங்கிரஸ் பிரசாரம் செய்கிறவர்கள் அதிகமான கஷ்டமும் தியாகமும் அடையவும் செய்யவும் வேண்டியிருக்கிறது. அதற்கு எதிர்பிரசாரம் செய்கிற நமக்கு சுகமும் லாபமும் இருக்கிறது" என்று யாராவது சொல்ல முடியுமா காங்கிரசிலிருப்பவர்களுக்கு இன்னமும் பதவியும் பட்டமும் உத்தியோகமும் அவர்கள் பிள்ளை குட்டிகளுக்கு உத்தியோகமும் சர்க்கார் சிநேகமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. காங்கிரசின் புரட்டுகளை எடுத்துக்காட்டி கண்டிக்கிற நமக்கு இன்னமும் எங்கு போனாலும் இரகசியப் போலீசு தொடர்ந்து கொண்டும் போகிற இடங்களிலெல்லாம் வந்து துப்பு விசாரிப்பதும் சில இடங்களில் பேசுவதை எழுதிக்கொண்டு போவதுமாகத்தான் இருந்து வருகின்றது. அன்றியும் காங்கிரஸ்பெயரைச் சொல்லிக்கொண்டுகாங்கிரஸ் பிரசாரம் செய்கிறஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமிஐயங்கார், சத்தியமூர்த்தி, எம். கே. ஆச்சாரி, பி. வரதராஜுலு நாயுடு, திரு. வி. கலியாணசுந்திர முதலியார் ஆகிய தலைவர்களானாலும் சரி அவர்கள் எவ்வளவு தூரம் சர்க்கார் உத்திரவையோ சட்டத்தையோ மீறக்கூடியதைரியமோ அல்லது ஜெயிலுக்கு போகக்கூடிய துணிவோ அல்லது சர்க்கார் நடத்தையைக் கண்டிக்கக் கூடிய பான்மையோ ஆகிய வற்றைவிட நாம் போன்றவர்கள் ஏதாவது பயந்தோ பின்வாங்கியோ அலக்ஷியமாயோ இருக்கிறோம் என்பதாக யாராவது சொல்லக்கூடுமா காங்கிரசு தலைவர்கள் பக்தர்கள் பிரசாரர்கள் இவர்கள் காங்கிரசின் பேர் சொல்வதன் மூலம் அடையும் நஷ்டத்தை விட கொஞ்சமாவது, அல்லது லாபத்தைவிட அதிகமாகவாவது காங்கிரசை கண்டிப்பதின் மூலம் நாம் அடைகிறோமா? இவைகளை பொது ஜனங்கள் யோசிக்கவேண்டும். வெறும் குருட்டு பக்தியாலும் மூட நம்பிக்கையாலும் தேசம் பாழாகப் போக விடக்கூடாது நாம் இப்படி எழுதுவதைப் பார்த்து சில மூடபக்தியும் குருட்டு நம்பிக்கையுமுள்ள நண்பர்கள் உண்மையிலேயே நம்மீது கோபம் கொள்ளுவார்கள்.

இக்காங்கிரஸ் புரட்டைப்போலவே மதப்புரட்டையும் வெளியிலெடுத்துச் சொல்லும்போது "நீ, வேறு எதை வேண்டுமானாலும் வைது கொள் மதத்தைப்பற்றி மாத்திரம் ஒன்றும் பேசாதே அதின் முறைகளை வேண்டுமானால் திருத்தப்பாடுபடு அடியோடு மதத்தையே குற்றம் சொன்னால்அது மகாபாதகமாகும்" என்றுசொல்லவருகிறார்கள். ஆனால் மதம் என்றால் என்ன என்றுகேட்டால் "இதெல்லாம்விதண்டா வாதம்" என்கிறார்கள். இதுபோலவே காங்கிரசும் இருக்கிறது. இதில் ஒரு விசேஷம் மதசம்மந்தமானவர்கள் 'நீ காங்கிரசைப்பற்றி சொல்வது சரி" மதம் அப்படியல்ல என்கிறார்கள். காங்கிரஸ சம்மந்தமானவைகள் நீ மதத்தைப்பற்றி சொல்வது சரி காங்கிரஸ் அப்படி அல்ல என்கிறார்கள்.

ஆகவே இவ்விரண்டும் சிலர் வாழ்ப்பலரைப் பலிகொடுக்கும் ஸாதனங்களே அல்லாமல்வேறல்ல.

ஆன போதிலும் காங்கிரஸ் என்பதைப்பற்றி சில விஷயங்கள் கவனிக்கும்படிவேண்டுகிறோம்.

அன்புள்ள வாசகர்களே! காங்கிரசினால் தேசம் இதுவரைபாழானதுபோதும், பார்ப்பனர்கள் பதவியும் உத்தியோகமும் பெற்றதுபோதும். பார்ப்பனரல்லாதார்கீழ் நிலைக்கு வந்தது போதும் காங்கிரஸ் பேரைச் சொல்லிக்கொண்டு பலர் வயிறு வளர்ப்பதும் போதும். இனியாவது கொஞ்சம் ஏழை மக்களையும் தொழிலாளர்களையும்குடியானவர்களையும் திரும்பிப்பாருங்கள். மகாத்மா காந்தியை விட இந்தக் காங்கிரஸ் பக்தர்கள் பெரிய தேசாபிமானிகள் என்று எண்ணி ஏமாறாதீர்கள்.

மகாத்மா காங்கிரசில் இருந்த காரணமே 36 வருஷ காங்கிரஸ் நாட்டுக்கும் பல சமூகங்களுக்கும் ஏழைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் செய்த கொடுமையை விலக்கத்தானே அல்லாமல வேறல்ல அது முடியாது என்று தெரிந்த உடனேதான், தான் வேறுஒரு இயக்கத்தைஆரம்பித்துக் கொண்டு மெள்ள நழுவி விட்டார் மகாத்மாவை பூஜிக்கிறவர்கள் அவரது கொள்கைக்கு காங்கிரசில் இடம் வைத்திருக்கிறார்களா.

இக்காங்கிரஸ கொள்கையை மகாத்மா ஒப்புக்கொள்ளுகிறாரா.

போருக்குறைக்கு தொழிலாளர்களை காங்கிரசில் சேரும்படி சில காங்கிரசின் தலைவர்கள் அதாவது ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடுவும் கல்யாணசுந்திர முதலியாரும் சொல்ல ஆரம்பித்திருப்பதைப் பார்க்கும்போது நமக்கு வயிருபற்றி எறிகிறது. தொழிலாளர்கள்கெட வேண்டுமானால் இப்போதிருப்பதை விட இன்னமும் கேவலமான நிலைமைக்கு வந்து மிருக நிலை அடையவேண்டுமானால் தொழிலாளர் காங்கிரசில் சேரட்டும். தொழிலாளர் உண்மையான தொழிலாளர்களாகி தொழிலாளர்களாலேயே உலகம் முன்னுக்குவரத்தக்க யோக்கியதை ஏற்பட்டு தொழிலாளர்களே இந்நாட்டில் ஆட்சி செலுத்தத்தக்க யோக்கியதை ஏற்பட வேண்டுமானால் அவர்கள் காங்கிரசை விட்டு விலகி இருப்பதோடு காங்கிரசு என்று சொல்லுகிறவர்களையும் தங்கள் கூட்டத்தில் சேர்க்காமல் இருக்கட்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம். தொழிலாளிகள் முதலாளிகள் இடம் சிக்கிக்கொண்டு படுகிறபாடு போராமல்எறியும் நெருப்புக்கு எண்ணை ஊற்றுவது போல் காங்கிரசுக்காரரிடமும் சிக்கிக்கொண்டு சீரழிய வைப்பது பெரிய பாவம் என்றே சொல்லுவோம். முதலாளிகளின் கொள்கைகளை விட காங்கிரஸ காரர்களின் கொள்கை ஒரு விதத்திலும் யோக்கியமானதல்ல காங்கிரசுக்காரர்கள் தொழிலாளிகளுக்கு பொரிவைப்பது "அங்கேண்டி மகளே ஆலாய்ப்பரக்கிறாய் இங்கேவா காற்றாய்ப் பறக்கலாம்" என்பதுபோலிருக்கிறதே அல்லாமல் வேறில்லை காங்கிரசினால் வரப்போகும் சீர்திருத்தம் சுயராஜ்யம் இவைகளைவிட வெள்ளைக்காரர் தானாகவே செய்யும் சீர்திருத்தம் மேலானதென்றே சொல்லலாம். அவன் ஒன்றும் செய்யாவிட்டாலும் இவ்வளவு மோசம் ஏற்படாமலாவது இருக்கும்.

காங்கிரஸ என்ற பெயர் வைத்து அதிலிருந்த தலைவர்கள் என்பவர்கள் பொது மக்களின்பணத்தில் ஆளுக்கு 1000, 2000, 3000, 5000, 7000, சம்பளமுள்ள உத்தியோகங்களை ஏதோ சிலர் பார்த்து வருவதால் நாட்டிற்குவந்தலாபமென்ன இந்த உத்தியோகம் இவர்களுக்கு இல்லாதகாலத்தில அனுபவித்த நாட்டுக் கெடுதி என்ன.

சட்டசபையில் 128 பிரதி நிதிகள் ஏற்பட்டதால் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை என்ன இவர்கள் இல்லாதால் நாட்டிற்கு என்னகெடுதி ஏற்படக்கூடும்.

வாசகர்களே தொழிலாளர்களை விட குடியானவர்கள் அதாவது விவசாயக்காரர்கள் காங்கிரசில் சேருவது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என்று சொல்லுவோம் எந்த சீர்திருத்தம் வந்தாலும் எந்தஉத்தியோகம் ஏற்பட்டாலும் அதுமுதல் முதல் குடியானவர்களின் தலையில் தான் கைவைக்கும் ஏனென்றால் இத்தனை புது உத்தியோகத்திற்கும் இத்தனை புது பிரதிநிதித்துவத்திற்கும் ஏற்படும் செலவு சுற்றிச்சுற்றி எப்படிப்பார்த்தாலும் குடியானவன் தலையில் தான் கையைவைத்து ஆகவேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது. காங்கிரசினால் ஏற்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கவே அனேகமாய் தபால் கார்டு கவர் ரயில் சார்ஜ் முதல் சகலவரியும் உயர்த்தப்பட்டதே அல்லாமல் வேறில்லை. வெள்ளைக்காரருக்கு மாத்திரம் சம்பளம் கொடுக்கவேண்டுமானால் நாம் இப்போதுகொடுத்து வரும் வரியில் பகுதி வரி கொடுத்தால்போதுமானது. சர்க்காருக்கு எந்தவிதமான வரி யார் கொடுத்தாலும் அது கடைசியாககுடியானவனைத்தான் பிடிக்கும் என்பதை குடியானவர்கள் மறந்து விடக்கூடாது. ஆதலால் தான் காங்கிரஸ குடியானவர்களுக்கு எமனாகத் தோன்றி இருக்கிறது என்று சொல்லுகிறோம் தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கோ காங்கிரஸ என்பது பெரிய ஆபத்தான சாதனமாகும். அவர்களுக்கு இதுவரையில் காங்கிரசினால் ஒரு பயனும் ஏற்படவில்லை என்பதும், அவர்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப்போக்கி மனிதத் தன்மையை உண்டாக்க காங்கிரசினிடத்தில் ஒரு கொள்கையும் இல்லையென்பதும் அவர்களுடைய முன்னேற்றமெல்லாம் கூடியவரையில் சர்க்காராலேயே செய்ததாய் ஏற்பட்டிருக்கிறது என்பதும் தாழ்த்தப்பட்ட மக்கள் பேரையும் சொல்லிக்கொண்டு சிலர் காங்கிரசின்பெயரால் பெற்ற பலன்களில் ஒரு சிறிதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவவே இல்லை என்பதும் யாரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். அதோடு அச்சமூகத்தார்களும் இதை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். ஆனதால் அவர்களைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. வியாபாரிகளைப்பற்றி நமக்கு அதிக கவலையில்லையெனெனில் அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு அடுத்தவர்கள் சர்க்காரார் என்னவரி ஏற்படுத்தினாலும் அதற்கும் மேல் லாபம் வைத்து விற்பவர்கள். தவிரவும் இன்னம்கொஞ்சகாலத்தில் கடலை பொரிசுருட்டு சிகரெட் வெத்திலை பாக்கு வியாபாரம் போக மற்ற வியாபாரமெல்லாம் இனிமேல் நமது நாட்டில் வெள்ளைக்காரர்களாலேயே நடை பெறப் போகிறது. ஏனெனில் வெள்ளைக்காரர்கள் சீமை முதலிய இடங்களில் இருந்து கொண்டு இந்தியாவில் வியாபாரம் செய்வதைவிட இங்கு வந்து இருந்து கொண்டு வியாபாரம் செய்வது அவர்களுக்கு அதிகமான லாபத்தைக் கொடுக்கக்கூடியதாகும் முதலாவது [illegible] போக்குவரத்து செலவு குறையும் இரண்டாவது அங்கிருந்திங்கு வரவும் இங்கிருந்தங்குபோகவும் சாமான்களின் மீது ஏற்படும் வரி குறையும், மூன்றாவது கூலி ஆள்களும் குமாஸ்தாக்களும் சீமையில் கிடைப்பதைவிட அரைக்கூலி கால்கூலியில்கிடைக்கும். அம்முதலாளிகளுக்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுப்பதற்கு நமது நாட்டில்படித்த வகுப்பார் என்கிற பார்ப்பனக் கூட்டமும் தயாராயிருக்கிறது. அல்லாமலும் இப்போது ஆங்கிலேயர் மற்ற நாட்டாருடன் வியாபாரத்தில் போட்டி போட முடியாமலிருப்பதாலும் சுங்க உபத்திரவத்தாலும் இங்கேயே தொழில் செய்ய வேண்டியது அவர்களுக்கு அவசியமாய் போய்விட்டது. அல்லாமலும் இப்போதைய வியாபார முறையும் குடியானவர்களைப்பாழாக்குவதாக இருக்கிறதே அல்லாமல் வேறில்லை ஆதலால் தான் வியாபாரிகளைப் பற்றி நமக்கு அதிக கவலையில்லை என்கிறோம். படித்தவர்கள் விஷயமோ காங்கிரசை நம்பித்தான் படிக்கிறார்கள். ஆதலால் அவர்கள் காங்கிரசில் சேர்ந்தால்தான் உத்தியோகம் பெருத்த சம்பளம் முதலியதுகள் கிடைக்கும் மற்றபடி வெறும் ஆசாமிகளைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை இப்பொழுது வாவா, வயிற்றுப்பாட்டிற்கு அதுவும் சோம்பேரி வயிற்றுப்பாட்டிற்கு காங்கிரசு ஒரு சரியான துறையாய் ஏற்பட்டு விட்டது. மகாத்மாவின் 2, 3 வருஷத்திய வேலையின் பலனாகவும், ஒரு கோடி ரூபாய் செலவின் பலனாகவும் பல ஆயிரம் பேர் ஜெயிலுக்குப் போனதின் பலனாகவும் காங்கிரசிற்கு பாமரமக்களிடையே கொஞ்சம் நல்ல பெயர் வந்து விட்டதால் அதன் பெயரைச் சொல்லிக்கொண்டு பிழைப்பதற்கு வெகு பேருக்கு சவுகரியம் ஏற்பட்டு விட்டது. ஆதலால் வெறும் ஆசாமிகளைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆகவே தொழிலாளி விவசாயி தாழ்த்தப்பட்டவர்கள் ஆகிய மூன்று பேர் விஷயத்தில் நாம் அதிகமாக எச்சரிக்கைசெய்கிறோம்.

9-ம் பக்கத்தொடர்ச்சி

அதிகாரத்துடன் பேசிய பேச்சுகளை எல்லாம் பொருத்துக்கொண்டே இருக்கவேண்டியதாய் போய்விட்டது. ஆகவே சுயராஜ்யக் கக்ஷியார் சொல்லுகிறபடியெல்லாம் மந்திரிகள் ஆடாவிட்டால் நிமிஷ நேரத்தில் இம் மந்திரிகளை ஒழித்துவிட முடியும். அதுவும் என்றைக்காவது நடக்கத்தான் போகிறது. அந்த சமயத்தில்தான் நமது மாகாண மந்திரிகள் அழுவாரற்ற பிணமாகவும் சீந்துவாரற்ற பொருளாகவும் திரியப்போகிறார்கள்.

சுயராஜ்யக்கட்சியாரும் சட்டசபையும்

சுயராஜ்யக்கட்சியாரைப்பற்றியும் சில வார்த்தை மந்திரிகளைப்பற்றி பேசும்போதே சுயராஜ்யக்கட்சியாரைப்பற்றிச்சில வார்த்தை சொன்னேன். உண்மையிலேயே மந்திரிகளினுடைய எந்த நடவடிக்கைகளிலிருந்தும் சுயராஜ்யக்கட்சியாரைப் பிரித்து விடமுடியாது. ஏறக்குறைய எப்போதுமே அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொண்டிருப்பவர்கள்.

மந்திரி சபை நிலைத்திருப்பதற்கே மந்திரிகளின் எதிர்க்கட்சியார் என்று சொல்லிக் கொள்ளும் சுயராஜ்யக்கட்சியாரின் தயவுதான் சுயேச்சை மந்திரிகள் ஒருநாளும் சுயேச்சையானவர்கள் அல்ல. ஒருவரை நத்திக்கொண்டே அதுவும் தங்களது எதிரிகளின் தயவுக்கு பல்லைக்கெஞ்சிக்கொண்டே வாழ்பவர்களே தவிர வேறில்லை என்றே சொல்லுவேன் காங்கிரஸ் கட்டளைப்படி நடப்பதானால் சட்டசபையில் உள்ள காங்கிரஸ் மெம்பர்கள் மந்திரி பதவிகளையும் மற்றும் கவர்மெண்டாரால் கொடுக்கப்படும் பிரபதவிகளையும் ஏற்காமல் மற்ற கட்சியார்கள் அடைவதையும் மற்ற கட்சியார்கள் அமைப்பதையும் எதிர்க்க வேண்டும். அன்றியும் அவர்கள் விளம்பரப் படுத்தி பறை சாற்றிக் கொள்ளும் சட்டசபைமுறை என்னவென்றால் முட்டுக்கட்டை என்பதுதான்.

ஆனால் நமது நண்பர்களான காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு தூரம் அத்தீர்மானங்களுக்கும் தங்கள் விளம்பரங்களுக்கும் யோக்கியதை கொடுத்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

வரவு செலவு திட்ட விவாதத்தின் போது சுயராஜ்யக்கட்சித் தலைவரான ஸ்ரீமான் சாமி வெங்கிடசலம் செட்டியார் பத்திரப்பதிவு கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார் மற்றும், பலரும் பல தீர்மானங்கள் அனுப்பி இருந்தார்கள். இந்தத்தீர்மானத்தின் மீது விவாதம் நடந்த காலத்தில். தங்களை நத்திக் கொண்டிருக்கும்மந்திரிகளுக்குக்கஷ்டத்தை கொடுக்கக் கூடாது என்று நினைத்ததலைவர் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் அதை வாப்பீசு வாங்கிக் கொள்ள ஆசைப்பட்டார். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியாரோ அதைவாப்பீசு வாங்க விடவில்லை. கடைசியாக அதை ஓட்டுக்கு விட்டபோது ஜஸ்டிஸ் கட்சியார் கட்டணம் குறைய வேண்டுமென்று ஓட்டு செய்தார்கள் அங்கு இருந்த சுயராஜ்யக்கட்சி மெம்பர்களோ தங்கள் தலைவர் கொண்டு வந்த தீர்மானத்திற்கே ஓட்டுக்கொடுக்காமல் அத்தீர்மானம் தோல்வி யடைவதற்கு அனுகூலமாயிருந்தார்கள்.

இதன் இரகசிய மென்ன வென்றால் மந்திரி கட்சி நிலைத்திருக்கவேண்டுமென்கிற கவலை தான்.

அன்றியும் வரவு செலவு திட்டத்தின் போது மந்திரிகள் சம்பளம் முதலியதுகளுக்கு சட்டசபையில் அனுமதிக்கு வந்தகாலத்தில் ஜஸ்டிஸ் கட்சியைச்சேர்ந்த ஸ்ரீமான் முனிசாமி நாயுடு நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தார். இந்தத்தீர்மானத்தின் கருத்து என்னவென்றால் இம்மந்திரி சபை பொதுமக்களின் சம்மதத்தைப் பெறாதவர்கள் என்பதைக்காட்டவும் டை மந்திரிகள் எப்பொழுதும் அதிகாரவர்க்கத்தின் தயவை எதிர்பாராமல் தைரியமாய் வேலை செய்யச் சக்தி இல்லாதவர்கள் என்பதையும் காட்டுவதற்கே ஆகும். மற்றொரு கருத்து என்னவென்றால் சுயராஜ்யக் கட்சியார்கள் இரட்டை ஆட்சியை ஒழித்து விடுகிறோம். இரட்டை ஆட்சியை ஒழிக்கப் போகிறோம் என்று சொல்லி ஓட்டு வாங்கி இரட்டை ஆட்சியை நிலை நிறுத்த இரகசியமாய் வேலை செய்து வரும் திருட்டுத்தனத்தை வெளியாக்குவதும் தான்.

இத்தீர்மானம் விவாதகாலத்திலும் சுயராஜ்யகட்சித் தலைவர் இரட்டை ஆட்சியை ஒழிக்கவே வந்திருக்கிறோம் என்றும், அதுதான் காங்கிரசின் கொள்கை என்றும், சொன்னார்.

சர்க்கார் நாங்கள் இரட்டை ஆட்சியைப் பலப்படுத்தவே இந்த பலமில்லாத மந்திரிகளை நியமித்து அதற்குதவி செய்கிறார்கள் என்றும் பேசி விட்டு, ஓட்டுக்கொடுக்கும் போது சுயராஜ்யகட்சியார் ஓட்டு செய்யாமல் சர்க்காருக்கு அனுகூலமாய் இருந்த கோடி சிலர் ஓட்டு எடுக்கும் போது வெளியேபோய் விட்டார்கள். ஜஸ்டிஸ்கட்சியார்கள் அனைவரும், நம்பிக்கை இல்லாத தீர்மானத்திற்கு அனுகூலமாகவே ஓட்டுகொடுத்தார்கள்.

கலால் விஷயமாய்மந்திரிகளுக்குஏற்பட்ட தோல்விக்குப்பிறகு சுயராஜ்ஜியக்கட்சியார் அடியோடு புதுக்கொள்கைகளை உடையவர்களாகி விட்டார்கள். அதோடு டை தோல்விகளுக்கு தங்களும் காரணஸ்தர்களால் இருந்தவற்கு வருந்தி எப்படியாவது அவர்களை ஆதரிப்பது என்கிற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இந்த எண்ணத்தை பூர்த்தி செய்ய அவர்கள் செய்த ஆட்சியானது பாரபட்சமில்லாமல் நடு நிலைமையில் இருந்தவர்களுக்கு ஒரு வேடிக்கையாகவும் சுயராஜ்யக்கட்சிக்கு ஆதரவளித்த வெளியில் உள்ள சில நண்பர்களுக்கு கோபத்தையும் உண்டாக்கி விட்டது. பின்னிட்டும் மந்திரிகளைப்பற்றி ஏற்பட்ட தீர்மானங்களின் போதும் சில சுயராஜ்யக்கட்சியார் வெளியில் போய் விட்டார்கள் உள்ளிருந்த சிலர் ஓட்டுசெய்யாமல்சும்மா இருந்துவிட்டார்கள்.

ஆகவே சுயராஜ்யக்கட்சியார் என்றால் சொல்வதொன்று செய்வதொன்று என்பதை உலகத்தாருக்கு வெளிப்படுத்திக்காட்டிவிட்டார்கள். தவிரவும் சுயராஜ்யக் கட்சியாரும் மந்திரிகளின் சம்பளத்தை அடியோடு தள்ளவேண்டு மென்றும் குறைக்கவேண்டு மென்றும் பல தீர்மானங்கள் கொண்டுவரப் போவதாய் சட்டசபைக்கு நோட்டீஸ் கொடுத்திருந்தும் அவைகளை பிரேரேபிக்காமலே இருந்து விட்டார்கள். இம்மாதிரி இவர்கள் நடந்து கொள்வதற்கு ஆக சொல்லப்படும் காரணம் என்னவென்றால் "இந்த மந்திரிகள் போய் விட்டால் ஜஸ்டிஸ் மந்திரிகள் வந்து விடுவார்கள் என்கிற பயமாம். இம்மாதிரி நொண்டிச்சமாதானம் சொல்வதற்கு கொஞ்சம் கூட ஆதாரமே கிடையாது. ஏனெனில் ஜஸ்டிஸ் கட்சியார் இந்த சட்டசபையில் மந்திரிபதவி வகிப்பதில்லை என்று தாராளமாகச் சொல்லியும் எழுதியும் இருக்கிறார்கள். அல்லாமலும் ஒரு போதும் இம்மாதிரியானசிறப்புக்கிடமான அவமானத்திற்கு உட்படவும் மாட்டார்கள். சுயேச்சை மந்திரிகளைத்தாங்கள் தாங்கிக் கொண்டிருப்பதின் இரகசியம் என்னவென்றால், முதலில்லாத வியாபாரம் போல் ஜவாப்தாரித்தனமில்லாமல் அதிகாரத்தை அனுபவிக்கலாம் என்கிற ஆசை தான். எப்படி என்றால், இப்போதுள்ள நிலையில் தங்களுக்கு வேண்டிய காரியத்தை மந்திரிகளுக்கு அதிகாரத்துடன் கட்டளையிட்டுக்காரியத்தைச்சாதித்துக்கொள்வதும், அதனால் ஏற்படும் அவமானமும் பழியும் வேறு ஒருவர் தலையில் விழுவதுமான சவுகரியமாகிய நிலையில் இருப்பதால் தானே அல்லாமல், வேறல்ல. இது தேசத்திற்கு ஒரு கெடுக்கடியான நிலைமை என்றே சொல்லுவேன். இதிலிருந்து எல்லாச்சுயராஜ்யக் கட்சி மெம்பர்களும் இந்த நாணயக் குறைவுக்குப்பொறுப்பாளிகள் அல்ல. சிலர் இதை ஒப்புக் கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள் என்பதைக் காட்ட 14 மெம்பர்கள் தனியாக கையெழுத்திட்டு எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு இவ்வக்கிரமங்களைப்பற்றிஎழுதி இருப்பதுடன் தக்க நடவடிக்கை எடுத்துக கொள்ளவேண்டு மென்றும், எழுதியிருக்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டி இப்போதிருக்கும் நிலைமையில் இதைப்பற்றி கவனிக்குமா? என்பதே நமக்கு சந்தேகம். இந்த 14 பேர்கள் நமது கொள்கைக்கு ஒத்தவர்கள் அல்லவானாலும், அவர்களின் யோக்கியப்பொருப்புக்கு நாம் மரியாதை கொடுக்கவேண்டும். இந்தியாவில் உள்ள பல பத்திரிக்கைகளும் சென்னை சட்டசபையில் உள்ள சுயராஜ்யக் கட்சியாரின் நடத்தையைப் பற்றி, கண்டித்தே எழுதிஇருக்கிறது. இவ இவற்றுள் பூனா "மராட்டா" பத்திரிகை எழுதியதென்னவென்றால், இந்திய தேசிய காங்கிரஸ் சரித்திரத்திலேயே சென்னை சுயராஜ்யக்கட்சியார் மந்திரிசபை அமைப்பதில் நடந்து கொண்ட மாதிரியைத் தவிர கவனிக்கத்தக்கதும் இழிவானதுமானகாரியம் வேறில்லை என்றும் இந்த துர்நாற்றமானது எல்லாருக்குமே அருவருப்பைக் கொடுக்கிறது என்றும் எழுதி இருக்கிறது. அன்றியும் இந்த மாகாணத்தில்தான் காங்கிரசின் தலைவரும் காங்கிரசில் மந்திரிசபை அமைப்பதைத் தடுக்கவேண்டுமென்று பேசிய வீரர்களும், இருக்கிறார்களென்றும் எழுதி இருக்கிறது. ஸ்ரீமான ஆர்னிமென் துரையும் இதைக்கண்டித்துகோள மகாநாட்டில் பேசி இருக்கிறார்.

யூனிவர் சிட்டி சட்ட திருத்த மசோதா.

தற்கால சட்டசபையில் பிரேரேபிக்கப்

பட்டிருக்கும் யூனிவர் சிட்டி சட்ட திருத்த மசோதாவைப் பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அதாவது 1923 வருஷத்தில் ஏற்பட்டு இப்போது அமுலில் இருந்து வருவதில் சில திருத்தங்கள் ஏற்பட வேண்டுமென்று, பல திருத்தம் செய்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தியால் சமீபத்தில் சட்ட சபையில் அறிமுகம் செய்யப்பட்டது தான் இந்தத்திருத்தங்கள் மிகவும் முக்கியமானது. அதின் முக்கிய மாறுதல் என்னவென்றால் செனட்டு சபை அமைப்பைப்பற்றியதாகவும் இந்த மசோத நிறைவேறுமானால், செனட்டு என்பதானது பிராமணாதிக்க முள்ளதாகவும் உண்மையாகவே பார்ப்பன அக்ராரமாகவுமே ஆகிவிடும். நான் பார்பபனர்களை செனட்டு சபைக்கு வேண்டாம் என்று சொல்வதில்லை. அன்றியும் பார்ப்பனர்களின் உதவியும் ஒத்துழைப்பும் வேண்டுமென்றே சொல்லுகிறேன். நான் விரும்புவதெல்லாம் செனெட்டில் எல்லாவகுப்பார்களுக்கும் எல்லாவித அக்கரை உள்ளவர்களும் கூடுமானால் பிரதி நிதித்துவம் இருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். என்பதுதான். ஏனெனில் எனக்கு அதில் உள்ள பொதுவான ஆக்ஷேபணைகள் எதை உத்தேசித்து ஒரு வகுப்பாருக்கே எல்லா ஆதிக்கமில்லாமலும் மற்ற வகுப்பாருக்கும் கொஞ்சம் இருக்கும்படியாகவும் செய்யவேண்டும் என்பது தான். யூனிவர் சிடி சபையில் எல்லாவகுப்பாருக்கும் நீதி வழங்க வேண்டும்.

இப்போதைய ஒழுங்கு முறைப்படி 30 அங்கத்தினர்கள் B. A. படித்தவர்களில இருந்து அவர்களாலேயே தெரிந்தெடுக்கப்பட வேண்டும். ஸ்ரீ சத்தியமூர்த்தியின் திருத்த மசோதா இந்த 30 ஐ 40 ஆக்க வேண்டும் என்கிறது. நமது மாகாணத்தில் இப்போது B A படித்து, பதிவு செய்து கொண்டிருக்கிறவர்களில் பார்ப்பனர்களே அதிகமானவர்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்தத்தொகுதியில் தெரிந்தெடுக்கப் படவேண்டியவர்களை அதிகப்படுத்த வேண்டும் என்பதின் கருத்து பிராமணர்களே அதிகமாகத்தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுதானே அல்லாமல் வேறல்ல. தவிரவும் இப்போது இருக்கும் சட்டத்தில் குறைந்த தொகை உள்ள மற்ற வகுப்பாருக்கும் பிரதிநிதித்துவம் உண்டாகும்படி சிங்கிள் டிரான்ஸ்வரபிள் ஓட்டு என்பதன் மூலம் வகை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. ஸ்ரீமான் சத்திய மூர்த்தியின் திருத்த மசோதா இதையும் அடித்து தங்கள் ஜாதியாரே பெரும்பான்மையாயுள்ள பொதுத் தொகுதியே வேண்டும் என்று கேட்கிறது. அதுவுமல்லாமல் பார்ப்பனரல்லாத B. A. க்கள் அதிகமாய் வருவதற்கில்லாத மாதிரியாகவும் சூட்சி செய்யப்பட்டிருக்கிறது. சிங்கிள் டிரான்ஸ்வரபிள் ஓட் முறையை எடுத்து விட்டால் இதைவிட கேவலமாக 3ல் 1பங்குகூட பொது தொகுதி மூலம் பார்ப்பனரல்லாதார் வர முடியாமல் போய்விடும். சட்ட சபையில் உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர்களால் 12-பேர் தெரிந்தெடுக்கலாம் என்று பழய சட்டம் இருக்கிறது.

ஸ்ரீமான் சத்திய மூர்த்தியின் திருத்த மசோதா இதை அடியோடு எடுத்துவிட வேண்டும் என்று சொல்லுகிறது, ஏனென்றால் இந்த பனிரண்டு பேர்களில் 9-பேர் பார்ப்பனரல்லாதாராயிருக்கிறார்கள் என்கிற உறுத்தல்தான் — மற்றமாகாணத்து யூனிவர்சிட்டிகாரர்கள் நமது மாகாணத்தில் இருக்கும் சட்டத்தைப் போலவே தங்களுக்கும் ஆக்க வேண்டும் என்று பிரியப்படுகிறார்கள். இங்கிலாந்திலுள்ள மற்ற யூனிவர்சிட்டிகளும் இதுபோலவே பார்லிமெண்டு மூலம் சட்ட சபைக்குத்தெரிந்தெடுக்கப்படுகிறது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் திருத்தத்தில் உள்ள மற்றொரு மாறுதல் என்னவென்றால், மதராஸ் முனிசிபாலிட்டியில் இருந்து 4-பேர்களைத் தெரிந்தெடுத்தனுப்பவும் உரிமையையும் பிடுங்கி விட வேண்டும் என்கிறது. இன்னும் மற்ற முனிசிபாலிட்டிகளுக்கும் தாலூக்கா போர்டுகளுக்கும் இப்போதுள்ள செனட்டுக்கும் தெரிந்தெடுக்கப்படும் உரிமையையும் பிடுங்கிவிடவேண்டும் என்கிறது. ஏனெனில் இம்முறைகளினால் 26 ஸ்தானங்களில் 16பேர் பார்ப்பனரல்லாதார் வந்து விட்டார்கள் என்பதினால் தான்.

ஆனால் முனிசிபாலிட்டி ஜில்லா போர்டு முதலியவைகளின் மூலம் செனெட்டுக்கு பிரதிநிதி அனுப்பும் வழக்கம் மேல் நாடுகளில் உள்ள நாகரீகம் பொருந்திய தேசங்களில் எல்லாம் இருந்து வருகிறது. அன்றியும் ஸ்ரீமான் சத்திய மூர்த்தியின திருத்தமசோதா, இன்னமும் என்ன செய்கிறதென்றால், வியாபார சங்கம் மிராசுதாரர்கள் சங்கம் இந்திய வியாபாரச்சங்கம் இதுகளின் மூலம் செனெட்டு தெரிந்தெடுக்கப்படும் உரிமையையும் பிடுங்கி விடவேண்டுமென்கிறது. காரணம் என்னவென்றால் அதுகளிலும் பார்ப்பனரல்லாதார் அதிகமாக வந்துவிடுகிறார்கள் என்பதுதான். ஆனால் மற்ற மாகாணங்களில் இம்மாகாணங்களில் இம்மாதிரி சபைகள் செனட்டுக்கு பிரதிநிதிகளை அனுப்பிக் கொண்டுதான் வருகிறது.

தவிரவும், இப்பொழுது அமுலில் இருந்துவரும் சட்டப்படிக்கு யூனிவர்சிட்டிக்கு 25000 ரூபாய் தர்மம் செய்த சங்கத்திற்கும் 10000 ரூபாய் தர்மம் செய்த தனி மனிதருக்கும் வருஷம் ஒன்றுக்கு 5000 ரூபாய் வீதம் கொடுத்துவரும் சங்கமோ தனி நபரோ ஆகிய இவர்கள ஒவ்வொருவரும ஒவ்வொரு பிரதி நிதியை அனுப்ப உரிமை உடையவர்களாயிருக்கிறாகள்.

ஆனால் ஸ்ரீமான் சத்திய மூர்த்தியின் திருத்தமசோதா இதை ஒழிக்க வேண்டும். என்கிறது ஏனென்றால் யூனிவர்சிட்டியின் பாத்தியம் விற்கப்படுகிறதாம்.

இவ்விற்பனை முறை உலகமெல்லாம் இருந்துதான் வருகிறது. யாது காரணத்தினால் என்றால் யூனிவர்சிட்டி என்கிறபடிப்பு ஸ்தாபனத்தை விர்த்திபண்ணவும் அதைப்பொது உடைமையாக்கவும இம்முறை மிகவும் உபயோகப்படுவதால் இதை எல்லோரும் ஆதரிக்கிறார்கள்.

மறுபடியும் யூனிவர் சிட்டிசான்சிலர் என்று சொல்லப்பட்ட தலைவர் அதாவது (கவர்னர் பிரபு) 30 அங்கத்தினர்களை நியமிக்க உரிமை உடையவராயிருக்கிறார். இந்த முப்பதில் 20 பேர்களுக்குக் குறையாமல் சரியான பிரதிநிதித்துவம் பெறமுடியாத வகுப்புக்காகவே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் திருத்தமசோதா இந்த முப்பதை 10 ஆக்க வேண்டுமென்கிறது. இன்னமும் இது போன்ற அநேகமாறுதல்களை இந்த திருத்த மசோதாவில் புகுத்தப்பட்டிருக்கிறது. அவைஎல்லாவற்றையும் நான் இங்கு சொல்லவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி இந்த மசோதாவை சட்ட சபையில் எதிர்த்தது இந்த மசோதா விவாதத்திற்கு வந்த காலத்தில் சுயராஜ்யக்கட்சியில் கூட சிலர் சில கனவான்கள் எதிர்த்தார்கள் அவர்களில் ஸ்ரீமான் எஸ். முத்தையா முதலியார் வெகு பலத்தோடு தக்க ஆதாரங்களுடன் எதிர்த்தார்கள் ஸ்ரீமான் சல்டானா கூட இதை எதிர்த்தார்; அதோடு பத்திரிகைகளிலும் எழுதி இருக்கிறார். அதன் சாரம் என்னவென்றால் "ஸ்ரீமான் சத்திய மூர்த்தியின் மசோதா அநேக உரிமைகளைப்பிடுங்க முயர்ச்சிக்கிறது. கல்விக்குப்பணம்கொடுத்தவர்கள் படிக்காதவர்கள் என்கிற காரணங்களால் கல்வியைப் பற்றி கவனிக்கவே கூடாது என்கிற படிப்பின் யோக்கியதையை நிர்ணயிப்பதற்கு படிக்காதவர்களே நல்ல நியாயாதிபதிகளாவார்கள். ஆதலால் அவர்கள் கண்டிப்பாய் இருக்கவேண்டும் மேல் நாடுகளில் பணம் கொடுத்தவர்களுக்கு [illegible]" என்று எழுதியிருக்கிறார். செனட் அங்கத்தினர்களைக் குறைப்பதற்கு ஸ்ரீமான் சத்திய மூர்த்தி சொல்லும் முக்கிய காரணம் என்னவென்றால் செனட் சபை மிக்கப் பெரியதாயிருக்கிறதாம். ஓட்டு மொத்த அங்கத்தினர்களே 188 பேர்கள் தான் இருக்கிறார்கள்; ஆனால் ரேட்லர்கமீஷன் கல்கத்தா யூனிவர் சிட்டிக்கு 500 மெம்பர்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறது 500க்கும் 188 க்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்; இதை யாராவது அதிகமென்று சொல்லக்கூடுமா. தவிரவும் 188 பேர்கள் இருந்தாலும் 70 அல்லது 80 பேர்கள் தான் மீட்டிங்குக்கு ஆஜராகிறார்கள். தவிர முனிசிபாலிட்டி ஜில்லா போர்ட் வியாபார சங்கம் முதலியவைகளால் தெரிந்தெடுக்கப் படுவதில் கல்விக் குறிய யோக்கியதை உடையவர்கள் வருவதில்லை. இதனால் கல்வி நிருவாகம் கெட்டுபபோய்விடுகிறது என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சொல்லுகிறார்.

ஆனால் இந்த ஸ்தாபனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட 48 ஸ்தானங்களில் 36 பேர் பி. ஏ பட்டம் பெற்றவர்களும் பாரிஸ்டர்களுமாவார்கள். ஆகவே நான் சொல்லுவதென்னவென்றால் நீங்கள் இவ்விஷயத்தில் அசார்சமாயிராமல் இந்த மசோதாவின் சூட்சிகளை வெளியிலெடுத்துச்சொல்லி பொதுஜனங்களின் கவனத்தை இழுக்கக் கிளர்ச்சிசெய்து இந்தமசோதாவை எதிர்க்கப்போகிற எங்களுக்குச் சரியானபலம் தேடிக்கொடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

போளூர் திராவிட சங்கத்தின்

முதலாவதாண்டின் விழாவின்போது திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரின் தலைமையின்கீழ் ஸ்ரீமான்கள் கண்ணப்பர் தண்டபாணிபிள்ளை

ஆகியவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகள்.

திரு. ஜே. எஸ். கணணப்பர்.

இரண்டாவதாக தேசிய நிலைமை என்பது பொருளாகக் கொண்டு திரு. ஜே. எஸ். கண்ணப்பர் பேசியதாவது:— நம் இந்திய நாடு சுயராஜ்யம் பெற வேண்டும் என்னும் கிளர்ச்சியில் அடிமைப்பட்டுக்கிடக்கின்றது. சுயராஜ்யம் பெற எத்தனையோ கட்சிகள் நம் நாட்டில் வேலை செய்து வருகின்றன. அதற்குத்தடையாய் நம் நாட்டில் சாதி வித்தியாசம் என்பவைகளிருக்கின்றன. காப்பிக்கடை பார்ப்பானும், குப்பையள்ளும் பார்ப்பானும், பிரமாவின் முகத்திலிருந்து தோன்றியவர்களாம். ஆனால் மற்றை வகுப்பில் எவ்வளவு படித்து, எவ்வளவு உயர்ந்த பதவிகளில் இருந்த போதிலும் அவர்கள் தாழ்ந்தவர்களே; அதற்கு காலஞ்சென்ற ஜஸ்டிஸ் கிருஷ்ணன் ஒருவரே போதியசான்றாகும். ஜஸ்டிஸ் கிருஷ்ணன் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி தனது உழைப்பினாலும் நுண்ணறிவினாலும் சென்னை உயர்தர நீதிமன்ற நீதிபதியானார். அவர் தீயர் வகுப்பைச் சார்ந்தவர். அப்படிப்பட்டவர் தன் சொந்த ஊருக்குச்சென்ற போது பார்ப்பனர் இருக்கும் வீதியில் போக முடியவில்லை. எனவே, படிப்பினாலும் பெருமையில்லை என்பது ஏற்பட்டுவிட்டது சுவாமியைப்பார்ப்பதற்கு ஏழு சுவர்கள் கட்டப்பட்டிருப்பதே போன்று நம்மைப்பிரிக்க பார்ப்பனர்கள் மதங்கள் ஜாதிகள் என்னும் பல சுவர்களைக் கட்டியுள்ளார்கள். மதத்திற்கு ஆதி, வேதமாம். அந்த வேதத்தை நாம் படிக்கக்கூடாதாம். யார் படிக்கக் கூடாதென்று சொல்லுகின்றனர் என்று பலர் நினைக்கலாம், அவ்விதம் நினைப்பது தவறு. 1919-ம் ஆண்டிலே சிங்கேரியில் ஓர் வேதபாடசாலை மைசூர் சமஸ்தானத்தால் ஏற்படுத்தப்பட்டது. அதில் பார்ப்பனரல்லாதார்களும் படிக்கவேண்டுமென்று கேட்டதிற்கு பார்ப்பனர்கள் இணங்காது மகா ராஜாவினிடம் முறையிட்டு பார்ப்பனரல்லாதார் அதில் சேர்ந்து படிக்க முடியாதபடி செய்து விட்டனர். இன்னுஞ் தஞ்சாவூர் ஜில்லாவைச் சார்ந்த திருவாரூர் வேதபாடசாலையிலும் ஜில்லாபோர்டு தலைவராய் பார்ப்பனர் ஒருவரிருக்கும்வரை பார்ப்பனரல்லாதாருக்கு இடங் கொடுக்கப்படவில்லை இன்னும் திருகோக்கலே கட்டாய கல்வி ஏற்படுத்தவேண்டுமென்று கூறியபோது தர்பங்கா மகாராஜா என்னும் பார்ப்பன ஜமீன்தார் அரசப் பிரதிநிதியை பேட்டி கண்டு கட்டாயக் கல்வி ஏற்படுத்தக் கூடாதென்று வாதாடினார். எனவே பார்ப்பனர்கள் எந்நாளும் நமது கல்வி முன்னேற்றத்திற்கு எதிரிடையாகவேயிருந்து வருகின்றனர் வைணவமதத்தை எடுத்துக்கொண்டாலே ஸ்ரீ வைணவர்கள் என்ற பட்டம் அய்யங்கார்கட்கே உரிமையுடையதாம், மற்றைய வைணவர்கட்கு தாசர்கள் என்று பெயராம், அவர்களில் பிராமண சந்நியாசிகட்கு ஜீயர் என்ற பெயரிட்டழைக்கின்றனர். மற்றைய வகுப்பு வைணவ சந்நியாசிகளை, ஏகாங்கி எனப்பெயரிட்டழைக்கின்றனர். இவ்விதமாக எந்த மதத்தை எடுத்துக்கொண்ட போதிலும் உயர் பெயர்களையும் அந்தஸ்துகளையும் தங்களுக்கே வைத்துக்கொண்டிருப்பது விளங்கும். முகம்மதிய மதத்தை எடுத்துக்கொண்டால், அவர்கள் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்கின்றனர். அவர்களின் வேதத்தை யார் வேண்டுமானாலும் படிக்கலாம் கிறிஸ்துவ மதத்தை எடுத்துக்கொண்டாலும் அப்படியே. அமெரிக்காவிலிருந்து ராக்பெல்லர் துரை, போர்டு துரை, முதலியவர்கள், தங்கள் மதத்தை ஆஸ்பத்திரிகள் பள்ளிக்கூடங்கள் முதலியன வைத்துப் பரப்புவதற்காகத் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தை இந்தியாவிற்கு அனுப்புகின்றனர். ஆனால் நம் நாட்டிலுள்ள பார்ப்பனர்களோ, தன் நாட்டிலுள்ளவர்களையே மதத்திற்குப் புறம்பாக களைந்து தள்ளுகின்றனர்.

இனி அரசியலை எடுத்துக் கொண்டாலோ பார்ப்பனர்கள் $\frac{1}{2}$-கோடி ரூபாய் தான் வரி கொடுக்கின்றனர். நாமோ ஆறு கோடி ரூபாய்கள் வரி கொடுக்கின்றோம். அதிக வரிகொடுப்பவர்களாகிய நாம் நமக்குரிய பங்கைக்கேட்கில் இது வகுப்புத் துவேஷம் பொறாமையாம். மகாபாரதத்தில் துரியோதனாதிகட்கும் பாண்டவர்கட்கும் சண்டை நடந்தது. அதற்குக் காரணம் பாண்டவர்கள் தங்கட்குரிய பங்கைக் கேட்ட போது துரியோதனாதிகள் கொடுக்காததே. பாண்டவர்கள் கேட்டபோது கொடுத்திருந்தால் அந்த யுத்தம் நடந்திராது ஆனால் பாண்டவர்கள் கேட்டது துவேஷம் என்று யாராவது கூறக்கூடுமா? நமக்குரிய பங்கை நாம் கேட்டால் இது எப்படி வகுப்பு துவேஷமாகும்; அதற்கு பார்ப்பனர்கள் இசையாது போகவே நம் தலைவர்கள் பாரதப்போரைத் துவக்கினர். (கரகோஷம்).

1920 தேர்தலில் நாம் வெற்றிபெற்றோம். அது முதல் நாம ஆறுண்டுகள் அதிகாரத்திலிருந்தோம் அக்காலத்து ஸ்தலஸ்தாபனங்களைக் கைப்பற்றினோம் இந்து மத அறநிலையபாதுகாப்பும் மசோதா ஒன்று இயற்றினோம்; கட்டாய இலவசக்கல்வியைபலவிடங்களில் பரப்பினோம். சென்னை யூனிவர்சிட்டி சட்டம் இயற்றினோம். இந்நான்கையும் கைக்கொண்டு வேலைசெய்தவராவே, எல்லாவகையாலும் பார்ப்பனர்கட்கு கஷ்டமேற்பட்டது. அதனால் அவர்கள் நாம் நேரில் எதிர்த்தால், வெற்றி பெற முடியாதென்று உருத்திராக்கப் பூனை வேடம் பூண்டனர். சுயராஜ்யக்கட்சியை ஏற்படுத்திக்கொண்டு 1926 ம் ஆண்டில் தேர்தலில் நின்றனர். இந்தியசட்டசபைக்கு அய்யங்கார்களாகவே சென்றுள்ளார்கள், நமது மாகாண சட்டசபைக்குப் பார்ப்பனத்திருமேனி கொண்டு சுயராஜ்யகட்சியார் நுழைந்துள்ளார்; இவர்கள் தேர்தல் காலத்தில் தாங்கள் இரட்டையாட்சியைக் கொல்லப்போவதாய்க் கூறினர். ஆனால் பின்னால் எவ்வாறு நடந்து கொண்டனர்? பார்ப்பன ராஜ்யத்தை நிலைநாட்ட சுப்பராயன் மந்திரி சபையை ஆதரித்தனர். அவரின் மந்திரி சபைக்கோ கால் நொண்டி சுயராஜ்யகட்சியாரின் ஊன்றுகோலின்றி அவரின மந்திரி சபை நடக்கவே முடியாது. பார்ப்பன கட்சியாகிய சுயராஜ்யக்கட்சியினரும் தந்திரமாகத்தான் அவர்களை ஆதரித்து வருகின்றனர். பார்ப்பன ராஜ்யத்தை ஏற்படுத்த தாங்கள் வேலை செய்வதை விடமற்றொருபார்ப்பனரல்லாதாரைக்கொண்டே செய்யச்செய்வது அவர்கட்கு சௌகரியமல்லவா?

அவர்கள் இரட்டையாட்சியைக் கொல்லுவோம் என்று கூறியதைச்செய்யச்சந்தர்ப்பப்பட்டது. திரு. முனுசாமி நாயுடு அவர்கள் மந்திரிகளுக்குச் சம்பளம் கேட்டபோது "மந்திரிகள் மேல் நம்பிக்கையில்லை" என்ற தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால் சுயராஜ்யக்கட்சியாரிற் சிலர் விதவைகள்போன்று முக்காடிட்டு வெளிச் சென்றனர். சிலர் வாளாவிருந்தனர். கேள்வி கேட்கப்பட்டால் எல்லாம் டாக்டர் சுப்பராயன் செய்தார்; நாங்களொன்றும் செய்யவில்லை என இலகுவாய்ப் பதில் சொல்லித் தப்பித்துக் கொள்ளலாமல்லவோ? டாக்டர் சுப்பராயன் பார்ப்பன ராஜ்யத்தை நிலைநாட்டவே அவர்கள் கூறும் வண்ணம் செய்து வருகின்றனர். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன், சித்தூர் ஜில்லாபோர்டு தலைவரான, ராவ்பகதூர் முனுசாமி நாயுடு அவர்கள் காலியான இரண்டு நியமன ஸ்தானங்கட்கு ஒரு பார்ப்பனரையும் ஒரு கோமுட்டிச் செட்டியாரையும் சிபார்சு செய்து அனுப்பினர். ஆனால் டாக்டர் சுப்பராயனோ அந்தப் பார்ப்பனர் பெயரை மட்டும் ஒப்புக்கொண்டு அந்த கோமுட்டி செட்டியாருக்குப் பதில் ஒரு பார்ப்பனரை சிபார்சு செய்யும் படிக்கு அந்த சிபார்சை திருப்ப திரு முனுசாமி நாயுடு அவர்கட்கு அனுப்பி விட்டார் இப்பொழுது வேலூர் முனிசிபாட்டியிலும், நியமன ஸ்தானங்கள் காலியாகி இருக்கின்றன. அதற்கும் பார்ப்பனர்களை நியமிக்கப் படப்போகின்றனர். மற்றும் இப்பொழுது ஸ்தல ஸ்தாபன நியமனங்கள் எல்லாம் பார்த்தால் ஏறக்குறைய எல்லாம் பார்ப்பனர்களாகவே யிருக்கின்றனர். இதுமட்டுமல்ல. சென்னை பல்கலைக்கழகத்தையும், பழையபடி அக்கிராரமாக்க முயற்சிகள் செய்யப்பட்டு விட்டன, அதாவது சென்னைபல்கலைக்கழகத்தில் செனட் என்ற ஒருசபையுண்டு. அதற்கு பி.ஏ. படித்தவர்கள் தான் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். எனவே அதற்குப்பார்ப்

பனர்கள்தான் போகமுடியும். அதனால் நமது மந்திரியான கனம் பாத்ரோ அவர்கள் நம்மாணவர்கட்காகப் பரிந்து பேச நம்மவர்கள் அங்கிருக்க வேண்டுமெனக் கருதி ஜில்லா போர்டு, தாலூகா போர்டுகளிலிருந்தும், வர்த்தகச் சங்கங்களிலிருந்தும் அதற்குப் பிரதிநிதிகள் அனுப்பப்பட வேண்டுமென ஒருசட்டம் இயற்றினர்; இவ்விதம் ஸ்தலஸ்தாபனங்களும் வர்த்தகச் சங்கங்களும் பிரதிநிதிகள் அனுப்புவது நம்மவர்களையே. இது சத்தியமூர்த்தி அய்யரவர்கட்குப் பொறுக்க முடியவில்லை. அதைப்பழையபடி அக்கிராரமாக்க ஒரு மசோதாகொண்டு வந்துவிட்டனர். இவ்விதமாக அவர்கள் இந்தொண்டி மந்திரி சபையைப் பார்ப்பன ராஜ்யத்தை நிலைநாட்டக்கருவியாக உபயோகிக்கின்றனர். சர் பாத்ரோ அவர்கள் இயற்றிய பல்கலைக்கழகச் சட்டத்தினால் தான் நம்மவர்கள் அங்கு செல்லவும், அதனால் சர் ஆர். வெங்கடரத்தினமென்ற பெரியாருக்கு வைஸ்சான்சலர் பதவி கிடைக்கவும் நேர்ந்தது. இந்தச் சட்டத்திற்கு முன் இவருக்கு செனட்டில் ஒரு அங்கத்தினர் பதவி கூட கிடைக்கவில்லை. இன்னும் பார்ப்பனரல்லாதாருக்குச் சிறிது உதவிசெய்யும் உத்தியோகஸ்தர்களை எல்லாம் எதிர்ப்பதே சுயராஜ்யக் கட்சியாரின் தொழிலாய் இருக்கிறது. சென்னை கார்ப்பொரேஷன் கமிஷனரைப்பற்றி அவர்கட்கிருக்கும் ஆத்திரத்திற்கோ அளவேயில்லை. ஏன்? சென்னையில் கட்டாய ஆரம்பக்கல்வி ஏற்படுத்தப் பட்டுள்ளமையால் ஆண்டுதோறும் புதிய பள்ளிக்கூடங்கள் பல திறக்கப்படுகின்றன. அதற்குப் பல உபாத்திமார்கள் நியமிக்கப்படும். அவ்விதம் நியமிக்கப்படுவதில் இரண்டு மூன்று பார்ப்பனர்களைத் தவிர மற்றையோர்களெல்லாம பார்ப்பனரல்லாதாராகவே யிருப்பர். இன்னும் அரிசி கண்டிராக்ட் விடயத்திலும் எவ்வளவோ மோசடிகளிருந்து வந்தன. சென்னை கார்பொரேஷனில் அரிசிக் கண்டிராக்ட் என்றால், மற்றைய விடயங்களைப் போலல்ல. சுமார் நான்கு இலட்சங்கட்கு அரிசி வாங்கப்படும். இதைக் கண்டிராக்ட்டிற்கு விடுவதில் மோசடி இருப்பதை நிறுத்துவதன் பொருட்டு இதை பொது ஏலத்தில் விட்டு விட்டார். அதனால் கார்ப்பொரேஷனுக்கு அரிசி கண்டிராகடில் ஓர் இலட்சம் லாபமாகியுள்ளது. இதுவும் அவர்கட்கு வயிற்றெரிச்சலை உண்டுபண்ணியுள்ளது. இன்னும் கார்ப்பொரேஷனில் அங்கத்தினர்கள் தங்கள் டிவிஷன்களைச் சுற்றிப்பார்க்க மோட்டார் வண்டிகொடுப்பது வழக்கம். அந்தக் காரை வக்கீலாயுள்ள அங்கத்தினர்கள் கோர்ட்டிற்கும் மற்றையவர்கள் ஊர் சுற்றவும் எடுத்துச் சென்று கொண்டிருந்தனர். அதைப்பார்த்து தனது உத்திரவில்லாது இனி எவரும் மோட்டார் எடுத்துச் செல்லக் கூடாதென ஓர் உத்தரவு போட்டு விட்டார். இன்னோரன்ன காரணங்களான் அவர்கள பேரில் சுயராஜ்யக் கட்சியின் கொள்கை பார்ப்பனரல்லாதாரை முன்னேற்றத் தடுப்பதே என்று கூறிமுடித்தார்

திருவாளர் தண்டபாணிப்பிள்ளை

மூன்றாவது பேசிய திருவாளர் தண்டபாணி பிள்ளை யவர்கள் கூறியதாவது:— என்னை ஒற்றுமை என்பது பற்றி பேசுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நான் வேற்றுமைகளைக் களையவேண்டுமெனப் பேசுகின்றவனாகையினால், அதைச் செய்து விடின் அதுவே ஒற்றுமைக்கு வழியாகும் என்பதாக நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். ஆனால், எல்லோரும் ஒற்றுமையாயிருக்கவேண்டும். வித்தியாசம் கூடாதென கூறுகின்ற நீங்கள் நம் சமூகத்தினரைப் பற்றியே பேசுகின்றீர்களே என்று நினைக்கலாம். அது அப்படியன்று. இந்தப்பெரிய வீடத்திலே ஒரு சிறிய விளக்கு இங்குள்ள இருளை நீக்கிவிடுவது போன்று பார்ப்பனமாயையில் விடுபட்டிருக்கும் நீங்கள் கரையேற அவைகளைப்பற்றிய உண்மைகளைச் சொன்னால்தான் முடியும். பார்ப்பனர்கள் தாங்கள் பிழைப்பதற்காக சாத்திரங்கள் பல எழுதிவைத்துள்ளார்கள். அவர்கள் நம்மை ஏன் படிக்கக்கூடாதென்கின்றார்கள் என்றால், படித்தால் அவர்களிடமுள்ள ஊழல் வெளிப்பட்டுவிடும். ஒரு கள்ளன் ஊரிலுள்ளவர்களைவிடத் தைரியசாலி என்று கூறமுடியாது. அவன் ஒரு நாய்குலைத்தாலும், அல்லது ஒரு குழந்தை அழுதாலும் கேட்டாலும் ஓட்டம்பிடிப்பான். அது போல நாம் படித்து விட்டால் அவர்கட்குள்ள பெருமை எல்லாம் போய் விடும் என்ற பயமே. ஆகையினாற்றான் நம்மைப் படிக்கக் கூடாதென பார்ப்பனர் ஒதுக்கி வைத்தனர். படியாதவன் குற்றம் புரிந்தால் மன்னிக்கத்தகும் படித்தவன் செய்த குற்றத்தை மன்னிக்கவே முடியாது. வெள்ளைக்காரர்களாவது இப்பொழுது வந்தவர்கள். பார்ப்பனர்களோ பண்டை நாள் முதல் நம்மை மோசம் செய்து வருபவர்கள். இப்பொழுது அரசாங்கத்தாரின் வரிக்கே சில சட்ட திட்டங்களிருக்கின்றன. பார்ப்பனர்களின் வரி அவ்விதமில்லை. வயிற்றில் கருத்தரித்த நாள் முதல் செத்த பின்பும் அவர்கட்கு வரிகொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கட்கு இவ்வளவு பேருதவி செய்தும், அவர்கள்நன்றிகாட்டுகின்றனரா? கலியாண வீட்டிலும் அவர்களுக்குத்தான் பணத்தைக் கொடுக்கின்றீர்கள். புரோகிதப்பார்ப்பான் கலியாண வீட்டில் கருமாந்திர மந்திரத்தைச் சொன்னாலும் நமக்குத் தெரியப்போவதில்லை. கருமாந்தர வீட்டில் கலியாண மந்திரத்தைச் சொன்னாலும் தெரியப்போவதில்லை. அதுமட்டுமல்ல. எத்தனையோ பொய்களையும் சொல்லச் செய்கின்றான். அவன் புஷ்பம் சந்தனம் இல்லா விட்டால் அரிசியில் சிறிது மஞ்சளைக் கலந்து அதை புஷ்பமாகவும் உபயோகித்துக் கொள்கின்றான். ஆனால் 'தட்சணைசமர்ப்பயாமி'' என்று கூறுவதில்லை. அதற்கு மட்டும் காலணா செம்புக் காசேனும் கொடுக்கும்படிக் கூறுகின்றான். நாமோ புஷ்பம் சந்தனமாக மாறிய அரிசியையே காசாகவும் மாற்றிக்கொள்ளும்படிக்கு கேட்பதுமில்லை. அந்தச் செம்புக்காசை வைத்துக்கொண்டு சொர்ணம் என்று பொய் சொல்லச் சொல்லுகிறான். அதுமட்டுமல்ல. அருந்ததியைப்பார்த்ததாகவும் கூறும்படி கடும்பொய் சொல்லச்சொல்லுகிறான். இப்படி வெட்ட வெளிச்சமாய் பொய் சொன்னால் அந்த மணமக்கள் எங்ஙனம்வாழ்வு பெறுவர்? புரோகிதப் பார்ப்பான் செய்வதில் மணமக்கள் தம் வாழ்வு பெருகுவதாய் இருந்தால் அவனுடைய சமூகத்தாருக்குள்ளேயே எத்தனை இளம் பெண்கள் விதவைகளாக இருக்கின்றனர்? இதை நம்மவர்கள் யோசித்துப்பார்த்தால் அப்புரோகிதர்களை அழைக்கவேமாட்டார்கள்.

இனி நமது அப்பா சாகப்போகும் தருவாயில் அந்தப் புரோகிதப்பார்ப்பான் வந்து "உமது அப்பா மோட்சத்திற்குப் போகும் வழியில் மயிர் பாலத்தில் செல்லவேண்டும். அப்பொழுது அவர் வழுக்கிவிட்டால் நரகலோகத்திற்குச் செல்வர், ஆகையால் அவர் அதைக்கடந்துசெல்ல கோதானம்கொடு, அப்பொழுது அவர் அதன் வாலைப்பிடித்துக் கொண்டு வழுக்கி விழாமல் போய் சேர்ந்து விடுவார்" என்றுகூறுகின்றார், உடனே என்னகஷ்டப்பட்டோ கோதானம் கொடுத்து விடுகின்றோம். நாம் யாவரும் பணம் அனுப்பினால் அதற்கு ரசீது முதலியன உண்டு அதைப்போல் கோதானம் கொடுத்தால் நமது அப்பா பாலத்தைக் கடந்து மோட்ச லோகம் வந்து சேர்ந்தாரென நமக்கு அவ்விதமான ரசீது ஒன்றும் வருவதில்லை. நாமும் பின்னால் அப்புரோகிதரிடம் நமது அப்பா போய்ச்சேர்ந்தாராவெனக் கேட்பதுமில்லை இவ்விதமாக மதத்தின்பேரால் நாம் எவ்வளவோ அடிமைப்பட்டுக்கிடக்கின்றோம். கோவில்களில் நடக்கும் அக்கிரமங்கட்கு அளவேயில்லை. மகாத்மா ஒருகாலத்தில் காசியில் விசுவநாதர் ஆலயத்திற்குச்சென்றாராம். அப்பொழுது அங்குள்ள அசுத்தங்களைப்பார்க்க அவருக்குச்சகிக்கமுடியவில்லை, எனவே அவர் அர்ச்சகருக்கு ஒரு காலணா கொடுத்தாராம் அந்த அர்ச்சகர் நீ நரகத்துக்குச் செல்வாய் என்றாராம். உடனே மகாத்மா நான் நரகத்திற்குப் போகவே போகின்றேன். ஆகையினால் அந்த காலணாவையும் கொடுத்து விடு என்று வாங்கிக்கொண்டாராம். எனவேமகாத்மாவே அந்த அர்ச்சகர்களும் புரோகிதர்களும் காலணாவுக்கு மேல் பைசா கூட பெற மாட்டார்கள் என்றும் மதிப்புப்போட்டிருக்கும்போது அவரை விட நாம் அவ்வர்ச்சகர்களின் யோக்கியதையைக் கண்டறியும் சக்தி வாய்ந்தவர்களா? எனவே இவ்விதமான பொருளற்ற மூடக்கொள்கைகளிலிருந்துவிடுபட்டுநமதுமுன்னேற்றத்திற்கானசெயல்களைக் கைக்கொள்ள வேண்டும் என்றார்.

இனாம்! இனாம்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனா இனாம்.


எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப் பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப் படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.
CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

4ம் பக்கத்தொடர்ச்சி.

தான் குளிக்கவேண்டும் இல்லாவிடில் பாபம் என்கிறார். நாம் பணத்தைக்கொடுத்து சம்மதித்து விடுகிறோம். இன்னொரு குளத்தில் கோவில் பூசாரிகள் எல்லாம் குண்டிகழுவிக்கொண்டு இருந்தாலும் ஜலம் நாற்றமெடுத்திருந்தாலும் “இது மகாதீர்த்தம், இதில் குளியாவிட்டால் யாத்திரையின் பலனே போய்விடு”மென்று ஒருவர் சொல்கிறார். அங்கேயும்குளித்துவியாதியைத் தருவித்துக்கொள்கிறோம். இது நாம் பணம் கொடுத்து நோயைவிலக்கி வாங்கியது, நாம் கொடுக்கமாட்டோம் என்று தெரிந்தால் இவர்கள் கட்டாயப்படுத்தமாட்டார்கள். யார் குளித்தாலென்ன போனாலென்ன வென்று இருந்துவிடுவார்கள் இப்போது கூட பிராமணர்களையும் ஏழைகளையும் இவர்கள் கவனிப்பதில்லை. ஏனெனில் இவர்கள்ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். கோவிலுக்குப் போனாலும் அப்படி தான் நாம் நேரில் பூஜை செய்துவிட்டால் அவர்களுக்கு வரும்படி போய்விடுமென்ற எண்ணத்தால் தான் நீங்கள் இந்த இடத்தை விட்டு சுவாமிக்குப்பக்கம் வரக்கூடாதென்கிறார்கள் நாம் ஒன்றும் கொடுக்கமாட்டோமென்று தெரிந்தால், பட்டர்களுக்கு கோவில் வேலையே இல்லை. இப்போது பிள்ளையார் கோவில் காசிவிசுவநாதர் கோவில் பூரி ஜெகன்னாதம் பண்டரிபுரம் முதலிய இடங்களிலே, அவர்களிருக்கிறார்களா? அந்த இடைஞ்சல் உண்டா? நாமே பகவானுக்குப் பூஜை வகையறா செய்கிறோம். இங்கேயும் அப்படியாய் விட்டால் அவர்களுக்கு வரும்படி போய்விடுமே யென்ற எண்ணத்தால்தான் நம்மை சமீபத்தில்கூட வரக்கூடாதென்று செய்து சிறுமைப்படுத்துகிறார்கள். உண்மையில்கோவில்பட்டரைப்பொருத்தமட்டில்பிராமணன் கோவிலுக்கு வருவதை விடநாம் வருவதைத்தான் விரும்புகிறார்கள். ஏனெனில், பிராமணன் வந்தால் அவர்களுக்குத் தொந்தரவே தவிர வரும்படியில்லை நம்மால் வரும்படியுண்டு. ஆகிலும் நம்மை அடிமைப்படுத்தி வைக்கிறதற்கு பக்கபலத்திற்காகவே பிராமணர்களைப் பட்டர்கள் உபசரிக்கிறது. ஆகையால் இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் நாம் பணத்தைக் கொடுத்து அடிமைத்தனத்தை விலக்கி வாங்கி வருகிறோம்.

யாத்திரைக் காலம்

நமக்கு யாத்திரை செய்யவேணுமென்ற அவா இருந்தால் தொத்து வியாதியில்லாத காலங்களில், ஜனக் கூட்டம் இல்லாத சந்தர்ப்பத்தில் பணம் மீதிப்பட்ட போது அதிக கூட்டங்கள் சேர்க்காமல் ஆடம்பரமான நகை நட்டுகள் இன்றி ஸ்தல யாத்திரை தீர்த்த யாத்திரை செய்வது தான் பொருத்தம். அக்காலங்களில் நதிகளிலோ குளங்களிலோ ஜலம் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் இருந்தாலன்றி இதோ புஷ்பக விமானம் வந்திருக்கிறது இப்போதே மோக்ஷத்திற்கு போகலாம் என்று சொன்னால் கூட அசுத்தமாயிருக்கிற தண்ணீரில், நதிகள் அல்லது தீர்த்தங்களின் பெயர்களைப் பெருமையாக நினைத்து குளிக்காதீர்கள் அங்கே சுங்கம் வாங்குகிற சாஸ்திரிகளுக்கு சங்கற்பப் பிசு கொடுக்காதீர்கள் இஷ்டப்பட்டால்மற்றஏழைகளுக்குத் தர்மம்கொடுப்பது போலவோ இன்னும் கொஞ்சம் விசேஷமாகவோ வேணுமானாலும் கொடுங்கள். அது யாசகமாயிருக்க வேண்டுமே யொழிய, காணிக்கை அல்லது தட்சணையாக இருக்கக்கூடாது. அதேபோல, கோவிலும் அர்ச்சனைக்கென்றும், நைவேத்தியத்திற்கென்றும் காசு வேண்டாம், நீங்கள் செய்கிற அர்ச்சனையால் சாமிக்கு அதிக பிரீதி வரப்போகிறதில்லை. ஒரே காலத்தில் 100-பேருக்கு அர்ச்சனை நடக்கிறது இதில் உங்கள் நட்சத்திரத்தையும் பெயரையும் குறித்துக் கொள்ள சாமியிடம் டைரி இல்லை. நீங்கள் நேராகவே பூஜை செய்வது தான் நியமம். ஆனாலும் அதற்கென்று ஒருவரை ஏற்படுத்தியிருப்பதால் அவர்கள் பூஜை செய்வதாயிருந்தால் நமக்கு ஆக்ஷேபனையில்லை ஆனால் நாமே பூஜை செய்வதை அந்தப்பாத்தியதைக் கொண்டு அவர்கள் தடை செய்யக்கூடாது, தவிர கோவில்களில் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற வித்தியாசம் மரியாதையைப் பொருத்தோ அல்லது இடங்களைப் பொருத்தோ இருக்கக்கூடாது.

உற்சாவதிகள்.

நமது ஆலயங்களில், அநேகமாய் உற்சவ காலங்களில் தான் கூட்டம் அதிகம் உற்சவங்களில் சிலது அவசியமும் ஆதாரமுமற்றதாயிருக்கிறது. ஒரு விஷயத்தைப்படிப்பதில் படம் போட்டு காண்பிப்பது போல் சரித்திரங்களை, உற்சவமூலமாய் தெரிந்துக் கொள்கிறோம். அது சிலர் காசுபறிப்பதற்கென்று உபயோகப்படுத்துவதால் பிற மதத்தினர்கள் நகைப்பதற்கும், அதுபவங்களுக்கு விரோதமாயும் இருக்கிறது. ஒரு சப்பரத்தில் உற்சவ மூர்த்தியை எழுந்தருளச்செய்து நாலு பேர்கள் சுமந்து கொண்டுபோவதை விட்டு பிரமாண்டமான தேரில்வைத்து ஆயிரக்கணக்கான பேர்கள் அடி பிடி என்ற சத்தத்துடன் இழுத்து வீதிச்சந்திலோ அல்லது வீட்டின் பேரிலோ ஏத்திவிட்டு தேர் நிலைக்கு வரவில்லையென்று உற்சவத்தை நீடிக்கச்செய்கிறோம். ஒரு சமயம் இது வாகிலும் பக்த கோடிகள் சுவாமியைக் களைப்படுத்துவதாகச் சொல்லலாம. சுவாமிக்கும் அம்மனுக்கும் கல்யாண உற்சவங்கள் நடைபெறுகிறது கல்யாணம் செய்துவைக்கிறவர்கள் நாம். செய்துக் கொள்ளுபவர் ஆண்டவர். நன்று! நன்று!! இதுவாகிலுமிருக்கட்டும், நாம் தான் 12 வயது அறியாப் பெண்ணை 52 வயதுமாப் பிள்ளைக்குக்கொடுத்து சாந்தி முகூர்த்தமென்ற பெயரால சகலவாத்தியம். சகலவாத்தியம். தன்னே. தன்னே. கதவைப்பூட்டு பூட்டு என்று கொடுமைசெய்கின்றோம். இந்தக் கொடுமையையும் ஆண்டவன் செய்வதாக நினைத்துக்கொண்டு பள்ளியறைக்கு அனுப்புகிறோம். சுவாமி கட்டியிருந்த கௌபீனம் மகாவிசேஷம் என்று 2 அடி அகலம 2 அடி நீளமுள்ள மல்துணிகளை பட்டர்கள் விலைக்கு விற்பதும், பக்தர்கள் வாங்குவதும் எதற்கு? இதனால் எவ்வளவு தூரம் நாம்பிராமணர்களுக்கு அடிமைப்பட்டிருப்பதோடு நமது மத தர்மங்களும் இழிவு படுத்தப்பட்டிருக்கிறதென்பது தெரியலாம். ஆகையால் உற்சவங்கள் அநாவசியமாய் ஏற்பட்டிருக்கிறது. நாமும் இந்த உற்சவ காலங்களில் தான் கோவிலுக்குப்போகிறோம் அதை நிறுத்தவேண்டும். பல இடங்களிலிருந்து உற்சவத்திற்கென்று சில சோம்பேரிகளும் தடியன்களும் வருவதுண்டு. ஒன்றோடொன்று நெருங்கிக்கொண்டிருக்கும்போது சோம்பேரிகள் பெண்கள் போட்டிருக்கிற ஆபரணங்களின் பேரிலும், தடியன்கள் பெண்களைத் தள்ளிக்கொண்டு கைகளில் தொடவும், கண்ணுங்கருத்துமாயிருப்பார்கள். இதனால் பலவிதக்கேடுதல்கள் வரக்கூடும். ஆகையால் உற்சவ காலங்களில் கண்டிப்பாகவே யாத்திரையை அநாவசியமாய்ப் பெருக்கவேண்டாமென்பதும், அதிலும் பெண்மக்களைக் கூட்டிக்கொண்டு போகவேண்டாமென்பதுமே கருத்து, தமிழ் வேதமாகிய குறளில் கூட “தெய்வம் தொழா அள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை” என்றிருப்பதை போதித்தால் உத்தமமான பெண்மணிகள் யாத்திரை செய்யவேண்டுவதில்லையென்றே தெரிகிறது. அது அநுபவத்திலும் க்ஷேமமாகவே இருக்கிறது.

மதுரையும் திருவண்ணாமலையும் வழிகாட்டுகிறது.

மதுரை மகாநாட்டின் தீர்மானப்படி நாம் நமது மதச்சடங்குகளையும் கடவுள் பூஜையும், நமக்கு நாமே செய்ய வேண்டுமேயொழிய பிரத்தியார்களாகிய ஒரு வகைக் கொண்டும் பறபாஷையாகிய நமக்கு அர்த்தமாகாத பாஷைகளைக்கொண்டும் செய்விப்பதும் நம்மையும் நமது பாஷையையும் அடிமைப் படுத்துவதாகுமென்றே நமது சுயமரியாதை வீரர் திரு ஜெ. என். ராமநாதனவர்கள் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்து நடந்துவருகிறார். அவருக்கு ஆண்டவன் அநுக்கிரகம் அவசியம் கிடைக்கும்.

திருவண்ணாமலையில் மற்றொரு வீரர். திரு. கண்ணப்பரும் அத்துறையிலேயே இறங்கியிருக்கலாம். ஆனால் எக்காரணம் பற்றியோ கோர்ட்டு மூலமாய் பரிகாரந் தேடப் போயிருக்கிறார். கோர்ட்டு ஞாயமெல்லாம் சாட்சியங்களையும் மனச்சாட்சியையும் பொருத்து நியாயம் கிடைக்கிறது. இந்தக் கேசு ருஜுவாகி விட்டால் கதவடைத்தது மட்டும் தப்பு என்று ஏற்பட்டிருக்கிறதென்று நமது எதிரிகள் சொல்வார்கள் ஆனால் ஒரு சமயம் ருஜுவாகாவிட்டால், பிராமணரல்லாதார்கள், கோவிலுக்குள் போகக் கூடாதென்று தீர்ப்பாகி விட்டதாகப் பறைசாற்றுவார்கள் அப்போது பாமரஜனங்கள், சரி, சரி, நமக்குப்பூஜை செய்யவும சுவாமிக்கு சமீபத்தில் போகவும் பாத்தியமில்லை. எல்லாம பட்டரைக் கொண்டுதான் ஆக வேண்டும என்று நினைக்க இடமுண்டாகும ஆகையால் திருவண்ணாமலைக்கேசில் சரியானபடி முயற்சியெடுத்து சுயமரியாதையைக் காக்க வேண்டிய பொருப்பு எல்லா பிராமணரல்லாதார் பேரிலும் இருக்கிறது.

முக்கியமான விஷயம்.

நாம் யாத்திரையின் பொருட்டு எவ்வளவு

பார்ப்பன நிருபர்களின் சக்தி.

இந்தியா சட்ட சபையில், சட்ட சபை நடந்து கொண்டிருந்த காலத்தில் சென்னையில் உள்ள "இந்து பத்திரிகைக்கும்," "மெயில் பத்திரிகை"க்கும் ஒரே நிருபர் இருந்து கொண்டு இரண்டு பத்திரிகைக்கும் இரண்டுவிதமான சமாச்சாரத்தை அனுப்பி வந்தாராம். 'இந்து'வுக்கு எழுதும்போது ஒரே கையில், ஒரே பேனாவில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரைப் பற்றி எழுதும்போது ஸ்ரீமான் அய்யங்கார் வந்தவுடன் எல்லோரும் கரகோஷம் செய்தார்கள். அற்புதமாய் பேசினார், வெள்ளைக்காரர்கள் வாயை அடக்கி திக்கு முக்காடவைத்துவிட்டார். புது புது யோசனைகள் வெகு யுக்தி யுக்தியாகப் பேசினாராம், அவரே தலைவர் பதவிக்குத் தகுந்தவர் என்று பேசிக்கொண்டார்கள் என்று எழுதுவதும், அதே கை அதே பேனாவில் 'மெயி'லுக்கு எழுதும் போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் "குரங்கு" குல்லாயுடன் உள்ளே நுழையும்போது எல்லோரும் பரிகாசம் செய்து சிரித்தார்கள் என்றும், இவர்தானா சீனிவாசய்யங்கார்? கொஞ்சமாவது புத்தியில்லையே! சட்ட சபை விதிகள் கூட தெரியவில்லையே, இவர் தலைமை வகித்ததற்குத்தானா? காங்கிரஸ் என்று பெயர் இவரை எப்படி காங்கிரசுக்குத் தலைவராக்கினார்கள். சீனிவாசய்யங்கார் இந்திய சட்டசபைக்கு வாராமலிருந்தாலே அவருக்குக்கொஞ்சம் பெருமை மீதியாயிருக்கலாம் என்றும், இவர்பேசும் போதெல்லாம் சட்ட சபை இவரை பரிகாசம் செய்வதே வேலையென்றும்—எழுதுவதும், அதே கையில் அதேபேனாவில் அசோசியேட் பிரசுக்கு எழுதும்போது அதற்குத்தகுந்த மாதிரி எழுதுவதும் ஆகியவைகளை ஒருவரே செய்வதானால் அது எவ்வளவு ஆச்சரியம்?

தை செலவுசெய்கிறோம் எவ்வளவு வண்டிச் சத்தம் ரயில் சத்தம் கொடுக்கிறோம். போனவிடங்களில், பிரார்த்தனைக்காக கொட்டுகிற தொகை யெவ்வளவு உத்சவம் நடத்துவதற்கும் ஆராதனைகளுக்கும், கொடுக்கும் தொகை யெவ்வளவு ஆடல்பாடல்களுக்கு எவ்வளவு தட்சனை காணிக்கை கப்பங்கள் எவ்வளவு தான தருமங்கள் என்று பிடுங்குவதெவ்வளவு, கட்டளைக்கென்று வாங்குவதெவ்வளவு இந்தத் தொகைகளெல்லாம், யார் கொண்டு போகிறார்கள் யார் அனுபவிக்கிறார்கள். என்பதையும் யார் கொடுக்கிறார்கள் யார் கஷ்டப்படுகிறார்களென்பதையும், ஆர அமர யோசித்தால் நமது தேசமும், நமது மக்களும், தரித்திரத்தில் மூழ்கியிருப்பதற்கு யாத்திரையும் ஒரு பங்கெடுத்துக் கொண்டிருப்பதை அறியலாம். ஆகையால் இனி மேலாவது சர்க்காருக்குக் கொடுக்கிற வரியோடு நின்று கொள்ளவேண்டுமே தவிர. சமுகம் மதம் இதுகளின் பேரால் நமது சுவாமிகளுக்குக் கொடுத்துவருகிற அருகதக் கெட்ட வரியை நிறுத்திவிட வேண்டுவது கிரமந்தான்.

பொதுப் பணம் போகும் வழி.

வங்காளத்தில் கிராமசீர்திருத்தம் என்பதாக தேசபந்து தாஸ் பேரைச் சொல்லி பொது ஜனங்களிடம் நிறைய பணம் வசூலித்து கடசியாக அந்தப் பணத்தை சுயராஜ்ஜியக்கட்சி தேர்தலுக்கு உபயோகப்படுத்திக்கொண்டதாக கோர்ட்டில் விவகாரம் நடக்கிறது. இங்கும் அதுபோலவே குறிப்பிட்ட காரியங்களுக்கென்று ஒதுக்கிவைத்த ரூபாய்களும் வசூலித்த ரூபாய்களும் தேர்தல்களுக்கே செலவாகி வருகிறது. ஆனாலும் இங்கு கோர்ட்டில் வியாஜ்ஜியம் போட ஆளில்லை பின்னையோ மேலும் மேலும் பணம் கொடுக்கத்தான் ஏராளமான சோணகிரிகள் இருக்கிறார்கள்.

செங்குந்த முதலியார் மகாஜனசபை சிக்கல் பொருள் வைத்தசேரி.

இச்சபையின் ஆதரவிலும் வாலிபச்சங்க ஆதரவிலும் பிரபவ வருஷம் சித்திரை மாதம் 16 தேதி (28-4-27) மாலைமணி 6-க்கு கூடிய பெருங் கூட்டத்தில் சிக்கல் உயர் திரு. செ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்து நியாயாயரும் ஜஸ்டிஸ் கட்சியும் என்பதைப்பற்றி பேசியபின் 19-4-27 ல் காலஞ் சென்ற நாகப்பட்டணம் பிரபல மிராசுதாரும் வியாபாரியும் கௌரவ மாஜிஸ்டிரேட்டும் நீலாயதாட்சியம்மன் கோவில் டிரஸ்டியும் செங்குந்தர் குலதிலகருமான கா. காளிமுத்து முதலியார் ஆத்மா சாந்தியடையுமாறு எல்லோரும் எழுந்து பிரார்த்திக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ள அதன்படி பிரார்த்தித்து சங்கத்தின் அநுதாபத்தை இதன் மூலம் அவர்கள் குமாரர் ஸ்ரீமான் கா. கா. நல்லமுத்து முதலியார் அவர்களுக்குத்தெரிவித்துக்கொள்ளுகிறோமென காரிய தரிசி சி. செ. சு. கந்தசாமி முதலியார் அறிவிக்கிறார்

பார்ப்பனியப் புரோகித மொழித்த சடங்கு

மதுரைக்கு அடுத்த ஒத்தக்கடை கிராமத்தில் இருக்கும் கிராமத்தார்கள் முன்னேற்ற சங்கக்காரியதரிசியும், மதுரைக் கோவில் வழக்கின் வாதியுமாகிய நண்பர் எஸ். அருணாசலம் பிள்ளை அவர்களின் தங்கை புஷ்பவதியான ருது மங்கள ஸ்நான தினமாகிய 22-4-27 தேதி வெள்ளிக்கிழமை பார்ப்பனரல்லாத சைவகுருக்களய்யா அவர்களைக்கொண்டு ஷெயார் தங்கையின் ருது மங்களஸ்நானச் சடங்கு நடத்தினார். அதுகாலை சுபா சுப காரியங்களும் பார்ப்பனப் புரோகித பகிஷ்கார அவசியம் என்னும் பொருள்பற்றி வந்திருந்த நண்பர்களுக்குச் சாத்திர ஆராய்ச்சி மூலம் எடுத்துக்காட்டினார்கள். ஷை பொருள் பற்றிய புத்தகம் சென்னை பார்ப்பனீய புரோகித பகிஷ்கார சங்கம் மதுரை கிளையின் மூலம் கூடிய விரைவில் பிரசுரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. எல்லோரும் அவர் வெளியிடப்போகும் புத்தகத்தை யாதரித்து ஊக்கப்படுத்தவேணுமாய் கோருகிறேன். அப்புத்தகத்தின் ஊதிய மனைத்தும் சங்கத்துக்கே சேருமென்றும் தெரியவருகிறது, என ஓர் நிருபர் அறிவிக்கிறார்.

தென்னாற்காடு ஜில்லா பாரஸ்ட் பஞ்சாயத்துக்களின் முதல்வருடமகாநாடு:—22-5-27தேதி ஞாயிற்றுக் கிழமை ஷை பாரஸ்ட்டு பஞ்சாயத்துக்களின் முதல் மகாநாடு கள்ளக்குறிச்சியில் மூடியூர் மிராசுதார் ஸ்ரீமான் ராவ்சஹேப் எஸ். குழந்தை வேலுடையாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். இது சமயம் கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமி பிள்ளை முதலிய பலஅறிஞர்கள் உபந்நியாசம் செய்வார்களென ஸ்ரீமான்கள் வஞ்சாய்எஸ் சட்டமுத்து உடையாரும் இருளக்குறிச்சி என். ஆர். சுப்பராயலு ரெட்டியாரும் அறிவிக்கிறார்கள்.

பார்ப்பனியம் ஒழிந்த சிராத்தம்

திருச்சங்கோட்டிலிருக்கும் பழனி ஸ்ரீமான் பி. கந்தசாமி செட்டியார் தனது தாயார் வருஷாந்திரதிதியை 19-4-27 ல் பார்ப்பனர்களை அறவே நீக்கி, இஷ்ட மித்திரர்களுடன் தன் தாயார் ஆத்மாசாந்தியடைய இறைவனைத் துதித்து குழுமியிருந்த இஷ்டமித்திர பந்துக்களுக்கும், சாதுக்களுக்கும் அன்ன மளித்து திதியைச் சிறப்பாக நடத்தி வைத்தனர், இவ்வூரில் முதன்முதல் நடந்த பார்ப்பனியமொழித்த திதி இதுதான் என திருச்செங்கோடு ஸ்ரீமான் எஸ். கே. வரதராஜுலு அறிவிக்கிறார்.

ஸ்ரீமத் இராமநுஜர் சாற்றுமுறை மஹோற்சம்

ஸ்ரீயப்பதியாய் அவாப்தசமஸ்தகாமனாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனாய் நித்யமுக்தாநுபாவ்யனான ஸர்வேஸ்வரன் ஸகலசேதனோஜ்ஜீவனார்த்தமாக திருவனந்தாழ்வானை கடாக்ஷித்தருள அவன் திருவுள்ளப்படி பூதபுரியில் அருளார்ந்த ஆசூரி கேசவ சோமயாஜி என்பவர்க்கு திருக்குமாரராய் அவதரித்து ஜகதாசார்யராய் உபயவிபூதி நாயகராய் யெழுந்தருளின அஸ்மத்ஸ்வாமி எம்பெருமானாருக்கு இரங்கூன் பூந்தட்டான் 59-வது வீதி 18, 19-வது எண்ணுள்ள இடத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீமத் இரங்கோன் இராமாநுஜ விசிஷ்டாத்வைத விஷ்டாசார ஸம்பிரதாய ஸபையில் நிகழும் பிரபவ௵ சித்திரை௴ 15உக்குச் சரியான இங்கிலீஷ் 1927-௵ எப்பரல் ௴ 27 புதன்கிழமை துடங்கி 10 நாள்களும் மாலை 5-மணி முதல் 8 மணி வரையில் உற்சவம்கண்டருளுவித்து ஷை சித்திரை௴ 24-௳ சனிவாரமன்று வசந்தோற்சவமும் பரிபாலிக்கப்படுமாகையால் இதைக் கண்ணுறும் பாகவதர்களும் பக்த சீலர்களும் பிரதி தினமும் எழுந்தருளி சேவைசாதித்து மேற்படி மஹோற்சவத்தை தலைக்கட்டி வைப்பதுடன் நம் இராமநுஜரை மங்களசாசனம் செய்யும்படி மிக்க பக்தி வினயத்துடன் பிரார்த்திக்கின்றேன் என சபையார் உத்திரவின்படி காரியதரிசி ஸ்ரீமான் ஆ. மு. பிள்ளை அறிவிக்கிறார்.

தென்னிந்திய ஆதி திராவிட வைதீக சமாஜத்தின் 5வது வருடபூர்த்திவிழா:—மே மாதம் 15-தேதி கொழும்பு பப்ளிக்ஹாலில் ஸ்ரீமத் சுவாமி ஸஹஜானந்தம் M. L. C. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் தென் இந்திய ஆதிதிராவிட வைதீக சமாஜத்தின் 5வது வருடபூர்த்திவிழா நடைபெறும் ஒவ்வொரு குலமத அபிமானிகளும் தவறாமல் விஜயம் செய்யுமாறு ஷை சமாஜத்தின் கொரவகாரிய தரிசி ஸ்ரீமான் சி. சு. ஆறுமுகம் அறிவிக்கிறார்.

அறிவிப்பு.

ஆபீஸ் சம்பந்தப்பட்ட கடிதப்போக்குவரத்துகள் காரியஸ்தர் குடி அரசு ஆபீஸ் என்று எழுதி அனுப்ப வேண்டும்.

மணியார்டர் மூலமாகவோ அல்லது இன்ஷியூர் மூலமாகவோ அனுப்பப்படும் பணமோ அல்லது செக்கோ, மானேஜர், "குடி அரசு" ஈரோடு என்று அனுப்பப்பட வேண்டும்.

பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர் தயவு செய்து கடுதாசியின் ஒரே பக்கத்தில் இங்கியில் எழுதி ஆசிரியர், "குடி அரசு" ஈரோடு என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திராதிபர்,
"குடி அரசு" ஈரோடு.

நல்ல சமயம்! நல்ல சமயம்!!

தற்கால நாகரீகத்திற்கேற்ற வியாபார நடை, தொழில் நடைகளுக்கு அத்தியாவசியமான ஆங்கிலம் கற்கவேண்டுமா?

தபால் மூலம்
ஐந்தே மாதம் ஐந்தே ரூபாய்

கடந்த 7 வருஷகாலமாய் நேரில் ரூ 25க்கு கற்றுக் கொடுக்கப்பட்ட 5 மாத இங்கிலீஷ் கோர்ஸை இப்போது தபால்மூலம் தமிழ் தெரிந்த எவரும் ரூ 5 க்குக் கற்றுக்கொள்ளலாம். அநேக வியாபாரிகளும், கல்வி இலாகாத் தலைவர்களும் நற்சாட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். பிராஸ்பக்டெஸுக்கு உடனே எழுதுங்கள்.

பிரின்சிபல்
காம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

தாய்மார்கள்
கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இனாம்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

பிரபவ ஆண்டு
சுயமரியாதைக் காலெண்டர்.

ஏற்கனவே நாம் கமிட்டியின் சார்பாய் விளம்பரம் செய்திருந்தபடி காலண்டர்கள் மிக்க அழகாக மூன்று கலர்களில், சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றி நமக்குக்கிடைத்து விட்டன. 31—3—27 க்குள் நமக்கு கிடைத்த ஆர்டர்களுக்குகெல்லாம் வி. பி. யில் அனுப்பி விட்டோம். இன்னும் சில நூற்றுக்கணக்கான காலண்டர்களே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே ஆர்டர் செய்ய வேண்டும். வருகிற ஆர்டர்களுக்கு உடனே வி. பி. யில் அனுப்பி விடுவோம். காலண்டர்கள் ஆர்டர் செய்பவர்களுக்குக்கிடைக்காவிடில் "செலவாய் விட்டது" என்று தெரிந்துகொள்ளவேண்டும் பதிலறிய விரும்புவோர். தபாற் பில்லை அனுப்பவேண்டும் சென்னை சோல்டன் கம்பனியார் மிக்க அவசரமாக அச்சியற்றிக் கொடுத்தமைக்காக நன்றி செலுத்துகிறோம் காலண்டர்கள் தமிழ் மாதங்கள் பனிரெண்டுக்கும் பனிரெண்டு தாள்களுடனும் மேல் அட்டையுடனும் திரு. வைக்கம் வீரமூர்த்திகளின் 5 அங்குல உயர திருவுருவத்துடனும், பிரிட்டானிய, பிராமணிய ஆதிக்கங்களை ஒடுக்கும் அருமையான 12 சொற்களுடனும், 52 சுயமரியாதை வாக்கியங்களுடனும், பெரிய சைசில் மிக்க அழகாக அமைந்திருக்கின்றன. நமக்கு அணா 0—5—0 அடங்குகிறது பிரசாரத்தின் நோக்கமாக அணா 0—2—0 க்கே அனுப்பி வருகிறோம். உடனே எழுத வேண்டும் பின்னால் ஏமாற்றமடையாதிருக்க எச்சரிகை செய்கின்றோம்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணி வாசகத்தமிழகம்" திருச்சி.

ஸ்வராஜ்யத்தைப்பற்றி மகாத்மா.

காந்தி என்ன சொல்கிறார் என்று அறிய வேண்டுமானால் "வியாசக் கோவை" என்ற நூலை உடனே படியுங்கள். இதில் தேசாபிமானத்தைப்பற்றி பல அரிய ரஸமான விஷயங்கள் காணப்படும். தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஹிந்து முஸ்லீம்களுக்கும் இந்நூல் மிகவும் அவசியம். டாக்டர் பி வரத ராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1.

சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன.

வ. மி. ஷம்சுதீன் சாஹிப்,
(ஆக்கியோன்)
தபாற் பெட்டி நெ. 339.
கொழும்பு.

ஓர் சிறந்த அன்ன சிரார்த்தம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா நாட்சியார் பட்டி என்னும் கிராமத்தில் பலிஜ கௌரவர் குலம் வகித்த டாக்டர் ஸ்ரீமான் ராஜகோபால் செட்டியார் அவர்கள் சென்ற 25-4-27 தேதி திங்கள் கிழமை தன் பிதாவின் வருஷாந்திர சிரார்த்தத்தை அன்று ஆமை சிரார்த்தமாகப்பார்ப்பனருக்கு செய்து வந்த வழக்கத்தை மறுத்து அன்னசிரார்த்தமாக பிரம்ம பிச்சியார்த்தத்தை அறிந்தஅனுபவ பிரம்ம மூர்த்திகள்சகிதமும், தனது ஸ்ரீ வைணவ நண்பர்களுடனும், பல ஏழைகளுடனும் அன்ன சிரார்த்தமாக சிறப்புடன் நடத்தி வித்தார் என ஸ்ரீமான் நா. கி. கோபால்சாமி நாயுடு அறிவிக்கிறார்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

நமது பெற்றோர் ஏற்றுக் கொள்வாரா? அன்று பெற்றோரும் நாமும் அறியாத வேறுமொழியில் நமக்காக இன்னொருவன் சொல்வதை நமது பெற்றோர் ஏற்றுக்கொள்வாரா? அன்பர் ஆராய்க; ஆராய்க.

சிரார்த்த தினத்தன்று நமது பார்ப்பன நண்பரையும் அழைத்து அவருக்கும் உணவளித்து உண்டு மகிழ்வோம். பார்ப்பனன் புரோகித முறையில் நம்மை ஏமாற்றிப்பதார்த்தங்கள் பறித்துக் கொண்டு போவதற்கு மட்டும் இடங்கொடுக்க மாட்டோம். நட்பின் முறையில் வந்து உண்டு கூடட்டும்,குலாவட்டும், பார்ப்பனர் தாம் சிரார்த்தந்தன்று நமக்குத் தண்ணீர் கொடுத்தாலே பெரும்பாவமென்று நம்மவர் யார் போயினும் நாக்கு வறண்டு உயிர் போவதாயிருப்பினும் தண்ணீர் கொடுக்கமாட்டார். இங்ஙனமே நூல்களிலும் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்னும் காணலாம். நாமோ அப்படியன்று நமக்குத்தண்ணீர் கொடுத்தால் பாவம் என்போர்க்கு நாம் உணவளித்ததுப் புண்ணியம் செய்வோம் இதனால் நாம் பார்ப்பனரை வேண்டுமென்று விரும்புகின்றோம்! பார்ப்பனர் நம்மை வேண்டுமென்கின்றனரா? இங்ஙனம்சொல்வதைப் பார்ப்பன விரோதம் என்கின்றனர். நமக்குப் பார்ப்பனர் மாட்டும் பகையில்லை யார் மாட்டும் பகைமையில்லை. நாம் சமத்துவத்தை வேண்டுகின்றோம் சகோதரத்துவத்தை வேண்டுகின்றோம் நமது சுய காரியம் நமே செய்யவேண்டுமென்கின்றோம் சுய மதிப்பை வேண்டுகின்றோம். சிரார்த்தம் முதலிய சடங்குகளை நாமும் நம்மவரைக்கொண்டும் செய்து சுயமதிப்பைப்பெறல் வேண்டும்.

சுயபுரோகிதச் சிரார்த்தம்

பல்லடம் தாலூகா அனுப்பப்பட்டி மெத்தை வீட்டு ஸ்ரீமான் அப்ப நாயக்சர் தனது தகப்பனாரின் சிரார்த்தம் 26-4-27-ந் தேதி யன்று தானே புரோகிதராக இருந்து முடித்தார். ஓர் வீட்டைத் தூய்மை செய்து ஓரிடம் கடவுள் வைத்து வீட்டில் சமைத்திருந்த பாதார்த்தவகைகளை அக்கடவுளின் முன்னர் பரிமாறி தனக்கியன்ற தோத்திரப்பாடல்களால் கடவுளையும் பெற்றோரையும் வேண்டிப் பிரார்த்திக்கொண்டார். அப்பொழுது ஒண்டிப் புதூர் பாகவதர் தபால் ரங்கசாமிநாயுடுவும் அவர் குமாரர் அ. சி. ராமநுஜுலு நாயுடுவும் மற்றவரும் பிரபந்தத்தில் திருப் பல்லாண்டு திருப்பாவை முதலியவற்றைச் சேவித்தார்கள். அன்று புரோகிதத்திற்காக வந்த பார்ப்பனனும் இங்ஙனம் சுய புரோகித சிரார்த்தம் நடைபெறுவதைக் கண்டு முடியும் வரை இருந்து போயினன் இச் சிரார்த்தம் அவ்வில்லத்திலுள்ளவரால் மிக்க அன்புடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்பெற்றது. ஊராரும் மகிழ்வுற்றனர். இங்ஙனம் கண்ணிற் கண்டோன்.

பூளைமேடு:—வெகு சிறப்பாக நடை பெற்று வரும் இவ்வூர் கல்வி ஸ்தாபனத்தைக் கண்டு களிக்கும் பொருட்டு பிரதம மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஸ்ரீமான் வி. சி. வெள்ளிங்கிரிக் கவுண்டர் அவர்களுடன் 24-4-27 தேதி இங்கு விஜயம் செய்தார்கள். அது போழ்து ஸ்ரீமான்கள் பி. எஸ். ஜி. வெங்கிடசாமி நாயுடு பி. எஸ். வேணுகோபால்சாமி நாயுடு, ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார் ஆகியவர்கள் மந்திரியை எதிர்கொண்டு வரவேற்றுப் பள்ளிக்கு அழைத்து வந்தனர். பள்ளியைப்பார்வையிட்டபின்னர் ஸ்ரீமான் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி அருந்தி விட்டு மந்திரியார் கோவை சென்றனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்

குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பபபடும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரிபார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தாத் தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலிலேயே தயார் செய்யப்பட்டது

விலை நயமானது — சரக்குமேலானது

Trade  **Mark**

Registeder.

28 இஞ்சு டஜன்1க்கு 7--14—9
30 „ 8—4—0
32 இஞ்சு டஜன் 1க்கு 8—10—0
34 „ 9—0—0

உங்களுக்கு வேண்டியசுத்தக்கதர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதா வென்று கவனித்து வாங்கவும்.

M. V. கருப்பண்ண செட்டியார்,
கத்தர் பனியன் வொர்க்ஸ், திருப்பூர். (தென் இந்தியா)

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பேனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ௗ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதிதர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1-வது பிரைஸ் ரூ. 3000, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வவது பிரைஸ் ரூ. 1000 4வது பிரேஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸ்க்கு ரூ. 500, ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ. 20ல் 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ. 1000, ரூ. 5ல் 200க்கு ரூ. 1000, ரூ. 3ல் 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ் 3381க்கு ரூ. 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ. 1800. தனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்குரூ. 9000 ஆக ரூ. 33000.

1. (4—5—1927) பிரபவ-ௗ சித்திரை-மீ 22-உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மிதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ சு. ஆ. முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சு. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.